
இதழ் 57-59 மார்ச்-மே/2016 விலை: 100.00

எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

Aasiriyam pedagogy

# ஆசிரியம்

ආසිරියම්




கற்பித்தல் - கற்றல் சட்டகம்

## யுத்தம்-கல்வி-மாணவர்கள்-பொதுப்பரீட்சைகள்

■ ஆ. நித்திலவர்ணன்


## பரிகாரக் கற்பித்தல் முறை


■ தே. முகுந்தன்


## புதிய சம்பளச் சுற்றறிக்கை

■ அன்பு ஜவஹர்ஷா

# பத்மம் பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்










யூ.ஜி.50 பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு–11
தொ.பே: 011–2472362 தொ.ந: 011–2448624
மின்னஞ்சல் : chemamadu@yahoo.com
இணையம் : www.chemamadu.com

மார்ச்-மே-2016 | இதழ் : 57-59

# உள்ளே...


◈ புதிய சம்பளச் சுற்றறிக்கை
அன்பு ஜவஹர்ஷா - 5

◈ உளவளத்துணை என்பது ஓர் இறக்குமதிப் பொருளா?
சபா.ஜெயராசா - 15

◈ பாடசாலையில் மாணவர் வேண்டுவது
ம.மாசிலாமணி - 19

◈ வகுப்பறையிலிருந்து வாழ்க்கைக்கு
க.சுவர்ணராஜா- 24

◈ வெளிவாரி மேற்பார்வை
கி.புண்ணியமூர்த்தி - 30

◈ அண்மையிலுள்ள பாடசாலை
எஸ்.எம்.மன்சூர் - 41

◈ பரிகாரக் கற்பித்தல்முறை
தே.முகுந்தன்- 45

◈ யுத்தம் - கல்வி - மாணவர்கள் - பொதுப்பரீட்சைகள்
நித்திலவர்ணன் - 52


"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

ISSN:2021-9041


**தொடர்புகளுக்கு:**

தெ.மதுசூதனன்

077 1381747 / 011 2366309/ 021 2227147

காசுபதி நடராஜா - 077 3247132

மர்சூம் மௌலானா - 077 4747235

அ.ஸ்ரீகாந்தலட்சுமி - 0777 286211

**படைப்புகள் அனுப்ப:**

*aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*

**பணம் அனுப்ப:**

Chemamadu book centre - BOC Bank
A/C- NO :8081150

Chemamadu book centre - COM Bank
A/C-NO:1120017031

ISSN 2021-9041

# ஆசிரியம்

இதழ்
57-59

**ஆசிரியர்:**
தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள்:**
அ.ஸ்ரீகாந்தலட்சுமி
எம்.என்.மர்சூம் மௌலானா, காசுபதி நடராசா

**ஆசிரியர் குழு:**
பேரா.க.சின்னத்தம்பி, பேரா.சபா.ஜெயராசா
பேரா.சோ.சந்திரசேகரன்

**சிறப்பு ஆலோசகர்:**
அன்பு ஜவஹர்ஷா

**ஆலோசகர் குழு:**
பேரா.மா.கருணாநிதி,
பேரா.மா.செல்வராஜா, பேரா.தை.தனராஜ்,

**நிர்வாக ஆசிரியர்:**
சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு:**
வை.கோமளா

**Printed by: cbc press**
Tel : 0777 345 666

**தொடர்புகளுக்கு:**
**"Aasiriyam"** 180/1/50 People's Park, Colombo -11,Tel: 011-2331475
E-mail : aasiriyam@gmail.com, Web:www.chemamadu.com/aasiriyam.aspx

ஆசிரியரிடமிருந்து....

**கல்விப்புலம் - மேற்பார்வை :**
**சில சிந்தனைகள்**

கடந்த இதழ் பரவலாக வாசிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில கட்டுரைகள் மீதான தங்கள் கருத்துக்களை பலர் பகிர்ந்து கொண்டார்கள். அந்த வகையில் நமக்கு மகிழ்ச்சிதான். தமிழாகரன் எழுதிய கட்டுரை போன்று இன்னும் பல கட்டுரைகள் தொடர்ந்து வெளிவர வேண்டுமென்ற ஆலோசனையையும் சிலர் முன்வைத்துள்ளனர்.

குறிப்பாக கல்வித்தலைமைத்துவம், கல்வித்திட்டமிடல், கல்வி முகாமைத்துவம், கல்விநுட்பவியல், கல்விஉளவியல் தொடர்பில் மரபு ரீதியான கட்டுரைகள் தவிர்க்கப்பட்டு மாற்றுச்சிந்தனைக்கும் மாற்றுச் செயற்பாட்டுக்கும் உரிய சிந்தனைக் கிளர்வுக் கட்டுரைகள் அதிகம் வெளிவரவேண்டுமென்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை நிச்சயம் வரவேற்கப்பட வேண்டும்.

விமரிசனச் சிந்தனை படைப்பாக்கத் திறனுடன் இணைக்கப்பட்டு ஒரு புலமைப் பயிற்சியாக கையளிக்கப்பட வேண்டும் என்பதனை நாமும் தெளிவாக உணர்ந்துதான் உள்ளோம். அதற்கான முயற்சியில்தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம். நமக்கான எதிர்காலம் நம்பிக்கை வீழ்ச்சியையும் அதிகத் தளம்பல் நிலைகளையும் கொண்டுள்ளன. இந்நிலையில் கல்விக் கொள்கை உருவாக்கமும், கல்வித் திட்டமிடற் செயன்முறையும் மிகுந்த நிதானத்துடனும் ஊன்றிய கவனத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது.

ஆனால் இன்றைய கல்விப்புல நிலைமைகள் அப்படி அல்ல. பலவேறு சிக்கற்பாடுகளையும் முரண்களையும் கொண்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் அந்தப் பதவி வழியிலிருந்து இயங்குவதற்கான அறிவு, ஆற்றல், ஆளுமை மற்றும் சமூகநோக்கு எதுவும் இல்லாதவர்களாக உள்ளனர். இதற்கு அமைச்சு, மாகாண, வலய, கோட்ட மட்டங்களில் இயங்குபவர்களை சுட்டிக்காட்டலாம். உதாரணமாக தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள வலயப் பணிப்பாளர்களின் பணிகளே நோக்க முடியும். இங்கு பெரும்பாலானோர் பதவிவழி தகுதியானவர்கள். ஆனால் கல்வி நிருவாக முகாமையாளர்களாக இயங்குவதற்கான தகுதியற்றவர்களாக உள்ளனர். இவர்கள் கல்வித் தலைமைத்துவ பண்புகளின் மொத்த வடிவமான உள்ளாற்றல்களை வெளிப்படுத்துவதில் பின்தங்கி உள்ளனர்.

கல்வியானது மனித மேம்பாட்டையும் சமூக உருவாக்கத்தையும் உடனடி இலக்காக மட்டுமன்றி நீண்டகால நோக்காகவும் கொண்டுள்ளது. ஒவ்வொரு கணமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றத்தோடு முன்னேற்றத்தை இட்டுச் செல்லும் தலைமைத்துவ நடவடிக்கைகளை கல்வி வேண்டி நிற்கின்றது. ஆனால் இந்தப் புரிதல், விளக்கம் எதுவுமற்று (கல்வி)

அதிகாரிகள் உருவாக்கப்பட்டுள்ளனர். காலனித்துவ அதிகாரத்துவத்தின் புதிய வடிவமாகவும் இவர்கள் இயங்குகின்றனர். கல்விப்புலத்தில் அடிமைகளை உருவாக்கவே விளைகின்றனர்.

இவர்கள் கல்வி நோக்கங்களுக்கேற்ப சமூக எதிர்பார்ப்புக்களுக்கேற்ப திட்டங்களை உருவாக்கும் நிலையில் இல்லை. புதிய அறைகூவல்களுக்கு முகங்கொடுக்கக்கூடியவாறு வளங்களை ஒன்றிணைத்து புதுமை செய்யும் ஆக்கமலர்ச்சிச் சிந்தனையை கல்வித் திட்டமிடல் உள்ளடக்கி நிற்கின்றது. அதேவேளை இலக்கு நோக்கிய செயற்பாடாகவும் முன்னெடுக்கப்படுகின்றது. பல்வேறு மாற்று வழிகளைப் பரீசிலிக்கும் நடவடிக்கையாகவும் கல்வித் திட்டமிடல் அமையும். பல்வேறு பரிமாணங்களை ஒன்றிணைத்து இலக்கு நோக்கி நகர வைக்கும் நடவடிக்கை கல்வித் திட்டமிடலிலே முனைப்புடன் மேற்கொள்ளப்படும்.

ஆனால் அமைச்சு, மாகாண, வலய, கோட்ட மட்டங்களில் உள்ள வெளிவாரி மேற்பார்வையின் அடிப்படைகள் இன்று விமர்சனத்துக்கு உட்பட்டது. அதாவது அறிவும் புலமையும் மேலோங்கும் பண்பற்றவர்கள் தான் இந்த மேற்பார்வையில் ஈடுபடுகின்றனர். கல்விசார்ந்த மேற்பார்வையில் ஈடுபடுவோர் கல்வியியல் புலமையை வளர்த்துக்கொள்ளல் முக்கியமாகும். புலமை இன்றி வெறுமனே அதிகாரத்தைச் சூடியவண்ணம் கல்வி மேற்பார்வை செய்ய முடியாது. ஆனால் நடப்பு எதார்த்தம் கல்விப் புலமையின்றி அதிகாரத்தைச் சூடிய ஆதிக்கவர்க்கம் மேலாட்சி பெற்றுள்ளது என்பதனை அடையாளம் காட்டுகின்றது. இதனால் இவர்களை கல்வி மேற்பார்வை ஆசிரியத்துவ வாண்மை சார்ந்தது என்னும் புரிதலுக்கு மாறாகச் செயற்பட தூண்டுகின்றது.

கல்வி மேற்பார்வை என்ற போர்வையில் ஆசிரியர்களை அடக்கி ஆள்கின்றனர். பிழையான கருத்துக்கள், நடைமுறைகள் மூலம் ஒருவகையான திணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. எவரிடமும் பொறுமையும், நிதானமும் அறவே இல்லாமல் உள்ளது. பொருத்தமானவர்களிடத்து பொருத்தமான வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளனவா? என்பதை உறுதிப்படுத்துவதும் மேற்பார்வையாளரின் பணியாகின்றது. இதனை உறுதிப்படுத்த மேற்பார்வையாளருக்கு விசேட பண்புகள் இருக்க வேண்டும்.

அதாவது கல்விசார்ந்த மேற்பார்வையில் ஈடுபடுவோர் சமகாலத்தின் அறிவின் எழுநிலைகள் பற்றி அறிந்தவராய் இருத்தல் முக்கியம். இவர் தமது அறிவைத் தொடர்ந்து இற்றைப்படுத்திய வண்ணம் இருத்தல் வேண்டும். எவரும் காலாவதியான நிலையில் நின்று கல்விச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய முடியாது. வாண்மை அறிவு, தொழில்நுட்ப அறிவு இவற்றின் பிரயோகம் எப்பொழுதும் பொருத்தப்பாடுடையதாக அமைய வேண்டும். குறிப்பாக தொடர்பாடல் திறன், மொழிவழிக் கையளிப்பு எவருக்கும் சாதகமாக இருக்க வேண்டும். எப்போதும் செவிமடுத்தல் திறன், உசாவல் விருப்பு, நினைவுபடுத்தும் திறன், தொடர்புபடுத்தும் ஆற்றல் உள்ளிட்டவை இறுக்கமற்றும் பொருத்தமாகவும் ஆரோக்கியமாகவும் அமைய வேண்டும்.

தெ.மதுசூதனன்

# புதிய சம்பளச் சுற்றறிக்கையில் ஆசிரியர்களின் சம்பளங்களை

✸ அன்பு ஜவஹர்ஷா

2015.12.31 வரை அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை விட கணிசமான அளவு பல்வேறு படிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இடைக்காலப்படி, விசேட படி, வாழ்க்கை செலவுப்படி இப்படி வழங்கும் படிகள் ஆரம்ப மட்ட ஊழியர்களைப் பொருத்தவரையில் சம்பளத்தின் இரு மடங்காக உள்ளது.

கடன்பெறல், ஓய்வூதியம் பெறல் போன்ற தேவைகளுக்கு இதனால் எந்தப் பயனும் இல்லாதபடியால் இந்தப்படிகளை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்க வேண்டும் என்பதே தொழில் சங்கங்களின் பலமான கோரிக்கையாக இருந்தது. இரண்டு பிரதான தேர்தல் அணிகளும் அரசாங்க ஊழியர்களுக்கு வாக்குறுதி அளித்தபடியால் அரசாங்க ஊழியர்களின் வாக்குகளை அதிகம் பெற்று ஆட்சியில் உள்ள நல்லாட்சி அரசு என்று சொல்லப்படுகின்ற அரசால் இதை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு உண்டாயிற்று.

அடிப்படைச் சம்பளத்துடன் 10,000 ரூபா இடைக்காலம் படியையும் 20 வீத விசேட படியையும் சேர்த்து ஐந்து கட்டங்களாக இதை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டமைக்கு அமையவே அரசாங்க ஊழியர்களுக்கான புதிய சுற்றறிக்கையான 03/2016 இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 2016.02.25 அன்று வெளியிடப்பட்டது. தற்போதுள்ள 7800 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி தவிர்ந்த இடைக்காலப்படியும், விசேட படியும் 2016.01.01 தொடக்கம் 2017,2018, 2019, 2020 என்று ஐந்து படிமுறைகளாக அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படுகின்றது. 2020.01.01 திகதியன்று இன்று பெறும் அடிப்படைச் சம்பளமானது இரண்டு மடங்குகளுக்கு மெல் அதிகரிப்பது யதார்த்தமானதாக இருந்தாலும் இந்த அதிகரிப்புக்குள் 10,000 ரூபா இடைக்காலப் படியும் 20 வீத விசேட படியும் அடங்குவதால் அதைக் கழித்தே கையில் கிடைக்கும் தொகையைக் கணக்குப் பார்க்க வேண்டும்.

36 வகையான அரசாங்க சேவையாளர்களுக்கு புதிய சம்பளத் திட்டமொன்று 2016.01.01 முதல் அமுலாகின்றத. இது தொடர்பாக சகல அறிவுறுத்தல்களையும் அட்டவணைகளையும் கொண்ட 126 பக்கங்கள் கொண்ட சுற்றறிக்கைதான் 03/2016 இலக்கச் சுற்றறிக்கையாகும். 2016, 2017,

கட்டுரையாளர்
ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியத்துவம் கல்வி சார்ந்து பல்வேறு கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வருபவர்.

2018 ஆம் ஆண்டு களில் அரசாங்க ஊழியர்களுக்கு கையில் கிடைக்கும் தொகை பெரிதளவு அதிகரிக்கப்படாவிட்டாலும் 2020.01.01 திகதியே இதன் முழுமையான பலன் அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கவுள்ளது. 2016.01.01க்கு பின்னர் ஓய்வுபெறும் அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியமானது கணிசமானளவு அதிகரிப்பதே இதன் சிறப்பு அம்சமாகும்.

2015.12.31 அன்று அடிப்படைச் சம்பளமாக 15,000 ரூபாவையும் 10,000 ரூபா இடைக்காலப் படியையும் 20 வீத விசேட படி. 3000 ரூபாவையும் சேர்த்து 7,800ரூபா வாழ்க்கைச் செலவுப்படி இல்லாது 28,000 ரூபா பெற்றுக் கொண்டு இருக்கும் கல்விக் கல்லூரியில் டிப்ளோமா பெற்ற ஆசிரியருக்கு 2016.01.01 அன்று இதே சுற்றறிக்கையின்படி அதே சம்பளமே கிடைக்கும். ஆனால் 2020.01.91 இவருக்குரிய அடிப்படைச் சம்பளமான 31,060 ரூபாவுக்கு இன்று அடிப்படைச் சம்பளமாக 15,000 ரூபாவுக்கும் கிடைக்கும் வித்தியாசம் அதாவது 15060 ரூபா பெற்று சம பங்குகளாகப் பிரிக்கப்பட்டு 3212 ரூபா என்ற வகையில் வருடா வருடம் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படுகின்றது. படிகளில் இது குறைக்கப்படுவதால் சம்பள அதிகரிப்பு இருக்காது. ஆனால் அடிப்படைச் சம்பளம் வருடா வருடம் 3212 ரூபா அதிகரித்துக் கொண்டு போகும்.

வருடாந்தச் சம்பள ஏற்றங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் ஐந்து வருடாந்த சம்பள ஏற்றங்களையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால் 2020.01.01 இவரது அடிப்படைச் சம்பளம் 32,645 ரூபா ஆகின்றது. இதன்படி மொத்த அதிகரிப்பு 4,645 ரூபா 2020.01.01 பின் கிடைக்கவுள்ளது.

இதே போல இன்று 31425 ரூபாவை அடிப்படைச் சம்பளத்தோடு மேற்சொல்லப்பட்ட படிகளுடன் 47,710 ரூபா சம்பளம் பெறும் முதலாம் வகுப்பு ஆசிரியரைப் பார்த்தால் இவர் 2020.01.01க்குப் பின்னர் வருடாந்த சம்பள ஏற்றம் 71,650 ரூபா அடிப்படைச் சம்பளத்தைப் பெறவுள்ளார். இவரது மொத்த அதிகரிப்பு 23,940 ரூபா ஆகும். பழைய சம்பளத்துடன் வருடாந்தச் சம்பள ஏற்றத்தையும் சேர்த்துப் பார்த்தால் 20,070 ரூபா அதிகரிப்புள்ளது. இந்த ஆக்கத்தில் உள்ள 2016, 2017, 2018, 2019, 2020 ஆகிய வருடங்களில் எப்படிக் கிடைக்கும் என்ற அட்டவணையைப் பார்த்தால் இதை விளங்கிக் கொள்ளலாம்.

இரண்டு உதாரணங்களை மட்டுமே இங்கு காட்டியுள்ளேன். வருடாந்த சம்பள ஏற்றங்களும் இரண்டு மடங்குகளுக்கு மேல் அதிகரிப்பதால் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் சிறு சிறு அதிகரிப்புக்களும் உண்டு. சேவை மூப்புள்ள ஆசிரியர்களுக்கு 2018ஆம் ஆண்டு தொடக்கமே இந்த சம்பள அதிகரிப்பின் நன்மை கையில் கிடைக்கும் தொகையை பொறுத்து விளங்கத் தொடங்கும்.

இந்த சுற்றறிக்கை வந்த தினம் முதலே எனது முகநூலிலும் தினக்குரல் தினசரியிலும் இவை பற்றிய சகல விபரங்களையும் பதிந்து விட்டேன் ஆசிரியம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வருவதால் ஆவணமாகப் பேணி கணக்குப் பார்க்கும் வகையில் ஆசிரியர்களுக்கு தேவையான அட்டவணைகளை இங்கு சேர்த்துள்ளேன்.

இந்த அட்டவணையை கொண்டு கணக்குப் பார்க்கும் போது 2016 தொடக்கம் வருடாந்த சம்பள ஏற்றம் கிடைப்பதால் பின்வரும் 2-I தர ஆசிரியர் ஒருவரின் உதாரணத்தை வைத்தே அடுத்த அடுத்த படிகளில் கணக்குப் பார்க்க வேண்டும். இவருக்கு 2016.03.01 அன்று வருடாந்த சம்பள ஏற்றம் கிடைக்கின்றது என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

| திகதி | சம்பளம் | படி | மொத்தம் |
|---|---|---|---|
| 2015.12.31 | 21,750/- | 14,350/- | 36,100/- |
| 2016.01.01 | 26,390/- | 9710/- | 36,100/- |
| 2016.03.01 | 26,875/- | 9705/- | 36,580/- |
| 2017.01.01 | 31,600/- | 4,980/- | 36,580/- |
| 2017.03.01 | 32,170/- | 4,890/- | 37,060/- |
| 2018.01.01 | 36,980/- | 80/- | 37,060/- |
| 2018.03.01 | 37,635/- | - | 37,635/- |
| 2019.01.01 | 42,530/- | - | 42,530/- |
| 2019.03.01 | 43,270/- | - | 43,270/- |
| 2020.01.01 | 48,250/- | - | 48,250/- |
| 2020.03.01 | 49,075/- | - | 49,075/- |

இந்த உதாரணத்தைப் பார்த்தால் 2019.01.01 அன்றே மனங்கவரத்தக்க அதிகரிப்பு கிடைப்பதாக காணலாம். 2015.12.31க்குப் பின்னர் அடிப்படைச் சம்பளம் அதிகரிப்பதால் குறையும் படிகள் சீராக்கல்படி என்ற வகையில் தனியாக சம்பளத்தோடு சேர்த்து வழங்கப்படும் இது 2018 அளவில் இல்லாமல் போவதைக் காணலாம். 2018 வரை கையில் பெரிதாக அதிகரிப்பு கிடைக்காமையால் சலித்துக்கொள்ளும் அரசாங்க ஊழியர்கள் 2019க்குப் பின்னரும் 2016.01.01 தொடக்கம் ஓய்வு பெறும் போதுமே இதன் நன்மைகளை விளங்கிக் கொள்வார்கள்.

சம்பளங்களை மாற்றியமைக்கும் போது 1:4.05 என்ற வாய்ப்பாட்டைப் பேண வேண்டியிருப்பதால் ஆரம்ப மட்ட அரசாங்க ஊழியர்களை விட இடைநிலை, மேல்நிலை மட்ட அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு அதிகமாக உள்ளது. இது அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு 47,000 ரூபாய்களுக்கு அதிகமாகும்.

இங்குள்ள முதலாவது அட்டவணையானது 36 சேவைகளினதும் 2016.01.01 முதல் அமுல் நடத்தப்பட உள்ள புதிய சம்பளத் திட்டத்தைக் குறிக்கின்றது.

இரண்டாவது அட்டவணை இலங்கை ஆசிரியர் சேவையான சம்பளத் திட்டங்களை படிநிலையோடு காட்டுகின்றது. மூன்று தொடக்கம் ஏழுவரை உள்ள அட்டவணைகள் ஒவ்வொரு தரத்திற்கும் 2016, 2017, 2018, 2019, 2020 ஆண்டுகளில் கிடைக்கவுள்ள சம்பள படிநிலைகளைக் காட்டுகின்றன.

| | Service Category | Salary Code | Initial Step | Years | 1st slab | Years | 2nd slab | Years | 3rd slab | Years | 4th slab | Maximum |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Primary Level Unskilled | PL 1-2016 | 24,250 | 10 | 250 | 10 | 270 | 10 | 300 | 12 | 330 | 36,410 |
| 2 | Primary Level Semi-skilled | PL 2-2016 | 25,250 | 10 | 270 | 10 | 300 | 10 | 330 | 12 | 350 | 38,450 |
| 3 | Primary Level Skilled | PL 3-2016 | 25,790 | 10 | 270 | 10 | 300 | 10 | 330 | 12 | 350 | 38,990 |
| 4 | Management Assistants Seg 2 | MN 1-2016 | 27,140 | 10 | 300 | 11 | 350 | 10 | 495 | 10 | 660 | 45,540 |
| 5 | Management Assistants Seg 1 | MN 2-2016 | 28,940 | 10 | 300 | 11 | 350 | 10 | 560 | 10 | 660 | 47,990 |
| 6 | MA Supervisory Non-tech / Tech | MN 3-2016 | 31,040 | 10 | 445 | 11 | 660 | 10 | 730 | 10 | 750 | 57,550 |
| 7 | Associate Officer | MN 4-2016 | 31,490 | 10 | 445 | 11 | 660 | 10 | 730 | 5 | 750 | 54,250 |
| 8 | Field/Office based Officer Seg 2 | MN 5-2016 | 34,605 | 10 | 660 | 11 | 755 | 15 | 930 | | | 63,460 |
| 9 | Field/Office based Officer Seg 1 | MN 6-2016 | 36,585 | 10 | 660 | 11 | 755 | 15 | 930 | | | 65,440 |
| 10 | Management Assistants Supra | MN 7-2016 | 41,580 | 11 | 755 | 18 | 1,030 | | | | | 68,425 |
| 11 | MA Technical Seg 3 | MT 1-2016 | 29,840 | 10 | 300 | 11 | 350 | 10 | 560 | 10 | 660 | 48,890 |
| 12 | MA Technical Seg 2 | MT 2-2016 | 30,140 | 10 | 350 | 11 | 370 | 10 | 560 | 10 | 660 | 49,910 |
| 13 | MA Technical Seg 1 | MT 3-2016 | 30,840 | 10 | 350 | 11 | 370 | 10 | 560 | 10 | 660 | 50,610 |
| 14 | Para Medical Services Seg 3 | MT 4-2016 | 31,190 | 10 | 445 | 11 | 660 | 10 | 730 | 10 | 750 | 57,700 |
| 15 | Para Medical Services Seg 2 | MT 5-2016 | 31,635 | 10 | 445 | 11 | 660 | 10 | 730 | 10 | 750 | 58,145 |
| 16 | PSM/Para Medical Services Seg 1 | MT 6-2016 | 32,080 | 10 | 445 | 11 | 660 | 10 | 730 | 10 | 750 | 58,590 |
| 17 | Nurses | MT 7-2016 | 32,525 | 10 | 445 | 11 | 660 | 10 | 730 | 10 | 750 | 59,035 |
| 18 | Nurses, PSM, PMS Spl. Grade | MT 8-2016 | 50,200 | 10 | 1,345 | 8 | 1,630 | | | | | 76,690 |
| 19 | Executive | SL 1-2016 | 47,615 | 10 | 1,335 | 8 | 1,630 | 17 | 2,170 | | | 110,895 |
| 20 | Medical Officers | SL 2-2016 | 52,955 | 3 | 1,335 | 7 | 1,345 | 2 | 1,630 | 16 | 2,170 | 104,355 |
| 21 | Senior executive/MO Specialists | SL 3-2016 | 88,000 | 12 | 2,700 | | | | | | | 120,400 |
| 22 | Secretaries | SL 4-2016 | 98,650 | 12 | 2,925 | | | | | | | 133,750 |
| 23 | Law Officers | SL 5-2016 | 58,295 | 5 | 1,335 | 5 | 1,630 | 15 | 2,170 | | | 105,670 |
| 24 | Addl. SG | SL 7-2016 | 106,950 | 5 | 2,750 | | | | | | | 120,700 |
| 25 | Sri Lanka Teachers Service | GE 1-2016 | 27,740 | 6 | 300 | 7 | 380 | 2 | 445 | | | 33,090 |
| 26 | Sri Lanka Teachers Service | GE 2-2016 | 33,300 | 5 | 495 | 5 | 680 | 7 | 825 | 20 | 1,335 | 71,650 |
| 27 | Sri Lanka Principals Service | GE 4-2016 | 35,280 | 7 | 680 | 6 | 825 | 11 | 1,335 | 14 | 1,650 | 82,775 |
| 28 | Medical Practitioners | MP 1-2016 | 35,195 | 12 | 660 | 13 | 745 | 10 | 1,135 | | | 64,150 |
| 29 | Medical Practitioners Spl. Gr. | MP 2-2016 | 56,205 | 9 | 1,345 | 9 | 1,630 | | | | | 82,980 |
| 30 | Police / Regulatory Services | RS 1-2016 | 29,540 | 7 | 300 | 27 | 370 | | | | | 41,630 |
| 31 | Police / Regulatory Services | RS 2-2016 | 32,010 | 9 | 370 | 17 | 495 | | | | | 43,755 |
| 32 | Police / Regulatory Services | RS 3-2016 | 32,790 | 7 | 370 | 2 | 495 | 25 | 660 | | | 52,870 |
| 33 | Police / Regulatory Services | RS 4-2016 | 37,030 | 24 | 660 | | | | | | | 52,870 |
| 34 | Police / Regulatory Services | RS 5-2016 | 42,425 | 17 | 775 | | | | | | | 55,600 |
| 35 | Solicitor General | SF 1-2016 | 131,500 | 5 | 2,925 | | | | | | | 146,125 |
| 36 | Attorney General | SF 3-2016 | 139,000 | 5 | 2,925 | | | | | | | 153,625 |

அரசாங்க ஊழியர்களின் புதிய சம்பளத் திட்டம்/ Salary Structure for the Public Service - 2016

# ஆசிரியர் சேவையின் சம்பளத் திட்டங்கள்

| සේවා ශ්‍රේණිය<br>சேவை வகை<br>Service Category | | | ශ්‍රී ලංකා ගුරු සේවය<br>இலங்கை ஆசிரியர் சேවை<br>Sri Lanka Teachers Service | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| වැටුප් කේත අංකය<br>சம்பள குறியீட்டு இலக்கம்<br>Salary Code | | | ජීඊ 1 - 2016<br>ஜீஈ 1 - 2016<br>GE 1-2016 | | | ජීඊ 2 - 2016<br>ஜீஈ 1 - 2016<br>GE 2-2016 | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 3 | 4 | 5 | 6 |
| | | | 300 | | | | 495 | | |
| | | | 6 | | | | 5 | | |
| | | | 380 | | | | 680 | | |
| | | | 7 | | | | 5 | | |
| | | | 445 | | | | 825 | | |
| | | | 2 | | | | . 7 | | |
| | | | | | | | 1,335 | | |
| | | | | | | | 20 | | |
| | | | | | | | | | |
| 1 | | 3-II | 27,740 | | | 2-II | 33,300 | | |
| 2 | | | 28,040 | | | | 33,795 | | |
| 3 | | | 28,340 | | | | 34,290 | | |
| 4 | | | 28,640 | | | | 34,785 | | |
| 5 | | | 28,940 | | | | 35,280 | | |
| 6 | | | 29,240 | | | | 35,775 | | |
| 7 | | 3-I C | 29,540 | 29,540 | | | 36,455 | | |
| 8 | | | 29,920 | 29,840 | | | 37,135 | | |
| 9 | | 3-I B | 30,300 | 30,140 | | | 37,815 | | |
| 10 | | | 30,680 | 30,440 | | | 38,495 | | |
| 11 | | | 31,060 | 30,740 | | 2-I | 39,175 | 39,175 | |
| 12 | | | 31,440 | 31,040 | | | 40,000 | 39,855 | |
| 13 | | | 31,820 | 31,340 | | | 40,825 | 40,535 | |
| 14 | | 3-I A | 32,200 | 31,640 | | | 41,650 | 41,215 | |
| 15 | | | 32,645 | 31,940 | | | 42,475 | 41,895 | |
| 16 | | | 33,090 | 32,240 | | | 43,300 | 42,575 | |
| 17 | | | | | 33,535 | | 44,125 | | |
| 18 | | | | | 33,980 | I | 44,950 | | 44,950 |
| 19 | | | | | 34,425 | | 46,285 | | 45,775 |
| 20 | | | | | 34,870 | | 47,620 | | 46,600 |
| 21 | | | | | 35,315 | | 48,955 | | 47,425 |
| 22 | | | | | 35,760 | | 50,290 | | 48,250 |
| 23 | | | | | 36,205 | | 51,625 | | 49,075 |
| 24 | | | | | | | 52,960 | | |
| 25 | | | | | | | 54,295 | | |
| 26 | | | | | | | 55,630 | | |
| 27 | | | | | | | 56,965 | | |
| 28 | | | | | | | 58,300 | | |
| 29 | | | | | | | 59,635 | | |
| 30 | | | | | | | 60,970 | | |
| 31 | | | | | | | 62,305 | | |
| 32 | | | | | | | 63,640 | | |
| 33 | | | | | | | 64,975 | | |
| 34 | | | | | | | 66,310 | | |
| 35 | | | | | | | 67,645 | | |
| 36 | | | | | | | 68,980 | | |
| 37 | | | | | | | 70,315 | | |
| 38 | | | | | | | 71,650 | | |
| 39 | | | | | | | | | |

| Salary Step | As at 2015.12.31 | | As at 2016.01.01 | | As at 2017.01.01 | | As at 2018.01.01 | | As at 2019.01.01 | | As at 2020.01.01 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Basic Salary (Rs.) | Gross Salary (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) |
| 1 | 13,410 | 26,172 | 16,276 | 9,896 | 19,142 | 7,030 | 22,008 | 4,164 | 24,874 | 1,298 | 27,740 | - |
| 2 | 13,555 | 26,338 | 16,452 | 9,886 | 19,349 | 6,989 | 22,246 | 4,092 | 25,143 | 1,195 | 28,040 | - |
| 3 | 13,700 | 26,505 | 16,628 | 9,877 | 19,556 | 6,949 | 22,484 | 4,021 | 25,412 | 1,093 | 28,340 | - |
| 4 | 13,845 | 26,672 | 16,804 | 9,868 | 19,763 | 6,909 | 22,722 | 3,950 | 25,681 | 991 | 28,640 | - |
| 5 | 13,990 | 26,839 | 16,980 | 9,859 | 19,970 | 6,869 | 22,960 | 3,879 | 25,950 | 889 | 28,940 | - |
| 6 | 14,135 | 27,005 | 17,156 | 9,849 | 20,177 | 6,828 | 23,198 | 3,807 | 26,219 | 786 | 29,240 | - |
| 7 | 14,280 | 27,172 | 17,332 | 9,840 | 20,384 | 6,788 | 23,436 | 3,736 | 26,488 | 684 | 29,540 | - |
| 8 | 14,425 | 27,339 | 17,508 | 9,831 | 20,591 | 6,748 | 23,674 | 3,665 | 26,757 | 582 | 29,840 | - |
| 9 | 14,570 | 27,506 | 17,684 | 9,822 | 20,798 | 6,708 | 23,912 | 3,594 | 27,026 | 480 | 30,140 | - |
| 10 | 14,715 | 27,672 | 17,860 | 9,812 | 21,005 | 6,667 | 24,150 | 3,522 | 27,295 | 377 | 30,440 | - |
| 11 | 14,860 | 27,839 | 18,036 | 9,803 | 21,212 | 6,627 | 24,388 | 3,451 | 27,564 | 275 | 30,740 | - |
| 12 | 15,040 | 28,048 | 18,240 | 9,808 | 21,440 | 6,608 | 24,640 | 3,408 | 27,840 | 208 | 31,040 | - |
| 13 | 15,220 | 28,264 | 18,444 | 9,820 | 21,668 | 6,596 | 24,892 | 3,372 | 28,116 | 148 | 31,340 | - |
| 14 | 15,400 | 28,480 | 18,648 | 9,832 | 21,896 | 6,584 | 25,144 | 3,336 | 28,392 | 88 | 31,640 | - |
| 15 | 15,580 | 28,696 | 18,852 | 9,844 | 22,124 | 6,572 | 25,396 | 3,300 | 28,668 | 28 | 31,940 | - |
| 16 | 15,760 | 28,912 | 19,056 | 9,856 | 22,352 | 6,560 | 25,648 | 3,264 | 28,944 | | 32,240 | - |

**இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் II/ GE-1 2016 Grade 3-II**

## இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் I/ GE-1 2016 Grade 3-IC, 3-IB, 3IA

| Salary Step | As at 2015.12.31 | | As at 2016.01.01 | | As at 2017.01.01 | | As at 2018.01.01 | | As at 2019.01.01 | | As at 2020.01.01 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Basic Salary (Rs.) | Gross Salary (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) |
| 7 | 14,280 | 27,172 | 17,332 | 9,840 | 20,384 | 6,788 | 23,436 | 3,736 | 26,488 | 684 | 29,540 | - |
| 8 | 14,460 | 27,379 | 17,552 | 9,827 | 20,644 | 6,735 | 23,736 | 3,643 | 26,828 | 551 | 29,920 | - |
| 9 | 14,640 | 27,586 | 17,772 | 9,814 | 20,904 | 6,682 | 24,036 | 3,550 | 27,168 | 418 | 30,300 | - |
| 10 | 14,820 | 27,793 | 17,992 | 9,801 | 21,164 | 6,629 | 24,336 | 3,457 | 27,508 | 285 | 30,680 | - |
| 11 | 15,000 | 28,000 | 18,212 | 9,788 | 21,424 | 6,576 | 24,636 | 3,364 | 27,848 | 152 | 31,060 | - |
| 12 | 15,180 | 28,216 | 18,432 | 9,784 | 21,684 | 6,532 | 24,936 | 3,280 | 28,188 | 28 | 31,440 | - |
| 13 | 15,360 | 28,432 | 18,652 | 9,780 | 21,944 | 6,488 | 25,236 | 3,196 | 28,528 | - | 31,820 | - |
| 14 | 15,540 | 28,648 | 18,872 | 9,776 | 22,204 | 6,444 | 25,536 | 3,112 | 28,868 | - | 32,200 | - |
| 15 | 15,755 | 28,906 | 19,133 | 9,773 | 22,511 | 6,395 | 25,889 | 3,017 | 29,267 | - | 32,645 | - |
| 16 | 15,970 | 29,164 | 19,394 | 9,770 | 22,818 | 6,346 | 26,242 | 2,922 | 29,666 | - | 33,090 | - |
| 17 | 16,185 | 29,422 | 19,655 | 9,767 | 23,125 | 6,297 | 26,595 | 2,827 | 30,065 | - | 33,535 | - |
| 18 | 16,400 | 29,680 | 19,916 | 9,764 | 23,432 | 6,248 | 26,948 | 2,732 | 30,464 | - | 33,980 | - |
| 19 | 16,615 | 29,938 | 20,177 | 9,761 | 23,739 | 6,199 | 27,301 | 2,637 | 30,863 | - | 34,425 | - |
| 20 | 16,830 | 30,196 | 20,438 | 9,758 | 24,046 | 6,150 | 27,654 | 2,542 | 31,262 | - | 34,870 | - |
| 21 | 17,045 | 30,454 | 20,699 | 9,755 | 24,353 | 6,101 | 28,007 | 2,447 | 31,661 | - | 35,315 | - |
| 22 | 17,260 | 30,712 | 20,960 | 9,752 | 24,660 | 6,052 | 28,360 | 2,352 | 32,060 | - | 35,760 | - |
| 23 | 17,475 | 30,970 | 21,221 | 9,749 | 24,967 | 6,003 | 28,713 | 2,257 | 32,459 | - | 36,205 | - |

| Salary Step | As at 2015.12.31 | | As at 2016.01.01 | | As at 2017.01.01 | | As at 2018.01.01 | | As at 2019.01.01 | | As at 2020.01.01 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Basic Salary (Rs.) | Gross Salary (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) |
| 1 | 16,100 | 29,320 | 19,540 | 9,780 | 22,980 | 6,340 | 26,420 | 2,900 | 29,860 | - | 33,300 | - |
| 2 | 16,340 | 29,608 | 19,831 | 9,777 | 23,322 | 6,286 | 26,813 | 2,795 | 30,304 | - | 33,795 | - |
| 3 | 16,580 | 29,896 | 20,122 | 9,774 | 23,664 | 6,232 | 27,206 | 2,690 | 30,748 | - | 34,290 | - |
| 4 | 16,820 | 30,184 | 20,413 | 9,771 | 24,006 | 6,178 | 27,599 | 2,585 | 31,192 | - | 34,785 | - |
| 5 | 17,060 | 30,472 | 20,704 | 9,768 | 24,348 | 6,124 | 27,992 | 2,480 | 31,636 | - | 35,280 | - |
| 6 | 17,300 | 30,760 | 20,995 | 9,765 | 24,690 | 6,070 | 28,385 | 2,375 | 32,080 | - | 35,775 | - |
| 7 | 17,630 | 31,156 | 21,395 | 9,761 | 25,160 | 5,996 | 28,925 | 2,231 | 32,690 | - | 36,455 | - |
| 8 | 17,960 | 31,552 | 21,795 | 9,757 | 25,630 | 5,922 | 29,465 | 2,087 | 33,300 | - | 37,135 | - |
| 9 | 18,290 | 31,948 | 22,195 | 9,753 | 26,100 | 5,848 | 30,005 | 1,943 | 33,910 | - | 37,815 | - |
| 10 | 18,620 | 32,344 | 22,595 | 9,749 | 26,570 | 5,774 | 30,545 | 1,799 | 34,520 | - | 38,495 | - |
| 11 | 18,950 | 32,740 | 22,995 | 9,745 | 27,040 | 5,700 | 31,085 | 1,655 | 35,130 | - | 39,175 | - |
| 12 | 19,280 | 33,136 | 23,395 | 9,741 | 27,510 | 5,626 | 31,625 | 1,511 | 35,740 | - | 39,855 | - |
| 13 | 19,610 | 33,532 | 23,795 | 9,737 | 27,980 | 5,552 | 32,165 | 1,367 | 36,350 | - | 40,535 | - |
| 14 | 19,940 | 33,928 | 24,195 | 9,733 | 28,450 | 5,478 | 32,705 | 1,223 | 36,960 | - | 41,215 | - |
| 15 | 20,270 | 34,324 | 24,595 | 9,729 | 28,920 | 5,404 | 33,245 | 1,079 | 37,570 | - | 41,895 | - |
| 16 | 20,600 | 34,720 | 24,995 | 9,725 | 29,390 | 5,330 | 33,785 | 935 | 38,180 | - | 42,575 | - |

**இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2 தரம் II/ GE-1 2016 Grade 2-II**

## இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2 தரம் I/ GE-2 2016 Grade 2-I

| Salary Step | As at 2015.12.31 | | As at 2016.01.01 | | As at 2017.01.01 | | As at 2018.01.01 | | As at 2019.01.01 | | As at 2020.01.01 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Basic Salary (Rs.) | Gross Salary (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) |
| 11 | 18,950 | 32,740 | 22,995 | 9,745 | 27,040 | 5,700 | 31,085 | 1,655 | 35,130 | - | 39,175 | - |
| 12 | 19,350 | 33,220 | 23,480 | 9,740 | 27,610 | 5,610 | 31,740 | 1,480 | 35,870 | - | 40,000 | - |
| 13 | 19,750 | 33,700 | 23,965 | 9,735 | 28,180 | 5,520 | 32,395 | 1,305 | 36,610 | - | 40,825 | - |
| 14 | 20,150 | 34,180 | 24,450 | 9,730 | 28,750 | 5,430 | 33,050 | 1,130 | 37,350 | - | 41,650 | - |
| 15 | 20,550 | 34,660 | 24,935 | 9,725 | 29,320 | 5,340 | 33,705 | 955 | 38,090 | - | 42,475 | - |
| 16 | 20,950 | 35,140 | 25,420 | 9,720 | 29,890 | 5,250 | 34,360 | 780 | 38,830 | - | 43,300 | - |
| 17 | 21,350 | 35,620 | 25,905 | 9,715 | 30,460 | 5,160 | 35,015 | 605 | 39,570 | - | 44,125 | - |
| 18 | 21,750 | 36,100 | 26,390 | 9,710 | 31,030 | 5,070 | 35,670 | 430 | 40,310 | - | 44,950 | - |
| 19 | 22,150 | 36,580 | 26,875 | 9,705 | 31,600 | 4,980 | 36,325 | 255 | 41,050 | - | 45,775 | - |
| 20 | 22,550 | 37,060 | 27,360 | 9,700 | 32,170 | 4,890 | 36,980 | 80 | 41,790 | - | 46,600 | - |
| 21 | 22,950 | 37,540 | 27,845 | 9,695 | 32,740 | 4,800 | 37,635 | - | 42,530 | - | 47,425 | - |
| 22 | 23,350 | 38,020 | 28,330 | 9,690 | 33,310 | 4,710 | 38,290 | - | 43,270 | - | 48,250 | - |
| 23 | 23,750 | 38,500 | 28,815 | 9,685 | 33,880 | 4,620 | 38,945 | - | 44,010 | - | 49,075 | - |

| Salary Step | As at 2015.12.31 | | As at 2016.01.01 | | As at 2017.01.01 | | As at 2018.01.01 | | As at 2019.01.01 | | As at 2020.01.01 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Basic Salary (Rs.) | Gross Salary (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) | Basic Salary (Rs.) | Adjustment Allowance (Rs.) |
| 18 | 21,750 | 36,100 | 26,390 | 9,710 | 31,030 | 5,070 | 35,670 | 430 | 40,310 | - | 44,950 | - |
| 19 | 22,395 | 36,874 | 27,173 | 9,701 | 31,951 | 4,923 | 36,729 | 145 | 41,507 | - | 46,285 | - |
| 20 | 23,040 | 37,648 | 27,956 | 9,692 | 32,872 | 4,776 | 37,788 | - | 42,704 | - | 47,620 | - |
| 21 | 23,685 | 38,422 | 28,739 | 9,683 | 33,793 | 4,629 | 38,847 | - | 43,901 | - | 48,955 | - |
| 22 | 24,330 | 39,196 | 29,522 | 9,674 | 34,714 | 4,482 | 39,906 | - | 45,098 | - | 50,290 | - |
| 23 | 24,975 | 39,970 | 30,305 | 9,665 | 35,635 | 4,335 | 40,965 | - | 46,295 | - | 51,625 | - |
| 24 | 25,620 | 40,744 | 31,088 | 9,656 | 36,556 | 4,188 | 42,024 | - | 47,492 | - | 52,960 | - |
| 25 | 26,265 | 41,518 | 31,871 | 9,647 | 37,477 | 4,041 | 43,083 | - | 48,689 | - | 54,295 | - |
| 26 | 26,910 | 42,292 | 32,654 | 9,638 | 38,398 | 3,894 | 44,142 | - | 49,886 | - | 55,630 | - |
| 27 | 27,555 | 43,066 | 33,437 | 9,629 | 39,319 | 3,747 | 45,201 | - | 51,083 | - | 56,965 | - |
| 28 | 28,200 | 43,840 | 34,220 | 9,620 | 40,240 | 3,600 | 46,260 | - | 52,280 | - | 58,300 | - |
| 29 | 28,845 | 44,614 | 35,003 | 9,611 | 41,161 | 3,453 | 47,319 | - | 53,477 | - | 59,635 | - |
| 30 | 29,490 | 45,388 | 35,786 | 9,602 | 42,082 | 3,306 | 48,378 | - | 54,674 | - | 60,970 | - |
| 31 | 30,135 | 46,162 | 36,569 | 9,593 | 43,003 | 3,159 | 49,437 | - | 55,871 | - | 62,305 | - |
| 32 | 30,780 | 46,936 | 37,352 | 9,584 | 43,924 | 3,012 | 50,496 | - | 57,068 | - | 63,640 | - |
| 33 | 31,425 | 47,710 | 38,135 | 9,575 | 44,845 | 2,865 | 51,555 | - | 58,265 | - | 64,975 | - |
| 34 | 32,070 | 48,484 | 38,918 | 9,566 | 45,766 | 2,718 | 52,614 | - | 59,462 | - | 66,310 | - |
| 35 | 32,715 | 49,258 | 39,701 | 9,557 | 46,687 | 2,571 | 53,673 | - | 60,659 | - | 67,645 | - |
| 36 | 33,360 | 50,032 | 40,484 | 9,548 | 47,608 | 2,424 | 54,732 | - | 61,856 | - | 68,980 | - |
| 37 | 34,005 | 50,806 | 41,267 | 9,539 | 48,529 | 2,277 | 55,791 | - | 63,053 | - | 70,315 | - |
| 38 | 34,650 | 51,580 | 42,050 | 9,530 | 49,450 | 2,130 | 56,850 | - | 64,250 | - | 71,650 | - |

# உளவளத்துணை என்பது ஓர் இறக்குமதிப் பொருளா?

✷ சபா.ஜெயராசா

சீர்மியம் அல்லது உளவளத்துணை என்பதை மேலைத்தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செயல்வவமாக காட்டும் முயற்சியைப் பல்கலைக்கழகங்களில் உள்ளவர்களும், தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டாளர்களும் மேற்கொள்ளும் ஓர் அபத்தமான நிலை மேலோங்கி வருகின்றது. அவர்கள் எழுதிவரும் கட்டுரைகளிலும் ஆய்வுகளிலும் தமிழ் மரபில் இடம்பெற்ற சீர்மியம் பற்றிய குறிப்புக்கள் அற்ற வெற்றிடங்களே காணப்படுகின்றன.

ஒருவகையில் இதனை ஐரோப்பிய மையவாதத்தின் நீட்சிக்கு உட்பட்ட புலமை அடிமைத்தனம் என்று குறிப்பிடலாம். சில ஆய்வாளர்கள் இந்திய மரபில் உள்ள தியானமுறை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்களேயன்றித் தமிழ் மரபில் உள்ள சீர்மிய நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுவதற்கோ நோக்குவதற்கோ தவறிவிட்டனர்.

உலகின் எல்லாப் பண்பாட்டினரும் அவரவர் இயல்புகளுக்கும் சூழலுக்குமுரிய சீர்மிய முறைகளை உருவாக்கி வந்துள்ளனர். அந்நிலையில் மேலைத்தேய உளவியல் தான் சீர்மியத்தைக் கண்டுபிடித்தது என்று கூறுதல் தவறானது.

பூர்விக சமூகங்களில் மக்களுக்குரிய உளத்தாக்கங்கள் இயற்கையோடு தொடாபு கொண்டவையாய் அமைந்தன. அந்நிலையில் தோன்றிய சீர்மியச் செயற்பாடே “சடங்கு” இயற்கையோடு இசைய வைத்தல் சடங்கின் முக்கியமான நோக்கமாக அமைந்தது.

தனிச் சொத்துரிமையின் வளர்ச்சியும், அதிகாரமும், ஒடுக்குமுறைகளும் மேலாதிக்கமும், போட்டிகளும் என்ற சிக்கலான சமூகச் செயற்பாடுகளின் வளர்ச்சியோடு உளவியலும் சீர்மியமும் மொழிபோன்று எல்லா சமூகங்களிலும் வளர்ச்சியடையத் தொடங்கின. சமூக வளர்ச்சியின் போதுதான் காதலும், பிரிவும் பொருள் தேடலும் அவற்றோடு தொடர்புடைய உளப்பிரச்சினைகளும் தோற்றம் பெற்றன.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் திணை என்பது இலக்கியத்தைச் சமூக உறவுகளோடு தொடர்புபடுத்தும் முயற்சியாக மட்டுமன்றி, சமூகப் பின்புலத்தில் எழுந்த உளவியல் விளக்கமாகவும், சீர்மியச் செயற்பாடாகவும் அமைகின்றது. “திணை” என்பது சமூக உளவியற் கருத்தாக்கமாக மேலெழுகின்றது. ஐந்திணை ஒழுக்கம் என்பது ஐ வகை நிலங்களுக்குமுரிய சமூக உறவுகள் தழுவி எழுகோலம் பெறும் சமூக நடத்தையாகின்றது.

கட்டுரையாளர்

கல்வியியல்துறைப்
பேராசிரியர் (ஓய்வு)
பன்னூல்
ஆசிரியர்
நபா.ஜெயராசா

சங்கப்பாடல்களிலே பரவலாகக் காணப்படும் ஒரு சீர்மியச் செயற்பாடு "உற்றிணைந்தோர் சீர்மியம்" *(Peer counselling)* ஒரே வயது வீச்சில் உள்ள தோழியும் தோழனும், பாங்கனும் பாங்கியும் உளத்தின் உறுநோய்க்குத் தீர்வு காண்பதற்கு உதவுவோராய் இருத்தல் பல பாடல்கள் வழியாக வெளிப்பாடு கொள்வதைக் காணலாம்.

ஒரே வயதினரது ஊடாட்டங்களை ஒட்டுமொத்தமான சமூக உறவுகளின் அடிப்படையில் நுணுகி நோக்குதல் திணை ஒழுக்கத்திலே காணப்படுகின்றது. சங்கப்பாடல்கள் சமூகத்தின் சமச்சீர் அற்ற வளர்ச்சிப் போக்கினைப் புலப்படுத்தும் (மாதையன், பெ. 2004.ப.10 சங்ககால இனக்குழும சமுதாயமும் அரசு உருவாக்கமும், சென்னை பாவை பப்ளிகேசன்) அவ்வாறான ஏற்றதாழ்வுள்ள சமூகம் இயல்பாகவே மனமுறிவுகளையும், அழுத்தங்களையும், உளநலக்கேட்டினையும் உருவாக்கவல்லது.

அந்நிலையில் பன்மைப்பாங்கான சீர்மியச் செயற்பாடுகள் தமிழகத்தில் வளர்ச்சியடையத் தொடங்கின. வழிபாடுகளோடு இணைந்த "தெய்வியச் சீர்மியம்" *(Spiritual Counselling)* வளர்ச்சியடையத் தொடங்கியது வெறியாட்டுடன் நிகழ்த்தப்பட்ட கொற்றவை வழிபாடு மனச்சுகம் வழங்கும் செயற்பாடாக அமைந்தது. கொற்றவைக்குப் பலி கொடுத்து வழிபடல் "கொற்றவைநிலை" என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது (தொல். பொருள், 59)

கொற்றவை வழிபாடு இனக்குழும சமூகத்திலே தோற்றம் பெற்றுத் தொடர்ந்து நீட்சி கொண்டது. மலைவழிபாடு, மரவழிபாடு, நீர்வழிபாடு முதலியனவும் இனக்குழும சமூகத்தில் இடம்பெற்றுத் தொடர்ந்து நீட்சிகொண்டன. காட்டுக்குரிய தெய்வம் "காடுறை கடவுள்" (பொருந.52) எனப்பட்டது. இனக்குழும சமுதாயத்தின் சிதைவிலும், அரசுகளின் வளர்ச்சியோடும், சிவன், விட்டுணு முதலாம் தெய்வவழிபாடுகள் வளர்ச்சியடையத் தொடங்கின. முருகவழிபாடு இனக்குழும சமூகத்தில் இடம்பெற்று அடுத்த கட்ட சமூக வளர்ச்சியின்போதும் தொடர்ந்தது. "கொற்றவைச் சிறுவன்" (திருமுருகாற்றுப்படை, அடி250) என்ற தொடர் கொற்றவை வழிபாட்டுக்கும் முருக வழிபாட்டுக்குமுள்ள தொடர்பினையும் தொன்மையையும் விளக்கும்.

அரசின் வளர்ச்சியோடு நிகழ்ந்த வரன்முறையான கல்விச்செயல்முறையோடு இணைந்த புலவரும் அந்தணரும், முனிவரும் சீர்மியச் செயற்பாட்டில் ஈடுபடலாயினர். மதுரைக் காஞ்சியில் (468-74) அவர்கள் மேற்கொண்ட உயிர்களிடத்து அன்புகொள்ளல் உள்ளிட்ட அறுதொழில்கள் விளக்கப்பட்டுள்ளன.

இயற்கையோடு இசைவு கொண்டு வாழும் முனிவர்களது வாழ்க்கை முறை "சூழலியற் சீர்மியத்தின்" *(Eco - Counselling)* தொன்மையான வடிவமாயிற்று.

ஆடலும் கூத்தும் தொன்மையான சீர்மியச் செயற்பாடுகளாக அமைந்தன. தொன்மையான பண்பாடுகள் எல்லாவற்றிலும் இத்தகைய சீர்மியச் செயற்பாடு நீடித்து நிலைத்திருந்தது. வெறியாடல் வள்ளிக்கூத்து,

குரவைக்கூத்து, பேய்ஆடல், துணங்கைக் கூத்து முதலியவை உடலும், உள்ளமும் இணைந்த சுகத்துக்கு இட்டுச்சென்றன.

மனச்சுகம் எட்டுவதற்கு ஆடை அணிகலன்களைப் புனைதலும் உடலிலே சித்திரங்களை வரைதலும் என்ற செயற்பாடுகள் இடம்பெற்றன. சமகாலச் சமூகத்திலும் இந்தச் செயற்பாடுகள் இளைஞரிடத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உடலிலே சித்திரங்களை வரைதல் தமிழகத்தில் தொய்யில்" (நற்றிணை 6-7) எனப்பட்டது.

சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களின் வருகையோடு இணைந்த சீர்மியச் செயற்பாடுகளும் தமிழ்ச்சூழலில் வளர்ச்சிகொள்ளத் தொடங்கின. துன்பமீட்சியும், இன்பம் - துன்பம் ஆகிய எதிர்முனைகளுக்குள் அமிழ்ந்துவிடாத "நடுநிலை" வாழ்வும் பௌத்த கருத்தியலில் வலியுறுத்தப்பட்டன. நடத்தை வாயிலான உளப்பிணியை நீக்கும் செயற்பாடு "நடத்தை வழி உளப்பிணிநீக்கல்" *(Behaviour Threapy)* தோற்றப்பாடு பௌத்தத்திலும் சமணத்திலும் காணப்படுகின்றது.

சமூக வளர்ச்சியின்போது பாணர்களின் நிலை பின்தள்ளப்பட்டு புலவர்களின் நிலை மேலோங்கலாயிற்று. (கைலாசபதி,க,2006, தமிழ்வீர நிலைக்கவிதை, சென்னை. குமரன் புத்தக இல்லம் ப.175) சமண பௌத்த சமயத்தத்துவங்களின் வருகையோடு புலவர்களின் நிலை மேலும் எழுச்சி கொள்ளலாயிற்று.

வலிமைமிக்க வணிகப் பிரிவினரின் செயற்பாடுகள் பொருண்மிய நிலைவரங்களை அடியொற்றிய உள நலப்பாதிப்புக்கள் ஏற்படலாயின. புதிய தமிழகச் சூழலில் முன்னர் நிகழ்ந்த உளநலச் செயற்பாட்டில் மாற்றங்கள் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. உளநல ஏற்பாட்டில் பாணர் வகித்த வகிபாகத்தைப் புலவர் வகிக்கத் தொடங்கினர். மாறிவரும் சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு நீதிநூல்களையும் அவர்கள் எழுதலாயினர். அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தமிழ்ச் சூழலில் அறிகை முறைச்சிகிச்சையின் *(Cognitive Therapy)* தொன்மையான வடிவமாக அமைந்தது என்று கூறுவதிலே தவறில்லை.

நவீன சிந்தனைகள் தொன்மையான அறிகைப் படிமங்களோடு ஏதோ ஒருவகையிலே தொடர்புபட்டிருத்தலைக் காணமுடியும். புதிய சிந்தனைகளும் புதிய கண்டுபிடிப்புக்களும் திடீரென்ற எழுபாய்ச்சலுடன் தோற்றம் பெறுதல் போன்ற காட்சியைத் தந்தாலும் அவை மனிதரின் சிந்தனை வரலாற்றுடன் தொடர்புபட்ட நீட்சியாகும்.

பின்னைய நவீனத்துவ எழுத்தாளர்கள் குறிப்பிடும் ஊடுநூலியம் அல்லது ஊடு பனுவல் *(Inter Textuality)* என்ற கருத்தாக்கமும் புதிய ஆக்கங்களுக்குரிய முன்னைய தொடர்புகளை வலியுறுத்துகின்றது.

குழு நிலைச் சீர்மியத்தை கார்ல் ரொஜர்ஸ் என்ற உளவியலாளரே அறிமுகப்படுத்தினார் என்ற தவறான சித்திரிப்பும் உளவியல் மற்றும் சீர்மியம் கற்பிப்போரால் மேற்கொள்ளப்படுகின்றது. குழு இயக்க நிலையில் உளச் சுகத்தை வருவித்தல் பொதுவாக எல்லாப் பண்பாடுகளிலும் காணப்பட்ட ஓர் உளவியற் செயற்பாடு குலக்குழு வாழ்க்கையே குழுநிலைய சீர்மியச் செயற்பாட்டுடன் தொடர்புடையது.

வரலாற்று வளர்ச்சியில் குழுநிலைச் செயற்பாடு கல்வியுடனும் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளுடனும் முன்னேற்றம் பெற்றது. பல்லவர் காலப் பக்தி எழுச்சியும், நாயன்மார் வழிகாட்டலில் ஊர்தொறும் சென்று வழிபடலும், கூட்டாகப் பதிகம்பாடுதலும் நிகழலாயின.

சோழப் பெருமன்னர் ஆட்சியில் எழுந்த பெரும் தத்துவங்களும் வரன்முறைக் கல்வியோடு சமயம் மேலும் ஒன்றிணைக்கப்பட்டமையும் சீர்மியச் செயற்பாடுகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிமுறைகளும் அவற்றினூடாக தெய்விக வாழ்வின் உன்னதங்களை நோக்கி நகர்தலும் என்ற செயற்பாடுகள் வளர்ச்சிகொள்ளத் தொடங்கின.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிமுறைகள் சோழர் காலத்துக்கு முன்னரே நிலைபேறு கொண்டனவாயினும், சோழர்காலத்தில் அது மேலும் வலுப்பெற்றது.

அத்தகைய வளர்ச்சிகளினூடே தமிழ்ச் சூழலில் சீர்மியம் என்பது வர்க்க நிலை தழுவிய ஒரு செயற்பாடாக இன்றுவரை நீட்சி கொண்டு வருதலைக் காணலாம். தெய்விக சீர்மியச் செயற்பாட்டில் இந்த வளர்ச்சியைத் தெளிவாகக் காணலாம்.

சமூக அடுக்கமைவில் உயர்ந்தோர் உளச் சுகத்தை எட்டுவதற்கு வேதாகம வழிபாட்டு முறையைப் பின்பற்றுதலும், அடித்தளங்களில் வாழும் விளிம்பு நிலை மக்கள், கிராமிய வழிபாடுகளில் ஈடுபட்டு உளச்சுகம் தேடுதலும் என்ற இருநிலைச் செல்வழிகள் காணப்படுகின்றன. வர்க்கங்களுக்கும் சீர்மியத்துக்குமுள்ள தொடர்புகளை மேற்குறித்த கோலங்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

தமிழ்ச் சூழலின் சீர்மிய நிலவரங்கள் பற்றி அறிந்துகொள்ளாது சீர்மியத்தை இறக்குமதிப்பண்டமாகக் காட்டுவோர், தமிழ்ப் பண்பாட்டின் ஆழ்ந்த வேர்களை அறியாதவராகின்றனர். மேலைத்தேயத்தில் உருவாக்கம் பெற்ற சீர்மியக் கோட்பாடுகளும், சிகிச்சை முறைகளும் வசதி படைத்த மத்தியதர வகுப்பினரின் பின்புலத்தில் அவர்களையே ஆய்வுப் பொருளாக்கி அவர்களையே குவியப்படுத்தி உருவாக்கப்பட்டவையாகும்.

அவ்வாறு உருவாக்கம் பெற்ற சிகிச்சை முறைகளை பொருத்தமற்ற முறையில் எமது பண்பாட்டில் திணித்தலும் அபத்தமாகின்றது. மேலைத்தேயச் சீர்மிய முறைகள், அங்குள்ள தொழிலாளர்கள், விளிம்பு நிலையினர், வறுமையில் உள்ள கருமை இனமக்கள் ஆகியோரிடத்து வெற்றி யளிக்கவில்லை என்பதை விடுதலை உளவியலாளர் *(Libration Psycholigist)* மற்றும் உற்றறி உளவியலாளர் *(Critical Psychologist)* தெளிவுபடுத்தியுள்ளனர்.

உலகின் அனைத்துப் பண்பாடுகளிலும் நாடகச் சிகிச்சை முறை மிக நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது. அந்தச் சிகிச்சை முறையினையும் ஓர் இறக்குமதிப் பொருளாகக் கருதும் அபத்தமும் அறிவு நிலை அவலமும் காணப்படுகின்றன.

மேற்கூறியவற்றின் எழுபுலத்தில், சீர்மியம் கற்பித்தல் தொடர்பான உடனடி மீள்பரிசீலனையை வலியுறுத்த வேண்டியுள்ளது.

# பாடசாலையில் மாணவர் வேண்டுவது : ஓர் அனுபவ நோக்கு

* ம.மாசிலாமணி

கட்டுரையாளர்
ஆசிரியர்
சென்ஜோசப் கல்லூரி
மஸ்கெலியா

பாடசாலை என்பது சர்வதேச சிந்தனைக்கு உட்பட்ட விடயம். இது உலகில் எல்லா நாடுகளிலும் பரந்து விரிந்த கட்டமைப்பைக் கொண்டுள்ளது. பாடசாலைகள் இன்று தனியார், அரசு மற்றும் அரசும் தனியாரும் இணைந்தும் நடாத்துகின்றன. அடிப்படையில் பாடசாலையின் செயற்பாங்கு ஒருமித்தது. அது "நல்ல குடிமகனை உருவாக்குதல்" அது எந்த நாட்டினுடைய பாடசாலையாயினும் அதன் தலையாய கடமை இதுவே. அத்துடன் இயைந்ததாக நல்ல சிந்தனைகள், எண்ணங்கள், இயல்புகள், செயல்கள், நடத்தை மாற்றங்கள் என்பவற்றை குவியப்படுத்தியதாகவே அமைகின்றது. எனினும் ஒவ்வொரு நாட்டினதும் தனித்துவம் பேணும் வகையில் செயலமைப்பைக் கொண்டுள்ளது. அவை மேற்கூறியவற்றுடன் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டமைவதை காணக்கூடியதாய் உள்ளது. இவ்வாறான பாடசாலையை நோக்கி வருகின்ற பிள்ளை ஒன்று, என்னென்ன விடயங்களுக்கு பாடசாலையில் தங்கியுள்ளது? இவற்றை எவ்வாறு பாடசாலைகள் வழங்கலாம்? என்பது எமது வினாவாகின்றது. இவ்விடயம் தொடர்பாக இலங்கையை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

## ஆசிரியர் மாணவர் உறவு நிலை

இன்று ஆசிரியர் மாணவர் உறவு நிலை விரிசல் நிலையைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. அதற்கு பாடசாலை சார், பாடசாலை சாரா காரணிகளும் அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. அவற்றில் சில காரணிகள், பல்வேறு சமூகத்தில் இருந்து வரும் மாணவர்கள் அவர்களின் வேறுபட்ட தேவைகள், சமூக அடுக்கமைவு, மின்னணுச் சாதனங்களின் தாக்கம், அவற்றுடன் கலைத்திட்டம், பரீட்சை முறைமை, தொழில் சந்தையின் தேவைகள், பாடசாலை மாணவனுக்கு வழங்கும் திறன்கள், நாட்டு சூழ்நிலை என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை நிறைவேறாத பட்சத்தில் பாடசாலை மீதான நம்பிக்கையீனம் ஆசிரியர் உறவில் தாக்கத்தினை செலுத்துகின்றது. இது பாடசாலையின் உறவுநிலை அமைப்பினை கட்டுடைப்பு செய்துள்ளது. பாடசாலையின் செயல் ஒழுங்கிலும் சீரான போக்கினை தடைசெய்துள்ளது. ஆசிரியர், மாணவர் உள தாக்கத்திற்கு ஆளாகின்றனர். இந்நிலை கலையப்பட வேண்டியதன் அவசியம் இன்று உணரப்பட்டுள்ளது. அதிக தாக்கத்திற்கு மாணவர்கள் பிறழ்வான நடத்தையினை நோக்கி நகர்கின்றனர். இதற்கு பாடசாலை மட்டத்திலேயே

பொருத்தமான வழிமுறைகளை இனங்கண்டு அதற்கேற்ற வகையில் கற்றல் கற்பித்தலை செயற்படுத்துவது அவசியம். அப்போது ஆசிரியர் மாணவர் உறவில் விரிசலை ஏற்படுத்தும் காரணிகளை முறையாக கலைந்து மாணவர் வேண்டி நிற்கின்ற உறவு நிலையினை வகுப்பறைகளின் ஊடாக ஏற்படுத்த முடியும்.

**உடல் உள நலன் பேணல்**

கற்பதற்கான காரணிகளில் உடல் மற்றும் உளம் வளமானதாக அமைவது அவசியம் இதனை நெறிமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக வளர்க்க முடியும். மாணவர்கள் இவ்வாறான உடல் உள நலத்தினை பேணும் மையமாக பாடசாலை சூழலைப் பார்க்கின்றனர். எல்லா மாணவர்களுக்கும் எல்லா வசதிகளும் வீட்டுச்சூழலில் கிடைப்பதில் பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள் தடையாக உள்ளன. எனவே சமூக நலன் நிறுவனமான பாடசாலை இதனை தனக்கு வழங்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். பாடசாலையானது தனது நலனில் அக்கறை கொள்ள வேண்டும் என மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர். இவற்றை வழங்குவதற்கு பாடசாலைகளில் பல்வேறு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

பாடசாலையிலே ஏற்பாடு செய்யப்படுகின்ற விளையாட்டுப்போட்டிகள், கல்விச்சுற்றுலாக்கள், களப்பயணங்கள், கண்காட்சிகள், கலாசார நிகழ்வுகள், போன்ற இணைக் கலைத்திட்டங்கள் மாணவரின் உடலையும், உளத்தையும் பேணுவதில் முதலிடம் பெறுகின்றது. எனவே அதனைக் கிரமமாக செய்வதற்கான ஒழுங்குகளை ஏற்பாடு செய்ய வேண்டும். பாடசாலையில் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களில் மாணவர்களின் பங்குபற்றல் சமத்துவத்தை உறுதிசெய்ய வேண்டும். தினமும் மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். இதற்கான வளங்களை பல்வேறு வழிகளில் பெறுவதற்கான வசதிகளை பாடசாலை மேற்கொள்ள வேண்டும். வெறுமனே மனித உரிமைகளை மாத்திரம் கருத்தரங்குகளுக்கு செலவு செய்து மாணவர்களுக்கு வழங்கும் அரச சாரா நிறுவனங்கள் இவ்விடயம் தொடர்பாகவும் செலவுகளை மேற்கொள்ளலாம். திடமான உடலும் உள்ளமும் கொண்ட மாணவர் சமுகத்தினை உருவாக்கும் பணியில் பாடசாலை சிரத்தை கொள்ள வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது.

**தனித்துவமும் அந்தஸ்தும்**

ஒவ்வொரு மாணவரும் தனித்துவமானவர். அவர் தனது அந்தஸ்தை பேண விரும்புபவர். அந்த வகையில் பாடசாலைக்கு வருகின்ற அனைத்து மாணவர்களும் தனித்துவம் பேணுவதற்கான வாய்ப்பை பாடசாலை வழங்க வேண்டும் என்று நினைப்பதுடன் தனது அந்தஸ்து எந்த நிலையிலும் பாதிக்க கூடாது என்றும் எண்ணுகின்றனர். சில வேளைகளில் இது மிகவும் சிறிய விடயமாகவும் அமைவதுண்டு. உதாரணமாக தனது சகாவுடன் ஒன்றாக அமர்ந்து கற்றல், விழுமியங்கள, நம்பிக்கைகள், சூழல்மொழி, தனது சமய பழக்கவழக்கங்கள், விளையாடும் ஆர்வம் இவை வகுப்பறையில் இருக்கும் இருவரிடையே எவ்விதமான உயர்வு, தாழ்வு எனும் அந்தஸ்து அற்ற நிலைமை தொடர்பில் தலைமைத்துவம் நியாயமாக நடக்க வேண்டும். நீதி நியாயத்தை மதிக்க வேண்டும்.

இவை சரியாக இனம் காணப்பட்டு குறித்த மாணவர் அதன் வழியில் செயற்பட அனுமதிக்கும் போது பாடசாலை விரும்பி வரும் இடமாக மாறி விடும். இதற்கு வகுப்பாசிரியர்களும் பாட ஆசிரியர்களும் வகை கூற

வேண்டும். மாணவரின் தனியாள் திறன்களை கண்டுபிடித்து அதனை வளர்ப்பதற்கான ஒழுங்குகளை செய்துகொடுக்க வேண்டும். மற்றும் மாணவர் அனைவரையும் ஒரே விதமாக மதிப்பதும் அவசியமானது.

**மேம்பாடுடைய கற்றல்**

மேம்பாடுடைய கற்றலை வழங்கும் முதல் காரணி கற்றல் சூழலும் கற்றலுக்கான வழங்களும். இவை மாணவர் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் முதன்மையானவை. எனவே தான் மாணவருக்கு சிறந்த சூழலை் பாடசாலை உருவாக்கி தர வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

பெரும்பாலும் அனேகரது வீட்டுச் சூழல் படிப்பதற்கு உகப்பானதாக இல்லை. இதனை மாற்றியமைப்பதற்கு பொருளாதாரம் இடம்கொடுப்ப தாயில்லை. எனவே பாடசாலைகள் நல்ல காற்று, வெளிச்சம், சுகாதார வசதிகள், அனைவருக்கும் இருக்கை, வசதியான எழுது கருவிகள், விசை பலகைகள், திரைகள் அமைதியான சூழல், குழுக் கற்றலுக்கான ஏற்பாடுகள், சந்தேகங்களை தீர்ப்பதற்கான வழிமுறைகள் (நூலகம், பரிசோதனைகூடம்) இலவச பாட நூல், கற்றலுக்கான வசதியை ஏற்படுத்தும் ஆசிரியர் அனைத்துப் பாடங்களை நடாத்துவதற்கான வசதிகள் போன்றன இடையராது கிடைக்கும்போது மாணவர்கள் இயல்பாக கற்க முடியும். எனவே அதற்கான வளங்களைப் பெற்று மாணவர் சந்தோசமாக கற்கும் இடமாக வகுப்பறையை மாற்றுவது பாடசாலை அணியினரின் முக்கிய கடமை.

**வழிகாட்டலும் ஆலோசணையும்**

சமூக சூழலானது வேகமாக மாற்றத்திற்குள்ளாகி வருகின்றது. விரும்பியோ விரும்பாமலோ இளைய சமூகத்தினர் அதனை ஏற்க வேண்டியவர்களாகின்றனர். அதில் நல்லவற்றையும் தீயவற்றையும் பகுத்தறிய முடியாது. இங்கு கட்டிளமைப் பருவப் பிள்ளைகள் தடுமாறுகின்றனர். அவ்வாறான மாற்றங்கள் சிலவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம். நவீன தொடர்பாடல் முறைகள, நவீன கற்றல் முறைகள், புதிய தொழில் நிறுவனங்கள், புதிய தொழில்கள், புதிய தொழில் வாய்ப்புகள், தனியார் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இவை தொடர்டபான தெளிவினை மாணவர்கள் பெறுவது அத்தியாவசியமானது. இவை தொடர்பாக பாடசாலையில் ஆலோசனையும் வழிகாட்டலும் இடம்பெற வேண்டும். மாணவர்களும் இதனை எதிர்பார்க்கின்றனர்.

பாடசாலைகளில் இன்று "ஆலோசனையும் வழிகாட்டலும்" என்ற ஓர் பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது. இதன் வாயிலாக மாணவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யலாம். மாணவர்களது கற்றலுக்கும் அவர்களது எதிர்கால தொழில் உலகுக்கும் இடையிலான தொடர்பை வலியுறுத்த வேண்டும். அப்போது மாணவர் தாம் தெரிவு செய்ய வேண்டிய துறையை முறையாக தெரிவு செய்துக்கொள்வர்.

அரச மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் தொடர்பான தெளிவை ஏற்படுத்தும் போது மாணவர் எத்துறையை தெரிவு செய்வதென்ற முடிவை எடுப்பர். அதிகரித்து வருகின்ற தனியார் பல்கலைக்கழகங்கள் பற்றிய அறிவை அவைசார் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு மாணவர்களுக்கு விளக்கம்

கொடுக்க வேண்டும். இவை ஒவ்வொன்றுக்கும் சிறிய அளவிலான செயல்திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த முடியும். இவற்றை கிரமமாக செயல்படுத்தும்போது மாணவர்கள் சரியான துறையில் கற்று தொழில் சந்தையில் தமக்குரிய தொழில் ஒன்றை இலகுவாகக் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் வாழ்வையும் சீராக நடாத்த முடியும். மாணவர் எதிர்ப்பார்ப்பது எதிர்காலத்தில் உயர்வான வாழ்க்கையையே ஆகும்.

**தரமான கல்வி**

தரமான கல்வியானது எதிர்காலத்தில் சிறந்த வாழ்க்கை ஒன்றை அமைப்பதற்கு உதவுவதாக இருக்க வேண்டும். அதற்கான தகுதி விதிகளை கொண்ட கல்வியினை மாணவர் எதிர்ப்பார்க்கின்றனர். இன்றைய சூழல் தொடர்பில் உலகுடன் கல்வி அதிகம் இணைந்துள்ளது. தொழில் சந்தையானது பல்வேறு திறன்களை வேண்டி நிற்கின்றது. புதிய தொழில்நுட்பம், பொருந்துகை தொழில் நுட்பம் *(Appropriate Technology)*, மாற்றுமொழிகள், தொடர்பாடல் பண்புகள், பழக்கவழக்கங்கள், சவால்களுக்கு முகங்கொடுத்தல் இவை அனைத்தினையும் பாடசாலைகள் வழங்க வேண்டும். பின்னர் பல்கலைக்கழகத்திலும் அதன் உயர் தகைமையை பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்க ஆவன செய்ய வேண்டும். இவையே தரமான கல்வியின் அடிப்படைகளாகக் கொள்ளலாம். இதனூடாக இன்றைய மாணவர்கள் சமூகத்தில் உயர்அந்தஸ்துடைய பல்வேறு வழிகளில் நன்மை பயக்கும் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காகவே தரமான கல்வியை பாடசாலைகள் வழங்க வேண்டும். இது மனிதனை பல்வேறு வகைகளில் சுய முகாமை செய்துக்கொள்ளவும் அதனைப் பேணவும் வழியமைப்பதாய் அமையும்.

**மாணவர் விரும்பும் ஆசிரியர்**

ஒவ்வொரு மாணவரும் தமக்கு கற்பிக்கின்ற ஆசிரியர் தொடர்பான ஓர் விம்பத்தினைக் கொண்டுள்ளனர். இது எல்லாத் தன்மையிலும் நேர்த்தன்மை உடையதாகவே காணப்படும். இதற்கு ஆசிரியர் வாண்மைத்துவம் உடையவராகக் காணப்பட வேண்டும். மாணவர் தமது உணர்வுகளை மதிக்கும் ஆசிரியரையே விரும்புவர். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரை அன்பான ஆசிரியர்களையே மாணவர்கள் விரும்புவர். எனவே ஆசிரியர் முதலில் தமது வாண்மைத்துவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்களை மதிப்பவர்களாக உயர வேண்டும். மாணவரை சரியாக புரிந்துக்கொள்ளும் ஆசிரியர் நேர் மனப்பாங்கு கொண்ட ஆசிரியராக விளங்குவார். தேவைப்படும்போது மாணவரது வினாக்களுக்கு சரியாகவும் தெளிவாகவும் பொருத்தமாகவும் விடையளிக்கும் பண்பு கொண்டவராகவும் அமைய வேண்டும். எந்நேரமும் வகுப்பறையைக் கவனிப்பவராக இருக்க வேண்டும். விடுமுறை குறைவான ஆசிரியர், சோர்விலாது கற்பிக்கும் ஆசிரியர் ஆகியோரையே மாணவர் விரும்புவர். எனவே இவற்றை வழங்க தமது சிந்தனை, அறிவு, ஆற்றல் என்பவற்றை தினமும் வளப்படுத்துவதில் ஈடுபடுவது அவசியமாகும். வளமான ஆசிரியரே வளமான சமூகத்தின் ஆரம்பம்.

**பெற்றோரின் சுமையைக் குறைக்கும் கல்வி**

இன்றைய பாடசாலைகள் அதிக செலவுடையவையாகவே காணப்படுகின்றன. அவை நேரடியாகப் பெற்றோரின் மொத்தச் செலவில்

தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. எனவே பெற்றோரின் உழைப்பாற்றலை உயர்த்த வேண்டிய தேவையும் எழுகின்றது. இங்குதான் தாய் தந்தை இருவரும் வேலைக்கு செல்ல வேண்டிய நிலைமையும் உருவாகின்றது. இந்தச் சூழல் பிள்ளையைத் தனிமைப்படுத்துகிறது. இவ்வாறான தனிமையைப் போக்கவே பிள்ளைகள் விரும்புகின்றனர். இதற்கு பொருளாதாரச் சுமை குறைக்கப்பட வேண்டும். தரம் ஒன்றில் சேர்வு, தரம் ஐந்தில் புலமைப்பரிசில் பரீட்சை, தரம் ஆறு சேர்வு, சாதாரணதரப் பரீட்சை என்பன அதிக செலவுடையனவாகின்றன. இதில் அதிக செலவினை ஏற்படுத்துவது தனியார் கல்வி நிறுவனங்களாகும். இவை பல இலட்சங்களைக் கூட தாண்டுகின்றன. இவை மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம். தனியார் கல்வி நிறுவனங்கள் பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் வேலையை பாடசாலைகள் முனைப்பாகச் செய்ய தவறுகின்றன. இதனால் தனியார் கல்வி நிறுவனங்களை மாணவர் நாடிச் செல்வதனால் அதிக செலவு பிடிக்கின்றது.

**முடிவுரை**

பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். அவை அனைத்திற்கும் தீர்வு கிடைக்கும் மத்திய நிலையமாக தமது பாடசாலையை நம்புகின்றனர். இவர்கள் எதிர்ப்பார்ப்பதெல்லாம் மிகவும் குறுகிய தேவைகளையே. இவற்றை நிறைவேற்ற வேண்டிய ஒழுங்குகளை பாடசாலைச் செயலமைப்பு மேற்கொள்வது அவசியம். மாணவர் ஒருவரது தனித்துவம், தேவை என்பவற்றை உடனடியாகச் சரியாக இனங்காணக்கூடியவர் ஆசிரியர். அதேபோல மாணவர் நினைக்கின்ற தீர்வுகளைத் திட்டமிடக்கூடியவராகவும் ஆசிரியர் இருப்பார்.

ஆசிரியர்களே மாணவர்களை இயல்பான கற்றலுக்கு கொண்டுவர முடியும்.இதற்கு பொருத்தமான அணுகுமுறைகள் வேண்டும். உதாரணமாக ஆசிரியர் தாம் கற்பிக்க வேண்டிய விடயப் பரப்பு என்பவற்றை தெளிவாக முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். இவை பற்றி மாணவருக்கு முன்கூட்டியே விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டும். காலையில் நேரத்துடன் பாடசாலைச் செல்ல வேண்டும். பாடக்குறிப்புத் தயாரிப்புக்களை முதல் நாளே செய்து முடித்திருக்க வேண்டும். வகுப்பறை நேரத்தில் கைப்பேசிகளை நிசப்தத்தில் வைத்திருக்க வேண்டும்.மேலும் சில மாணவரை நலம் விசாரிக்க வேண்டும். இந்த ஒழுங்கு இயல்பாக நடைபெற வேண்டும். தற்சமயம் மாணவர் வீட்டு உறவினர் சுகயீனம் கண்டிருப்பதை அறிந்தால் ஆர்வத்துடன் சுகம் விசாரியுங்கள். திடீர் மாற்றங்களை வகுப்பறையில் செய்யாதீர்கள். பாடத்தை ஆரம்பித்து இடையில் சற்று கடுமையாக இருங்கள். எல்லோருக்கும் பொருத்தமான மதிப்பீடு மற்றும் பின்னூட்டலை செய்யுங்கள். பாட முடிவில் மென்மையாக இருங்கள். சந்தோசமாக வகுப்பை விட்டு வெளியேறுங்கள். முயற்சி செய்தால் வெற்றி காணலாம்

# வகுப்பறையிலிருந்து வாழ்க்கைக்கு...

✸ க.சுவர்ணராஜா

பிள்ளைகளின் இயற்கையான திறன்களை வளரவிடாமல் முளையிலே கிள்ளியெறிந்துவிடும் அபாயம் சில ஆசிரியர்களின் மூலம் வெளிப்படுகின்றது. இந்த ஆசிரியர்களிடம் மாணவர்களின் எதிர்காலம் ஒப்படைக்கப்படும் போது பிள்ளைகளின் எதிர்காலம் எப்படியிருக்கும்? இவை குறித்து இன்றைய பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகின்றது.

தமது பிள்ளைகள் பொதுப்பரீட்சைகளில் உயர் புள்ளியை பெற வேண்டும் என துடிக்கும் பெற்றோர்களின் மத்தியில் தமது பிள்ளைகளின் ஆரோக்கியமான எதிர்காலம் குறித்து சிந்திக்கும் பொருந்தொகையான பெற்றோர்களும் உள்ளனர்.

பிள்ளைக்கு என்ன தெரியும்? பிள்ளையைப் பற்றி எனக்கென்ன தெரியும்? என்ற அலைவரிசையில் இயங்கும் ஆசிரியர்களும் நம் மத்தியில் உள்ளனர். இவர்கள் பிள்ளைகளின் விருப்பங்கள், தேவைகள் பற்றி அறிய முற்படுவதோடு அவர்களுக்குள் உள்ள திறமைகளை, ஆற்றல்களை இனங்காண விளைகின்றனர்.

வகுப்பறையில் பிள்ளைகள் செலவிடும் ஒவ்வொரு நிமிடத்தையும் அப்பிள்ளைகளின் எதிகால வாழ்வின் முன்னேற்றத்திற்காக எவ்வாறு பயன்படுத்தலாம் என ஆசிரியர்கள் கவனமாகச் சிந்திக்கும்போது அவர்களின் கற்றலும் கற்பித்தலும் அர்த்தமுடைய ஒரு செயலாக மாறும். மேலும் பிள்ளைகளின் நேரமும் பெறுமதியுடையதாக மாறிவிடும்

பிள்ளைகள் தமது ஆசிரியர்களிடம் அவர் கற்பிக்கும் விடயத்தினை மட்டும் கற்றுக்கொள்வில்லை. அவரையும் கற்றுக்கொள்கின்றனர். பொதுவாகப் பிள்ளைகள் ஆசிரியர்களின் நடத்தைகளையும் நன்கு அவதானிக்கின்றனர். அந்த நடத்தைகளை உடனே அல்லது பின்னர் பின்பற்ற முயலுகின்றனர். உதாரணமாக நேரமுகாமைத்துவத்தை நன்கு கடைப்பிடிக்கும் ஆசிரியர்களிடம் கற்கும் பிள்ளைகள் நேர முகாமைத்துவம் தொடர்பான அக்கறை கொண்ட பிள்ளைகளாக மாறிவிடுகின்றனர். நன்கு திட்டமிடாது வரும் ஆசிரியர்களிடம் கற்கும் பிள்ளைகள் திட்டமிடாத வகையில் இயங்குவதற்கு கற்றுக்கொள்கின்றனர்.

**கட்டுரையாளர்**

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார் சுவர்ணராஜா

மிக அண்மையில் 10 ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலை மேற்பார்வை செய்ய வேணடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அவர்களின் வகுப்பறைக் கற்பித்தலில் அவர்கள் எப்படி பாடத்தினை ஆரம்பிக்கின்றனர் என தேடிப்பார்த்த போது கிடைத்த முடிவுகள் பின்வருமாறு அமைந்தது

| | | |
|---|---|---|
| நேற்று என்ன படித்தோம் | 6 | 60% |
| வீட்டு வேலைகள் செய்துக் கொண்டுவந்தீர்களா? | 1 | 10% |
| கடும் வெப்பமாகவுள்ளது எப்படி படிப்பது? | 2 | 20% |
| நான் கரும்பலகையில் எழுதியுள்ள தலைப்புப் பற்றி நீங்கள் அறிந்தவற்றை கூறுங்கள் | 1 | 10% |

மேற்கண்டவாறு 10 ஆசிரியர்களின் பாடஆரம்பம் நிகழ்ந்தது. இதில் 60%மான ஆசிரியர்கள் நேற்று என்ன படித்தோம் என்பதில் தொடங்கினார்கள். ஏன் இப்படி பாடத்தை ஆரம்பிக்கின்றார்கள் என தேடிப்பார்த்த போது சில ஆசிரிய கல்வியலாளர்கள் கூறிய பதில் பின்வருமாறு அமைந்தது.

- முதல் நாள் கற்பித்த விடயத்தை ஆசிரியர் மறந்திருக்கலாம்
- முதல்நாள் படித்தது தொடர்பாக மாணவரின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கலாம்
- ஆசிரியரின் இன்றைய நாளுக்குரிய திட்டமிடல் இல்லாமல் வந்து நேரத்தைக் கடத்தலாம்
- ஆசிரியர் புதியதொரு நாளை ஆக்கப்பூர்வமாக ஆரம்பிக்க ஆர்வமில்லாமல் இருக்கலாம்

*மேற்கண்டமுடிவுகளின்படி இந்த ஆசிரியர்களிடம் கற்கும் பிள்ளைகள்*

- திட்டமிடல் தொடர்பான பிழையான எண்ணக்கருவை கற்றுக் கொள்ளலாம்.
- மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் முறை பற்றி சரியான எண்ணக்கரு பற்றிச் சிந்திக்கலாம்.
- நேரத்தை எவ்வாறு கடத்தலாம் என்பது பற்றிய பிழையான கற்றல் பிள்ளைகளிடம் ஏற்படலாம்.
- ஒரு புதிய நாளை எப்படி ஆரம்பிக்கலாம் என்பது பற்றிய கற்பனை, கற்றல் பிள்ளைகளிடம் இடம்பெறாது போகலாம்.

ஆசிரியர்களின் இத்தகைய நடத்தை பிள்ளைகள் எதிர்காலத்தில் முறையான திட்டமிடலின்றி எதனையும் செய்யலாம் என்பதை கற்றுக்கொள்ளவதை மறைமுகமாக ஊக்குவிக்கலாம்.

அதுமட்டுமின்றித் திட்டமிடலாசிரியர்களை பிள்ளைகள் வெறுப்பதோடு, அவரது பாடத்திலும் விருப்பமின்றி நடந்துக்கொள்ளலாம்.

**வீட்டு வேலை செய்து கொண்டு வந்தீர்களா? என பாடத்தை ஆரம்பித்தல்**

உரியஆசிரியர்கள் ஏற்கனவே வீட்டு வேலைகளை பிள்ளைகளுக்கு வழங்கியிருந்தால் மட்டுமே சாத்தியமாகும். இவ்வாறான பாட ஆரம்பம் மாணவர்களின் முன் ஆயத்த நிலையை, அல்லது செயலாற்றுகையை கணிப்பிடுவதாக அமையும்

- உரிய வீட்டுவேலைகளை ஒழுங்காக செய்து கொண்டு வரவேண்டும்
- உரிய வேலைகளை உரிய நாளில் உரிய நேரத்தில் முடிக்கவேண்டும்
- யாருக்காவது ஏதாவது கடமைகளை ஒப்படைத்தால், பொறுப்பு வழங்கினால் அது பற்றி தொடர்ச்சியான தேடல் அவசியம்

இதுபோன்ற விடயங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்வதற்கு இவ்வாறான பாட ஆரம்பம் தூண்டுதலாக அமையலாம்.

**கடும் வெப்பமாகவுள்ளது எப்படி படிப்பது என்ற பாட ஆரம்பம் எதனை காட்டுகிறது.**

- ஆசிரியர் வெப்பமான காலத்தில் கற்பிப்பதற்கான நுட்பங்களைக் கொண்டிருக்கவில்லையா?
- வெப்பமான காலத்தில் படிக்க முடியாது என்ற கருத்தை மாணவரிடத்தே ஏற்படுத்த நினைக்கின்றாரா?
- வெப்பமான காலத்தில் படிக்காமல் இருப்போம் என்பதற்கான ஆதரவை மாணவரிடமிருந்து திரட்டுகின்றாரா?

இவை போன்ற வினாக்களை இவ் வகையான பாடஆரம்பம் எம்மிடத்தே ஏற்படுத்துகின்றது. கடும் வெப்பமாக உள்ளது எப்படி படிக்கலாம் என்ற வினாவிற்கு மாணவர்கள் பின்வருமாறு விடையளிக்கலாம்.

- படிக்காமல் இருப்போம்
- வகுப்பறைக்கு வெளியிலே சென்று மரநிழலின் கீழிலிருந்து படிப்போம்
- படிக்காமல் ஓய்வாக இருப்போம்

என்பதாக அமையலாம், பெரும்பாலான மாணவர்கள் படிக்காமல் இருப்பதை விரும்பினால், அவர்கள் கடும் வெப்பம் நிலவும் காலங்களில் கற்காமல், சோம்பி இருப்பதை ஆதரிப்பதாகவும் அமையலாம்.

**நான் கரும்பலகையில் எழுதியுள்ள தலைப்புப் பற்றி நீங்கள் அறிந்தவற்றை கூறுங்கள் என பாடத்தை ஆரம்பிக்கும் நுட்பமானது**

- மாணவர்களின் கருத்தை அறியும் ஆவலை வெளிக்காட்டுகின்றது
- பிள்ளைகள் எல்லோரும் பாடத்துடன் இதணைதல் வேண்டுமென எதிர்பார்ப்பினை உருவாக்கின்றது
- பிள்ளைகளின் துடிப்பான பங்கேற்பினை வலியுறுத்துகின்றது
- பிள்ளைகளின் சரியான விடை, தவறான விடை என்பவற்றை கூர்ந்து பதிலளிக்க வேண்டும் என்ற கடப்பாட்டினை உருவாக்குகின்றது

- பிள்ளைகளின் விடைகள், நேர்மறையாக, எதிர்மறையாக, மகிழ்ச்சிகரமானதாக, வேடிக்கையானதாக அமையலாம்

இத்தகைய பாட ஆரம்பம் மாணவரிடத்தே

- சுதந்திரமான பங்குபற்றல்
- தன்னார்வப் பங்குபற்றல்
- வித்தியாசமான முறையில் விடையளிக்கும் ஆர்வத்தை மேம்படுத்தல்
- உடனடித் துலங்கல்

இவை போன்ற திறன்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு சாதகமாக அமையலாம்.

**பாடத்தை ஆரம்பித்தல் தொடர்பாக கல்வியியலாளர்கள் பின்வருமாறு கூறுகின்றனர்**

"பாட அறிமுகமானது கற்பித்தலில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆசிரியர் கற்பிக்கும் விடயத்தை மாணவர் தம் மனதில் பதியவைத்துக் கொள்வதற்கான சூழ்நிலை பாட ஆரம்பத்திலேயே ஏற்படுத்தப்பட வேண்டும். நல்லமுறையில் ஆரம்பிக்கபட்ட ஒரு விடயம் அரைப்பங்கு முற்றுபெற்றதாகும்."

"பாடஅறிமுகம் என்பது, நாம் குறிப்பிடும் போது அதற்கும் மாணவர்கள் கற்கப் போகும் விடயத்திற்கும் தொடர்பில்லாத ஒரு நிலையை எவரும் கருத்திற் கொள்ளக்கூடாது. மாணவர் கற்கப்போகும் புதிய பாடப் பொருளுடன் ஏதோ ஒருவகையில் தொடர்புடையதாக அது அமைவது முக்கியமாகும். இல்லையேல் பாட அறிமுகம் வீண் அரட்டையாகிவிடும்."

*(வ.ஆறுமுகன், வகுப்பறைக் கற்பித்தல், 1994)*

"பாடங்களைக் கற்கும்போது வகுப்பறையில் பார்வைக்கு வைக்கப்படும் விடயங்களை உருவாக்குவதற்கும் பாட உள்ளடக்கத்தை விருத்தி செய்வதற்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் முன் அறிவுடனும் அவர்களது அனுபவங்களுடனும் தொடர்புபடுத்தி நடத்தையைக் கட்டியெழுப்புவார்கள்."

*(கலாநிதி. ஜெரேப்ரோ.்.பி, கற்பித்தல் 2007)*

மாணவர்கள் பாடங்களையும் செயற்பாடுகளையும் முன்கூட்டியே ஒழுங்கபடுத்தி ஆரம்பிப்பதன் மூலம் கற்றல் தொடர்பான திசைமுகப் படுத்தலை நிறுவுவதன் பெறுமதியை ஆராய்ச்சிகள் எடுத்துகாட்டுகின்றன. செயற்பாட்டின் இயல்பையும் நோக்கத்தையும் அறிவித்தல் மாணவர்களிட முள்ள முன்னறிவுடன் அதனைத் தொடர்புபடுத்தல், செயற்பாட்டிற்கு பொருத்தமான விதத்தில் துலங்குவதற்கு வழிகாட்டுதல் முதலான அறிமுகங்கள் மாணாக்கர்கள் கற்பதற்கு உதவும்.

முன்கூட்டியே ஒழுங்கமைத்துக் கொள்ளும் ஆசிரியர்கள் மாணாக்கர்கள் எதைக் கற்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி கற்பித்தலை ஆரம்பிப்பதற்கு முன்னரே மாணாக்கர்களைத் திசைமுகப்படுத்தி விடுவார்கள்.

ஆவசியமான முன்னறிவு மாணாக்கர்களிடம் உள்ளதென்பதை உறுதிப்படுததுவதற்காகவும் இவ்வறிவை இயக்கிச் செயற்படுத்துவதற்காகவும்

பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆசிரியர் பாட உள்ளடக்கத்தைப் பற்றிக் கலந்துரையாடல் செய்ய வேண்டும்.

*(கலாநிதி ஸ்டெல்லா வொஸ்னியாபிள்ளைகள் எவ்வாறுகற்கிறார்கள். 2008)*

பாடத்தில் மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்காக பின்வறுமாறுஆசிரியர்கள் செயற்படலாம் என (கலாநிதி.ப.கா. பக்ஷீர்ஜ.். பார் "வெற்றிகரமான வகுப்பறைக் கற்பித்தல்" (2007) என்ற நூலில் கூறுகின்றார்).

கற்றல் செயற்பாட்டினை தொடங்கும்போது கடந்தகால மற்றும் நிகழ்கால கற்றல் அனுபவங்களிடையே தொடர்பை ஏற்படுத்துவதாக செயற்பாடுகள் அமைய வேண்டும்.

தற்போதைய செயற்பாடுகள் பலன் அல்லது விளைவுகளை நோக்கியதாக மாணவர்களின் சிந்தனையை ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

பாட ஆரம்பம் மாணவர்களிடையே இரசனை, ஆவல் என்பவற்றை உண்டாக்கும் வினாக்களையும் பிரச்சினைகளையும் எழுப்புதல் எண்ணக் கருத் தலைப்பு பற்றி மாணவர்களின் தற்போதைய அறிவுடன் தொடர்புடைய துலங்கல்களை வெளிக்கொணர ஊக்குவித்தல் வேண்டும்.

பாட ஆரம்பத்தில் ஆசிரியரினால் மேற்கொண்ட செயற்பாட்டினால் இது ஏன் நிகழ்ந்தது. இது தொடர்பாக ஏற்கனவே எனக்கு என்ன தெரியும்? இதைப்பற்றி என்னால் எதைக் கண்டுபிடிக்க முடியும்? இப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட முடியும் போன்ற நடத்தைகள் மாணவரிடத்தே வெளிப்படல் வேண்டும்.

பாட ஆரம்பத்தின் முதல் 10 விநாடிகளில் பிள்ளைகளின் ஆர்வத்தை, கவனத்தை ஈர்த்துக்கொள்ள முடியாத ஆசிரியர்கள் பெரும்பாலும் அன்றைய கற்பித்தலில் தோல்வி அடைகின்றார்கள். ஏனெனில் இளமையும் துடிப்புமுள்ள பிள்ளைகள் ஒவ்வொரு நிமிடத்தையும் புதிதாக ஆக்கப்பூர்வமாக எதிர்பார்க்கின்றார்கள்.

பாட ஆரம்பத்தினை சுவையாகவும், பிள்ளைகள் அதனை பொருத்த மாகவும், ஆர்வமாகவும் பின்பற்ற பின்வரும் நுட்பங்களைக் கையாளலாம்.

- புன்னகையோடு மாணவரை நோக்குதல்.
- பாடத்தினை நேரடியாக ஆரம்பிக்காது இருத்தல்.
- நகைச்சுவையோடு பாடத்தினை ஆரம்பித்தல்.
- புதிர்களோடு ஆரம்பித்தல்.
- மாணவரிடத்தே திறந்த வினாக்களை வினவுதல்.
- பிரதிபலிப்புடன் பாடத்தினை ஆரம்பித்தல்.
- பிள்ளைகளை வாழ்த்துவதோடு பாடத்தினை ஆரம்பித்தல்.
- விளையாட்டுக்கள் ஊடாகப் பாடத்தினை ஆரம்பித்தல்.

என்பனவாகும்.

**பாட ஆரம்பத்தில் புதுமையை விருத்தியாக்கும் வழிமுறைகள் பின்வருமாறு அமைகின்றது.**

- மூளைக்கலக்கல்
- கருதுகோள் அமைத்து பரிசோதித்தல்
- வாசிப்பு விருத்தி
- ஊக்குவிப்பு
- மாறுபட்ட வினாக்கள்
- கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- சுய கற்றல் விருத்தி
- செய்தி சேகரிப்பு
- ஆராய்வு
- வகுப்பறைச் சூழல் மாற்றம்
- படைப்புகளை மதித்தல்
- வழக்கத்திற்கு மாறான வினாக்கள்
- ஆசிரியர் மாணவர் பரஸ்பர கருத்துப் பரிமாற்றம்
- மாணவரைக் கேலி செய்யாதிருத்தல்
- விளையாட்டு மனப்பான்மை

என்பனவாகும்.

பாடத்தினை தினமும் புதியதொரு முறையில் ஆரம்பிப்பதை ஆசிரியர்கள் ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக

- சில ஆசிரியர்கள் தினமொரு பாடலை பாடத்திற்கேற்றதாக இயற்றி பாடிக்காட்டுவார்கள். இந்த ஆசிரியரின் பாடலுக்காக பிள்ளைகள் காத்திருப்பர். பிள்ளைகளின் இரசிக்கும் ஆற்றல் உயர்வடையும்.
- சில ஆசிரியர்கள் பாடத்துடன் ஒட்டிய புதிய செய்திகளோடு பாடத்தினை ஆரம்பிப்பர். பிள்ளைகளின் தேடல் ஆற்றல் உயர்வடையும்.
- சில ஆசிரியர்கள் பாடத்துடன் ஒட்டிய படங்கள், ஒளி துணுக்குகள் போன்ற காணபியங்களோடு பாடத்தினை ஆரம்பிப்பர். இதனால் பிள்ளைகளின் கட்புல ஆற்றல் கண்டுபிடிக்கும் ஆற்றல் என்பன விருத்தியடையும்.
- சில ஆசிரியர்கள் பாடத்துடன் ஒட்டிய விளையாட்டுகளுடன் பாடத்தினை ஆரம்பிப்பர். பிள்ளைகளின் அணியாக இயங்கும் திறன்கள், நேர்மறைச் சிந்தனை என்பன விருத்தியடையும்.
- சில ஆசிரியர்கள் பிள்ளைகளை இருக்கையிலிருந்து எழுப்பி அமரச்செய்யும் முறைகளை வேடிக்கையாகச் செய்து பாடத்தினை ஆரம்பிப்பர். இங்கு பிள்ளைகளிடையே புத்தாக்கம் அதிகரிக்கும்.

ஆகவே ஆசிரியர்களின் பாட ஆரம்பம் பிள்ளைகளின் கற்றலையும் எதிர்கால வாழ்க்கைக்கான திறன்களையும் தருகின்றது. இவை தொடர்பில் ஆசிரியர்கள் தமது அறிவையும் ஆற்றுகையையும் திட்டமிடலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

# வெளிவாரி மேற்பார்வையும் வலயக் கல்விக் காரியாலயங்களும்

✷ கி.புண்ணியமூர்த்தி

1987ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் தோற்றம்பெற்றன. இதனடிப்படையில் 8 மாகாணங்களுக்கும் (வடகிழக்கு இணைந்த) 8 மாகாணக் கல்விக் காரியாலயங்கள் உருவாக்கப்பட்டன. 1987 இலக்கம் 42 மாகாண சபைகள் சட்டம், பாராளுமன்றத்தில் நிறைவேறிய பின்னர் அதிகாரப் பரவலாக்கம் இடம்பெற்றது. இப் பரவலாக்கத்தின் கீழ் முதலில் இடம்பெற்றது கோட்டக் கல்விக் காரியாலயங்கள் தோற்றம் பெற்றதாகும். தற்போது 9 மாகாணக் கல்விக் காரியாலயங்களும் 98 வலயக் கல்விக் காரியாலயங்களும் 306 கோட்டக் கல்விக் காரியாலயங்களும் நடைமுறையிலுள்ளன.

முகாமைத்துவச் செயன்முறை முக்கிய 5 பகுதிகளைக் கொண்டிருக்கும். அவையாவன: தீர்மானமெடுத்தல், முறையியல்களைக் கண்டறிதல், ஒழுங்கமைப்பு, நெறிப்படுத்தல் மேற்பார்வை என்பனவாகும்.

மேற்பார்வை என்பது ஒரு தனிமனிதர் அல்லது ஒரு குழுவினர் ஈடுபட்டுள்ள பணியை மேம்படுத்துவதைப் பிரதானமான நோக்கமாகக் கொண்டு தனியாளினாலோ அல்லது ஒரு குழுவினராலோ மேற்கொள்ளப்படும் ஒரு பணியாகும். பாடசாலை முகாமையின்போது மேற்பார்வை செய்யப்படும் பிரதானமான மூன்று பரப்புக்கள் உள்ளன. மாணவரின் நடவடிக்கைகள், வரவும் ஒழுக்கமும், கலைத்திட்டம் ஆகியனவே அவையாகும். எனினும் முகாமையாளரின் முக்கியமான மேற்பார்வைப் பணிகள் கலைத்திட்ட அமுலாக்கலுடன் தொடர்புறும். (Govton -1970)

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் உள்வாரி,வெளிவாரி மேற்பார்வைகள் இடம்பெறும். உள்வாரி மேற்பார்வை பாடசாலை மட்டத்திலும் வெளிவாரி மேற்பார்வை கோட்ட, வலய, மாகாண, கல்வி அமைச்சு மட்டத்திலும் இடம்பெறும்.

**வலய மட்ட மேற்பார்வை**

பாடசாலையாலும் கோட்டக் கல்வி அதிகாரியாலும் முன்வைக்கப்படும் மதிப்பீட்டுத் திட்டங்களையும் அறிக்கைகளையும் பரிசீலனை செய்து வலயத்திலுள்ள பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஊடாகப் பின்னூட்டல் நிகழ்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நோக்கிலும் வலயத்தின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டும் மேற்பார்வை இடம்பெறும்

**கட்டுரையாளர்**

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். புண்ணியமூர்த்தி

அந்தந்த துறைகளுக்குரிய கல்விக் கோட்பாடுகளைக் கவனத்தில் கொண்டு வெளிவாரி மதிப்பீட்டின் ஊடாகப் பாடசாலை முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து சுருக்க அறிக்கையை 2 வாரங்களுக்குள் பாடசாலைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதேபோல் வலயத்தின் வெளிவாரி மதிப்பீடு தொடர்பான சுருக்க அறிக்கையை 4 மாதங்களுக்கொரு தடவை கல்வி அமைச்சின் முகாமைத்துவ அலகின் பணிப்பாளருக்குரிய பிரதியுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

முன்னர் மேற்பார்வைக்காக மட்டுமென மட்டுப்படுத்தப்பட்டிருந்த வலயக் கல்விக் காரியாலயங்களின் பணிகள் தற்போது வெளிக்கள மேற்பார்வையுடன் மாத்திரமன்றி பின்வரும் பிரதான செயற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளன.

1. பொதுக்கல்விக்குரிய அனைத்து நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள்
2. கலைத்திட்ட நடைமுறை தொடர்பான சூழ்நிலைகளை நிர்வகித்தல்
3. ஆசிரிய சேவைக்காலப் பயிற்சி
4. அபிவிருத்தித் திட்டமிடல்
5. வளப் பகிர்வு
6. கல்வி முகாமைத்துவத் தகவல் தொகுதிகளை (EMIS) நடைமுறைப்படுத்துதல்
7. மாகாணக் கல்விக் காரியாலயம் மற்றும் கோட்டக் கல்விக் காரியாலயம் ஆகியவற்றுக்கிடையிலான நடுவராகத் தொழிற்படுதல்
8. திட்டமிடல் பிரிவின் கீழ் வலயத் திட்டமிடல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

எனினும் சில வலயக் கல்விக் காரியாலயங்கள் தமது பணிகளை முறையாக ஆற்றாத சூழ்நிலைகள் அவதானிக்கப்படுகின்றன. பாடசாலைகளில் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வகிபாகத்தைக் கொண்டவர்களாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் காணப்படுகின்றனர். ஆனால் புறநடையாகச் சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பிரச்சினைகளை உருவாக்குபவர்களாக உள்ளனர்.

**மேற்பார்வையின் முக்கியத்துவம்**

1. மேற்பார்வை கடந்த காலத் திட்டமிடல், செயலடைவு என்பவற்றை வெளிப்படுத்தும்.
2. பூரணமான கற்றல் செயன்முறையில் பண்பு ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி அல்லது பின்னடைவை வெளிப்படுத்தும்.
3. ஒரு நிறுவனம் அல்லது பாடசாலை செல்ல வேண்டிய திசை, அபிவிருத்தி செய்ய வேண்டிய பிரிவுகள், இல்லாதொழிக்க வேண்டிய குறைபாடுகள், அதிகளவு உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள், நிதியைப் பயன்படுத்த வேண்டிய துறைகள் போன்றவற்றை வெளிப்படுத்தும்.

4. பாடசாலையின் அனைத்து மனித வளங்கள் குறிப்பாக அதிபர், பிரதி அதிபர், பிரிவுத் தலைவர், தரப் பொறுப்பாளர், வகுப்பாசிரியர், பாடப்பொறுப்பாசிரியர், கல்விசாரா ஊழியர்கள் போன்ற அனைவரினதும் தொழில்வாண்மை விருத்தியை ஏற்படுத்தும் அதேவேளை மேலும் விருத்தி செய்ய வேண்டிய துறைகளை வெளிப்படுத்தும்.

5. நிறுவனத்தின் பலத்தை மாத்திரமின்றி பலவீனத்தையும் வெளிப்படுத்திக் காட்டும்.

6. வளப்பற்றாக்குறையை இனங்காணல், வளங்களைப் பெற்றுக் கொள்ளும் வழிகளைக் கண்டறிதல் போன்றவற்றுக்கு உதவும்.

7. வளங்களின் வினைத்திறனான, விளைதிறனான பயன்பாட்டுக்கு உதவும்.

பாடசாலை மேற்பார்வை தொடர்பாகக் குறிப்பிட்ட ஒரு வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. இது தொடர்பாகத் தகவல் திரட்டியபோது பல விடயங்களைக் கண்டறியக்கூடியதாக இருந்தது. குறிப்பிட்ட அந்த வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் 5 வருடமாகப் பணியாற்றி வருகின்றார். அவர் கல்வி நிர்வாக சேவையின் 1ம் வகுப்பு அதிகாரியாவார். வலயக் கல்விக் காரியாலயத்துக்குட்பட்ட பாடசாலை மேற்பார்வை தொடர்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) அவர்களின் தலைமையில் குழு ஒன்றை உருவாக்கியுள்ளார். அவர் பாடசாலை மேற்பார்வையைத் திட்டமிடுவதுடன் மேற்பார்வைக் குழுவை பாடசாலைகளில் ஈடுபடுத்தி மேற்பார்வையில் ஈடுபடுவார். பொருளுள்ள கற்றல், கற்பித்தல் செயன்முறையை விளைதிறனுடன் நடத்திச் செல்வதற்கு உதவும் ஒத்துழைப்புச் செயன்முறையே மேற்பார்வையாகும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் பெரும்பாலும் இந்த மேற்பார்வையில் பங்குபற்றுவார். வலய மேற்பார்வைக்காகப் பெரும்பாலும் முன்கூட்டியே தெரிவிக்காமல் பாடசாலைகளுக்குச் செல்வதே வழமையாகும். ஆனால் சில பாடசாலைகளுக்கு முன்கூட்டியே தகவல்கள் கசிந்துவிடும் எனவும் அப் பாடசாலையின் ஆசிரியர்கள் திடீரென அறிவிக்கும் சுகயீன விடுமுறைத் தொலைத் தபால் *(Tele Mail)* மூலம் இதனை ஊகித்துக்கொள்ள முடியும் எனவும் ஒரு அதிபர் தெரிவித்தார். ஏற்கனவே தெரிந்துவிட்டது என்பதை வலயக் கல்விப் பணிப்பாளர் அறிந்து கொண்டால் "நீங்கள்தான் கூறியிருப்பீர்கள்" எனக் குறிப்பிட்ட ஓரிரு ஆசிரிய ஆலோசகர்களைக் காரசாரமாகத் திட்டித் தீர்ப்பதாகப் பாதிக்கப்பட்ட ஒரு ஆசிரிய ஆலோசகர் குறிப்பிட்டார்.

மேற்பார்வையின்போது குறிப்பிட்ட வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அவருடன் வருகை தரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் மகிழ்ச்சிகரமான ஒத்துழைப்பு வழங்காமையைப் பல அதிபர்களும் ஆசிரியர்களும் அவதானித்துள்ளனர். ஒரு 1C பாடசாலை அதிபர் தனது அனுபவத்தைப் பகிரும்போது, தமது பாடசாலையில் வெளிவாரி மேற்பார்வை முடிவடைந்தவுடன் இடம்பெற்ற

ஆசிரியர் கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவிதமாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஒருவிதமாகவும் கோட்டக்கல்வி அதிகாரிகள் வேறு ஒரு விதமாகவும் கருத்துக்கூறியதாகக் குறிப்பிட்டார். குறிப்பாக தரம் 1 சீர்திருத்தம் தொடர்பில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது. "தரம் 1 இல் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பாக தரம் 1 ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அதன்படியே கட்டாயமாகத் தரம் 1 ஆசிரியர்கள் நடந்துகொள்ள வேண்டும்" என வலயக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

என்ன மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன எனக் குறிப்பிட முடியுமா? என ஒரு ஆசிரியர் கேட்டார். அதற்கு "அது தொடர்பில் எனக்குத் தெரியாது. நீங்கள் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்" என வலயக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டதுடன் "இப் பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் குதர்க்கவாதிகள் என்பதை நான் முன்னரே கேள்விப்பட்டுள்ளேன். அது உண்மைதான் என்பதை இப்போது அறிகிறேன்" என்றார். அப்போது உடனே எழுந்த ஆரம்பக் கல்விக்கான பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர், "தரம் 1 சீர்திருத்தத்தில் தானும் பெரும் பங்கு வகித்ததாகக் குறிப்பிட்டார். எந்தக் காரணம் கொண்டும் பிள்ளையை எழுதப் பழக்குதல் கூடாது என்றார். பூரணமாக வழிப்படுத்தப்பட்ட விளையாட்டுக்களையே பின்பற்ற வேண்டும்" என்றார். அப்போது எழுந்த ஒரு ஆசிரியர் "தரம் 1 இல் விளையாடி விட்டு தரம் 2 இல் எவ்வாறு எழுத ஆரம்பிப்பது, தரம் 2 இல் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்துக்கு எவ்வளவு எழுத வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். அதற்கு ஆத்திரமடைந்த பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர் "குதர்க்கமாகக் கதைக்கக் கூடாது. கதைத்தால் உமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்" என்றார். அதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் "அது உமது வேலையில்லை. அதை நான் பார்த்துக்கொள்கிறேன். உமக்குப் பதில் சொல்லத் தெரிந்தால் சொல்லும். இல்லையென்றால் பேசாமல் கதிரையில் அமரும்" என்றார்.

வகுப்பறை மேற்பார்வையில் ஈடுபட்ட ஆசிரிய ஆலோசகர்களில் ஒவ்வொருவரும் புதிய பாடத் திட்டமிடலை (பாடக் குறிப்பு) எழுதும் முறை தொடர்பில் வெவ்வேறுபட்ட விளக்கங்கள் வழங்கியதாக ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். ஒருவர் தேர்ச்சிக்கும், தேர்ச்சி மட்டத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார். மற்றொருவர் கற்றல் பேறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார். பிரதிபலித்தல் தொடர்பில் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். நாம் எதை அனுசரிப்பது என்பது குழப்பமாக உள்ளது என ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ஆசிரியர் லீவு தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவிதமாகவும், மாகாணக் கல்விப் பணிப்பாளரை ஆதாரம் காட்டி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேறுவிதமாகவும் கருத்துக் கூறுகின்றனர். ஒரு ஆசிரியர் பின்வருமாறு வினவினார். "எமது பாடசாலையில் கடமை முடிந்து செல்வதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் குறுகிய கால லீவு தருவதை அதிபர் மறுக்கின்றார். ஆனால் இதே வலயத்தில் வேறு பாடசாலை

ஆசிரியர்கள் இதை அனுபவிக்கின்றார்கள். இதனால் எமது அடிப்படை உரிமை மீறப்படுகிறது" எனக் குறிப்பிட்டார். அதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைக்கு வருவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரோ பாடசாலையை விட்டு வருவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரோ ஆசிரியர்கள் குறுகியகால லீவு பெற முடியும் என்றார். ஆனால் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் "அதிபர் மறுப்பது சரியானதே. ஆசிரியர்கள் இந்த வகையான குறுங்கால லீவைப் பெற முடியாது" என்றார்.

உண்மையில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் கூறுவதே சரியானதாகும். ஆசிரியர்கள் இவ்வாறான லீவைப் பெறுவது சட்டமுரணானதாகும்.

ஆசிரியர்களுக்குக் காலங் கடந்த விடுமுறை இல்லை என கோட்டக் கல்வி அதிகாரி குறிப்பிட்டார். இதை அவருடன் வந்த ஆசிரிய ஆலோசகரும் ஆமோதித்தார். ஆனால் பட்டப் பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறியைப் பின்பற்றும் ஆசிரியர் ஒருவர், தாபன விதிக்கோவை XII உபவிதி 10 இன் படி ஒரு ஆசிரியர் தனக்குரிய ஓய்வு லீவினைச் செலவிட்ட பின்னர் மேலும் லீவு வேண்டுமாயின் ஏதாவது தொடர்ந்த இரண்டு வருட காலத்தில் பயன்படுத்தப்படாத லீவுகளிலிருந்து 25 நாட்களுக்கு மேற்படாத லீவினைப் பெற முடியும். இந்த லீவினை ஏதாவது ஒரு வருடத்தில் ஒரு முறைக்கு மேல் பயன்படுத்த முடியாது என்றார். இதனை வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்தினார்.

வலயக் கல்விக் காரியாலயத்தால் மேற்கொள்ளப்படும் மேற்பார்வை, பிழை பிடிப்பதை நோக்கமாகக் கொண்டு அமைவதாலேயே அதனை எதிர்நோக்க ஆசிரியர்கள் தயங்குவதாக அதிபர் தெரிவித்தார். அத்துடன் அவர்களுக்குப் பாடசாலையின் உள்ளகச் சூழ்நிலை விளங்குவதில்லை. வேறு பாடசாலைகளை உதாரணம் காட்டிப் பேசுவார்கள். ஆனால் இப் பாடசாலையில் இருக்கும் வளங்கள், வசதிகள் பற்றிக் கவலை கொள்ள மாட்டார்கள். அத்துடன் வருடத்துக்கு ஒரு தடவை வந்து மேற்பார்வை செய்துவிட்டுச் சென்றுவிடுவார்கள். அதன்பின் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பில் கவலை கொள்ளமாட்டார்கள். பின்னூட்டலோ பரிகாரமோ இவர்களால் வழங்கப்படுவதில்லை. ஒவ்வொரு விடயத்திலும் அவர்களது அகவயத்தன்மை வெளிப்படையாகவே தெரியும். தான் நினைத்தவாறு செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றே எதிர்பார்ப்பார்கள். மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் தொடர்பில் கவலை கொள்வதில்லை. பெரும்பாலும் பிழையான புலக்காட்சியுடனேயே இவர்களது மேற்பார்வை இடம்பெறும் என அவர் குறை கூறினார்.

அதிபர் மேலும் கருத்துத் தெரிவித்தபோது வலயக் கல்விப் பணிப்பாளர் மனிதாபிமானமற்றவர் என்றார். ஏன்? எனக் கேட்டபோது ஒரு ஆசிரியையை, தன் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவதற்காகத் தினமும் பாடசாலை முடிவடைவதற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்னர் பாடசாலையை விட்டுச் சென்றமை தவறானது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டதாகத் தெவித்தார். அதேவேளை அந்த ஆசிரியை எழுந்து இது

தனதும் தனது குழந்தையினதும் உரிமை எனக் குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார்.

உண்மையில் இந்தச் சலுகை ஆசிரியைகளுக்குக் கிடையாது என உயர்கல்வி அமைச்சின் மேதிக செயலாளர் சேனநாயக்க உபசேன அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட அதிபர் மேலும் குறிப்பிடும்போது, தான் அக்கூட்டத்தில் தேசிய கல்வி நிறுவகத்தில் தமது பாடசாலையைச் சேர்ந்த 8 ஆசிரியர்கள் பட்டப் பின் படிப்புக் கல்வி டிப்ளோமாப் பீடநெறியைப் பின்பற்றுவதாகவும் அவர்களுக்குக் கடமை லீவு வழங்குவதால் தமது பாடசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் அதனால் அவர்கள் வரவுச் சான்றிதழ் கொண்டு வந்தாலும் தாம் கடமை லீவு வழங்குவதில்லை எனவும், இதன் காரணமாக தம்முடன் குறிப்பிட்ட ஆசிரியர்கள் முரண்படுவதையும், அதிபர் குறிப்பிட்டதாகக் கூறினார். இதைத் தாம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தெரிவித்தபோது, அதற்கு அவர் ஆசிரியர்களது கற்றலை விட மாணவர்களின் கற்றலே முக்கியமானது. எனவே கடமை லீவு வழங்காமலிருப்பதற்கான அதிகாரம் அதிபருக்கு உண்டு எனத் தெரிவித்ததாக அவர் தெரிவித்தார்.

ஆனால் வலயக் கல்விப் பணிப்பாளரது இக் கூற்றுத் தவறானதாகும். இவ்விடயம் தொடர்பில் 2013.06.07ஆம் திகதியிடப்பட்ட EED/3/40/1/5 ஆம் இலக்கமிடப்பட்ட கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வார இறுதிப் பாடநெறியினைத் தொடரும் சகல உத்தியோகத்தர்களுக்காகவும் பங்கேற்பினை உறுதி செய்ததன் பின்னர் அப் பாடநெறி நடைபெறும் வார இறுதி நாட்களின் முன்னைய தினம் வெள்ளிக்கிழமை அல்லது பின்னைய தினம் திங்கட்கிழமை ஆகிய இரண்டில் ஒரு தினத்திற்குக் கடமைப் பொறுப்பு விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும். (ஆண்டுக்கு உயர்ந்த பட்சம் 20 நாட்களாகும். ஒரு வருடத்திற்குப் பின்னர் பாடநெறிக்காக சம விகிதாசார அடிப்படையில் பிரிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையினைக் கணிப்பீடு செய்ய வேண்டும்). இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பாடநெறியினைத் தொடரும் உத்தியோகத்தர்கள் பாடநெறியினைத் தொடரும் கால எல்லைக்குள் பாடநெறி நடைபெறும் தினங்களுக்கு அமைய ஒரு மாதத்துக்கு ஒரு நாள் வீதம் கடமை விடுமுறை வழங்கப்படும்.

வார இறுதி நாட்களில் ஒரு வருடத்திற்கு பாடநெறியினைத் தொடரும் உத்தியோகத்தர்களுக்காக பாடநெறியின் இறுதியில் பரீட்சைக்குத் தயாராகுவதற்காகப் பரீட்சை நடைபெறும் தினம் உள்பட வழங்கப்படும் கற்கை விடுமுறை பரீட்சை நடைபெறும் காலத்திற்குள் அல்லது பரீட்சைக்கு முன்னர் 20 நாட்கள் உயர்ந்த பட்சத்தின் கீழ் (வார இறுதி மற்றும் விசேட விடுமுறை நாட்கள் தவிர கடமை மேற்கொள்ளும் நாட்களில்) பெறறுக்கொள்ள முடியும்.

மேற்பார்வை என்பது ஆசிரியர்களதும் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ளோரதும் கற்பித்தற் பணியை மேம்படுத்துவதற்காகவும்

ஆசிரியர்களது வாண்மையை விருத்தி செய்தற்காகவும் கல்வியின் குறிக்கோள்களைத் தெரிவு செய்தல், மீளாய்தல், கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டுக்காகவும் பாடசாலைத் தலைமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளுமாகும். *(Good,C.V.-1945-P.539)*

ஆசிரியர்கள் தமது வாண்மையை விருத்தி செய்து கொள்வதற்காகவே ஆசிரிய பயிற்சியில் ஈடுபடுகின்றனர். அதனை மேலும் ஊக்குவிப்பதாகவே மேற்பார்வை அமைதல் வேண்டும். பயிற்சியற்ற ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிப்பதை அனுமதிப்பதைவிட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்க அனுமதிப்பதால் விளைதிறன்மிக்க கற்றல் சந்தர்ப்பங்கள் உருவாக வாய்ப்புண்டு. ஆனால் இங்கு பயிற்சி நெறியைப் பின்பற்ற அனுமதி வழங்கிவிட்டு கடமை விடுமுறை தர மறுக்கும் அதிபரதும் வலயக் கல்விப் பணிப்பாளரதும் நடவடிக்கைகள் சட்ட முரணானவையாகும்.

மேலும் ஒரு ஆசிரிய ஆலோசகர், தாம் குறிப்பிட்ட பயிலுனர் ஆசிரியர்களின் கற்பித்தலை மேற்பார்வை செய்ததாகவும், அவர்கள் எழுதும் பாடத் திட்டமிடல் வித்தியாசமாக இருப்பதாகவும், அது பொதுக் கல்வியை நடைமுறைப்படுத்திச் செல்வதில் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தாம் கருதுவதாகவும் தெரிவித்தார். அதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆசிரியர்கள் பின்பற்றும் பாடநெறிகள் மாணவர்களின் நாளாந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைப் பாதிக்கக்கூடாது என்றார். அதற்குக் குறிப்பிட்ட ஆசிரியர்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்புரைகளையும் தம்மை மேற்பார்வை செய்யும் மேற்பார்வையாளர்கள் கூறுவதையும் அனுசரித்துத் தாம் செயற்பட்டால் மாத்திரமே தாம் பாடநெறியைப் பூர்த்திசெய்ய முடியும் என்றனர்.

தேசிய ரீதியில் கலைத்திட்டத்தை உருவாக்குவதையும் அமுல்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய கல்வி நிறுவகத்தின் கற்பித்தல் பயிற்சிக்கான பாடத்திட்டமிடல் முறைமை பொருத்தமற்றதாக இருக்க முடியாது. அதேவேளை பயிற்சிக் காலத்தில் அவர்கள் அம் முறைமையைப் பின்பற்றுவது கட்டாயமானதாகும். பொதுக்கல்வி முறைமையை அனுசரித்து அதற்கேற்பவே தேசிய கல்வி நிறுவகத்தால் பாடத்திட்டமிடல் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்வி நிறுவனங்களும் ஒவ்வொரு கற்பித்தல் பயிற்சி மாதிரிகளைப் பயன்படுத்தினாலும் பிரதான எண்ணக்கருக்களிடையே மாற்றங்கள் ஏற்படுவதற்குச் சாத்தியமில்லை.

மேலும் ஒரு சிரேஷ்ட ஆசிரியர், ஒவ்வொரு அதிகாரிகளும் வெவ்வேறான ஆலோசனைகளை வழங்குவதன் காரணமாக ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்குட்படுகின்றனர் என்றார். இச் சந்தர்ப்பங்களில் அவர்கள் அதிபர்களின் உதவியை நாடும்போது அவர்கள் வேறு ஆலோசனைகளை வழங்குவதாக மற்றொரு ஆசிரியர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அதிபர்கள், அதிபர்களுக்கான கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். ஆனால் அதற்குத்

திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. பெரும்பாலான அதிபர்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்குத் தாம் வலயக் கல்வி அலுவலகத்தின் செயற்பாடுகள் காரணமாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளை முன்வைத்துள்ளனர். அதேவேளை வலயக்கல்வி அலுவலகம், மாகாணக் கல்வி அலுவலகம் மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றால் தம்மிடம் முன்வைக்கப்படும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கட்டளைகள் காரணமாகத் தாமும் தமது பாடசாலை ஆளணியினரும் மிகவும் அசௌகரியங்களுக்கு உட்படுவதாகக் கருத்துத் தெரிவித்தனர். அதேபோல் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகத் தமக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டும் அது தொடர்பில் பிரச்சினை தோற்றம்பெறும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்குத் தீர்வுகள் தரப்படவில்லை எனவும் அதிபர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விக் காரியாலய உத்தியோகத்தர்களைத் தவிர, வேறு உயர் அதிகாரிகள், அதிபர் மற்றும் ஏனைய ஆளணியிருக்கு வழங்கும் கட்டளைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் தாம் வகைகூற வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்தார். அத்துடன் தாம் அதிபர்களுக்கு அண்மித்த உயர் அதிகாரி இல்லை என்றும், கோட்டக் கல்வி அதிகாரியே அதிபர்களின் அண்மித்த உயர் அதிகாரி என்றும், அவரைச் சந்தித்து உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுங்கள் என்றும் அவர் தெரிவித்தார். அதற்கு "அப்படியானால் இனிமேல் எல்லாப் பிரச்சினைகளையும் கோட்டக் கல்வி அதிகாரியின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ளலாமா?" என ஒரு சில அதிபர்கள் வினவியபோது அதற்கு, வலயக் கல்விப் பணிப்பாளர் இதற்குமேல் அதிபர்களின் கூட்டத்தின்போது தேவையற்ற வினாக்களை எழுப்பக்கூடாது எனத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட வலயக்கல்விப் பணிப்பாளரதும் அவரது குழுவினரதும் மேற்பார்வைப் பணியினைப் பார்க்கும்போது பின்வரும் குறைபாடுகளை இனங்காண முடிகின்றது.

- முன் தீர்மானத்துடனேயே மேற்பார்வைப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இவர்களது அகவயத் தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது.
- கல்வித் தொகுதியின் செயற்பாடுகள், சீர்திருத்தங்கள், இற்றைப்படுத்தல்கள் தொடர்பான அறிவு இவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது.
- கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள். மதிப்பீட்டு முறைகள், பாடத்திட்டமிடல்கள், பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான மாற்றங்கள் என்பவற்றை இவர்கள் அறிந்திருக்கவில்லை.
- மேற்பார்வை தொடர்பில் முன் ஆயத்தத்துடன் செல்லவில்லை.
- ஜனநாயக ரீதியாகவும், ஒத்துழைப்புடனும், நட்புடனும், நடுநிலைமையுடனும் செயற்படவில்லை

- பொறுமையுடன் செவிமடுத்தல், கோபத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகிய தன்மைகள் காணப்படவில்லை.
- அதிகார தோரணை அதிகளவில் காணப்படுகின்றது.
- சொல்சார், சொல்சாரா தொடர்பாடல் திறன் காணப்படவில்லை.

வெளிவாரி மேற்பார்வை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் இடம்பெறும்போது பாடசாலையின் பெருமளவு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

மேற்பார்வை என்பதை "மிக நன்றாகத் தேடியறிதல்" என்ற வகையில் பொருள்கொள்ள முடியும். முகாமைத்துவத்தில் மேற்பார்வை மிக முக்கியமான செயன்முறையாகும். அதாவது முகாமைத்துவச் செயன் முறையின்போது எதிர்பார்த்த இலக்கை அடைவிக்கும் செயன்முறையின் போது அதற்கு உதவிசெய்யும் காரணிகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பிரயோகிப்பதற்கு உதவி செய்யும் செய்முறையே மேற்பார்வையாகும். அது மாத்திரமன்றி செயன்முறையில் பங்களிப்புச் செய்யும் ஒவ்வொருவரும் தத்தமது செயற்பாடுகள் தொடர்பிலான சுய மதிப்பீட்டை மேற்கொள்ளவும் உதவுவதாக அமையும்.

மேற்பார்வை என்பது யாதேனும் செயலின் அல்லது வேலையின் செயலடைவு பற்றித் தேடியறிதலாகும் என *Sykes, J.B,1984,P.10720* குறிப்பிடுகிறார்.

ஆசிரியர்களினதும் மாணவர்களதும் கற்றல் கற்பித்தல் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முழுமையான செயன்முறைகளை ஆய்வு செய்து அதனை மேலும் விருத்தி செய்தல் மேற்பார்வை எனப்படும் என சாம் எச் மூரார் *(Sam H.Moorar )* தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் பாடசாலைகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளாவன :

- உயர் கல்வி அதிகாரிகள் பாடசாலைகள் மீது பரஸ்பர விரோதமான ஆலோசனைகளையும் கட்டளைகளையும் வழங்குவதால் பாடசாலை ஆளணியினர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்படுதல். அவ்வாறான அசௌகரியங்களைப் போக்குவதற்கு உயர் அதிகாரிகள் உதவுவதுமில்லை.
- பாடசாலைகளுக்குக் கட்டளையிடுவதற்குப் பொருத்தமான பணியக அமைப்பு *(Chain of Command)* முறைமை கவனத்தில் கொள்ளப்பட வில்லை என்பதாலும் கீழ்மட்ட அதிகாரிகள் பாதிப்புக்குட்பட்டுள்ளனர்.
- அதிகாரப் பரவலாக்கல் முறைமை பின்பற்றப்படவில்லை
- கடுமையான முகாமைத்துவ முறைமை பின்பற்றப்படுகின்றமை
- வலயக் கல்விப் பணிப்பாளரின் குணப்பண்புகளில் மனிதப்பண்புகள் காணப்படவில்லை

- சர்வாதிகாரத் தலைமைத்துவப் போக்குக் காணப்படுகின்றது
- தன்னுடன் பணியாற்றுபவர்களை ஊக்குவிப்பதில்லை
- மேலிருந்து கீழ்நோக்கி வரும் தொடர்பாடல் முறைமையே காணப்படுகின்றது
- தனித்தே தீர்மானமெடுக்கின்றார்
- ஒவ்வொரு மாற்றங்கள் தொடர்பிலும் தலைவர் தன்னை இற்றைப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். குறிப்பிட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் அண்மைய கலைத்திட்ட மாற்றங்கள் தொடர்பில் தன்னை இற்றைப்படுத்திக் கொள்ளவில்லை.
- வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகள், முகங்கொடுக்கும் பிரச்சினைகள் அதிபர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாகத் தீர்வினை முன்வைப்பதற்கு உயர்கல்வி அதிகாரிகள் முயற்சிக்கவில்லை.
- ஏற்றுக்கொள்ளக்கூடிய முகாமைத்துவக் கோட்பாடுகளை உயர் அதிகாரிகள் பின்பற்றவில்லை.
- ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு அதிகாரியால் மாத்திரமே ஆணை பிறப்பிக்கப்படுதல் வேண்டும். பலரது கட்டளையால் ஒருவருக்கும் கீழ்ப்படிய முடியாத நிலை தோன்றலாம் *(Henri Feyol)*
- முகாமைத்துவம் என்பது "மூத்த அதிகாரிகளுக்கு மட்டும் உரிய பொறுப்பன்று, அது பிற செயற்பாடுகள் போன்று நிறுவனம் எங்கும் பரந்து காணப்படும். முகாமைத்துவமானது தலைவருக்கும் நிறுவனத்தின் உறுப்பினர்களுக்குமிடையே பரந்து காணப்படுவதாகும்" *(பயோல் 1949)*
- மக்ஸ் வெபர் குறிப்பிடுவதன்படி, ஒரு நிறுவனத்தின் பதவி நிலைக்கமைய மேலிருந்து கீழ்நோக்கி அதிகாரம் பரந்து செல்லுதல் வேண்டும். ஆனால் குறிப்பிட்ட வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு மேல் கோட்டம், வலயம், மாகாணம், கல்வி அமைச்சு என்ற அடிப்படையில் அதிகாரம் மேலிருந்து கீழாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளபோதும் அவை எந்த வகையிலும் செயற்படுவதாகத் தெரியவில்லை.
- ஒரு நிறுவனத்தில் வரையறுக்கப்பட்ட அதிகாரப் படிமுறை அமைப்பு *(Scalar chair Authority)* காணப்படுதல் வேண்டும். கடமையை ஆற்ற வேண்டியவரே அதற்குப் பொறுப்பானவராவார். வேலைகளைச் சட்டங்கள் கட்டுப்படுத்துவதால் யார் செய்தாலும் ஒரே மாதிரியாகவே காணப்பட வேண்டும்.
- ***Elton mayo*** வின் கருத்துப்படி ஒரு நிறுவனத்தில் மனிதத் தேவைகள் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். வலுவும், அதிகாரமும் பங்கிடப்படுதல் வேண்டும், குழு உணர்வு காணப்படுதல் வேண்டும்.

நல்ல தொடர்பாடல், உயர் திருப்தி, குறைவான முரண்பாடு மற்றும், ஜனநாயகத் தலைமைத்துவம் போன்றவை காணப்படுதல் வேண்டும்.

குறிப்பிட்ட வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் பாடசாலைகளில் அதிகார ஒழுங்கு முறைப்படி பின்பற்றப் படாததால் பிரச்சினை நிலைமை தோற்றம்பெற்றுள்ளது. தமக்கு அண்மித்த உயர் அதிகாரியைக் கூட இனங்காண முடியாத அளவுக்கு அதிபர்கள் அசௌகரிய நிலைக்கு உட்பட்டுள்ளனர். தமது பிரச்சினைகளைத் தமது உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தபோதும் அவர்கள் வேறு அதிகாரிகளுக்கு முன்வைத்தமையால் அதிபர்களுக்குப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள் முன்வைத்த பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளை முன்வைக்காத அதேவேளை அப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பொறுப்பினைக் கோட்டக்கல்வி அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளார். வலயக் கல்விக் காரியாலயத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பாடசாலை மேற்பார்வையில் ஈடுபடும்போது பிரச்சினைகள் தோற்றம் பெறுவது இப் பிரச்சினைக்குரிய ஆரம்பமாகும். வலயக் கல்விக் காரியாலய அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு ஆலோசனைகளை வழங்கியதன் காரணமாக ஆசிரியர்களுக்குப் பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. அதில் ஒருமைப்பாடு ஏற்படாததன் காரணமாக முரண்பாடு தோற்றம் பெற்றுள்ளது. இந்த நிலைமை வலயக்கல்விப் பணிப்பாளரின் பின்தங்கிய முகாமைத்துவ அணுகுமுறை காரணமாகவே ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் பாடசாலைகள் முகங்கொடுக்கும் முகாமைத்துவப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு

- பணிக்குழு ஆட்சிமுறையைப் பின்பற்றுதல்
- மனிதத்துவ அணுகுமுறையைப் பின்பற்றுதல்
- அதிகாரப் பரவலாக்கத்தை முறையாக நடைமுறைப்படுத்துதல்
- விளைதிறன்மிகு தொடர்பாடலை மேற்கொள்ளல்
- அதிகாரிகள் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணிப் பட்டியலுக்கு ஏற்ப கடமையாற்றுதல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம் எனவே கல்வி நிர்வாக சேவையில் 1 ஆம் தரத்தைப் பெற்றாலும் வலய அல்லது மாகாணப் பணிப்பாளர்களாக இருந்தாலும் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளாத எந்தவொரு அதிகாரியாலும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்த முடியாது. அத்துடன் பாடசாலைகளின் அபிவிருத்தியில் முதுகெலும்பாக விளங்குவது வெளிவாரி மேற்பார்வையாகும். எனவே பிழை பிடிப்பதை நோக்கமாகக் கொண்டு அதனை மேற்கொள்ளாமல் உதவி செய்வதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளும்போது பாடசாலைகளின் வினைத்திறனும் விளைதிறனும் மேல்நோக்கிய விரிவாக்கத்தை வேண்டி நிற்கும்.

# அண்மையிலுள்ள பாடசாலைஅபிவிருத்தித் திட்டமும், பின்தங்கிய பாடசாலைகளும்

✷ எஸ்.எல்.மன்சூர்

நாட்டின் கல்வித்துறையில் ஒவ்வொரு அரசும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கல்வியை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. இருந்தாலும் உலக அளவில் நமது நாட்டுக் கல்விமுறையில் பல்வேறு குறைபாடுகள், குளறுபடிகள் இருந்து கொண்டுதான் வருகின்றது. ஏனெனில் பத்தாயிரத்தினை அண்மித்த பாடசாலைகளில் ஏறத்தாழ 40இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அதில் க.பொ.த உயர்தரத்தில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மிகக் குறிப்பிட்ட வீதத்தினரே பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகின்றனர்.

கடந்த 2015 ஆகஸ்ட்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் 309,069 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர். இந்த மாணவர்களிலிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கு வெறும் பத்துவீதத்திற்கும் குறைவான மாணவர்களே தெரிவாகின்றனர். மீதமான மாணவர்களில் ஒரு குறிப்பிட்டளவு வெளிவாரி பட்டம் என்றும், உயர் தொழில்நுட்பக் கல்விக் கூடங்களில் கல்வி என்றும், வெளிநாடுகளில் தொழில்வாய்ப்பென்றும், உள்நாட்டில் தொழில்வாய்ப்பு என்றும் சென்றுவிடுவார்கள். சுமார் 50வீதமானோர் கல்விக்கு முழுக்கிட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர் படையணியில் இணைந்து கொள்வார்கள். அப்படியானால் இவர்களின் நிலை என்ன?

இந்நிலையிலிருந்து மீட்சியடைய வேண்டும் என்பதற்காகத்தான் என்னவோ, கல்வியின் மீதான நம்பிக்கையினை ஏற்படுத்தும் முகமாக கடந்த அரசினால் கொண்டுவரப்பட்ட ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மகிந்தோதய ஆய்வுகூடங்கள், கணினி கூடங்கள், தொழில்நுட்பக் கூடங்கள் என்றெல்லாம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஆட்சி மாற்றத்திற்குள்ளாகியதைத் தொடர்ந்து மீண்டும் ஒரு திட்டம் தற்போது இன்றைய புதிய அரசினால் ஏற்படுத்தப்படுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதுதான் அண்மையிலுள்ள பாடசாலைகள் அபிவிருத்தி திட்டமாகும்.

கடந்த காலங்களில் பல்வேறு பெயர்களில் பாடசாலைகளின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பல மில்லியன் கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டன. அதாவது மத்திய கல்லூரிகள், தேசிய பாடசாலைகள் என வகைப்படுத்தப்பட்டு அபிவிருத்திக்குள்ளாகின. அடிக்கடி திட்டங்கள் மாற்றப்படுகின்றபோது பழைய திட்டங்களில் நம்பிக்கை அற்றநிலை

**கட்டுரையாளர்**

ஆசிரிய ஆலோசகர் கல்வியியல் தொடர்பில் தொடர்ந்து கட்டுரைகள் ஆய்வுகள் மேற்கொண்டு வருபவர்.

தோன்றுவது சகஜம். ஒரு பிரதேசத்தில் ஓரிரு பாடசாலைகளை அபிவித்தி செய்கின்றபோது சமப்படுத்தல், பங்கீடு ஏனைய பாடசாலைகள் ஏலாவாதிகளாக சித்தரிக்கப்படுவதாக பெற்றோர்களும், அங்கு கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள் வரை சிந்திக்க வைப்பதையும் மறந்துவிட முடியாது.

அண்மையில் கல்வி உயர் அதிகாரி ஒருவர் பேசும்போது, கைகளின் விரல் அளவு எண்ணிக்கையுள்ள மாணவர்களைக் கொண்டிருக்கின்ற பாடசாலைகளை இழுத்து மூடிவிட்டு அவர்களுக்கு செலவாகின்ற பணத்தில் சொகுசு வான் வண்டியில் அப்பிரதேசத்திலுள்ள பிரபல்யமான பாடசாலைக்கு அந்த மாணவர்களை அழைத்துச் சென்று கல்வியை வழங்கினாலும் பல இலட்ச ரூபாய்கள் மீதமாகும் மாணவர்களும் தரமான கல்வியைப் பெற்று சிறந்து விளங்குவார்கள். அரசின் கொள்கை இதனை தடுக்கிறது என்று தனது மனக்குமுறலைத் கொட்டியிருந்தார். குறைந்தளவு மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் வகுப்பிலுள்ள ஓரிரு மாணவர்களைக்கூட சிறந்த முறையில் கற்பிப்பதிலிருந்து தவறி விடுகின்றனர். வெறுமனே காலத்தைக் கழிக்கின்ற ஒரு இடமாகவும், சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்கான நிலையமாகவுமே இவர்கள் பாடசாலைகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதுதான் கவலையான விடயம் என்பதையே அவர் சுட்டிக் காண்பித்திருந்தார்.

உண்மையில் அரசின் திட்டம் ஒருபுறமிருக்க தனது சுமார் அரை இலட்சம் சம்பளத்தை மாதாந்தம் பெற்றுக்கொண்டு எந்தவொரு மாணவனும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி பூச்சியப் புள்ளியைப் பெறுகின்றார்கள் என்றால் இதற்கு யார் காரணம். பின்தங்கிய பாடசாலைகள் என்றால் மாணவர்களும் பின்தங்கியவர்களாக இருப்பதும் கட்டாயமா? அப்படியானால் அந்தப் பாடசாலைகளின் உருவாக்கம் பின்னடைவான மாணவர் சமூகத்தை உருவாக்கத்தான் முனைகின்றனவா? என்கிற கேள்வியும் எழுகின்றது. உண்மையில் சூழல் காரணிகள் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்காக வகுப்பறைகளில் மாணவர்களை மேலும் பின்னடைவுக்குள்ளாக்கின்ற செயற்பாடுகளை தவிர்த்த முடியுமானவற்றை குறைந்தளவு கொண்டுள்ள இதுபோன்ற பாடசாலைகளில் மேம்படுத்தப்பட்ட கற்றல் கற்பித்தலை ஆசிரியர்கள் மேற்கொள்ள முடியும். ஆனால் அந்த நிலைமை இன்று பல பாடசாலைகளில் மேற்கொள்ளப் படுவதில்லை என்பதுதான் கவலையான விடயமாகும். அப்படியானால் அரசின் புதிய திட்டத்திற்குள் உருவாக்கப்படுகின்ற அண்மையிலுள்ள சிறந்த பாடசாலைகளுக்கு வசதிகளை முழுமையாக வழங்குவதன் மூலம் மீண்டும் ஒரு சில பாடசாலைகள் மேலும் பின்தள்ளப்படுகின்றனவா? என்கிற வாதங்களும் எழுகின்றன.

அண்மையில் எமது கல்வியமைச்சர் பேசும்போது "சகல பாடசாலைகளிலும் கல்வியின் தரத்தை மதிப்பீடு செய்வதற்காக சுயாதீன குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்திருந்தார். செயற்பாடு இல்லாத பயிற்சி என்ற அரிஸ்டோட்டிலின் கூற்றை எடுத்துக்காட்டிய அமைச்சர், "பாடசாலை முறைமையில் தரமான

கல்வியை வழங்குவதனை நோக்கமாகக்கொண்டு தர மதிப்பீட்டு சுயாதீன குழுவை நிறுவுவதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆசிரியப் பயிற்சியை வழங்குவதற்கும் அதிபர்கள், கல்வி நிர்வாக சேவைப் பதவியினர் மற்றும் அந்தந்த பாடத்துக்கு அமைய ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும், பாடத்திட்டத்தை நவீனப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

நல்ல விடயம். ஆசிரியர்களும் தங்களுடைய பொறுப்பறிந்து கற்றல் செயற்பாடுகளில் தம்மை முழுமையாக இற்றைப்படுத்தி மாணவர்களின் சிறந்த அடைவுக்கு தம்மை முழுமைப்படுத்துவார்கள். அதேவேளை இவ்வாறான திட்டங்கள் ஊடாக குறைந்தளவு மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளில் மேம்படுத்தப்படாத நிலையில், அடைவில் மிகவும் பின்தங்கியவர்களாக உருவாக்கப்படுகின்ற மாணவர்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களை எந்த வகைக்குள் அடக்குவது?

சில கல்வி வலயங்களில் கற்றலுக்குரிய தயார் நிலையில் காணப்படாத ஆசிரியர்களை எந்த வகைக்குள் அடக்குவது என்று தெரியாமல் சும்மா வைத்திருங்கள் என்று கூறி அமர்த்தப்படுகின்றனர். இவர்களால் பாடசாலைக்குப் பிரச்சினை. மேலும் சில பாடசாலைகளில் குறித்த ஒருசில ஆசிரியர்கள் நேரசூசியின்றி பாடசாலையின் வெளிவேலைகளையும், அதிபரின் காரியாலய வேலைகளையும் கவனித்துக்கொண்டும் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் ஊடாக அமைச்சும் சமூகமும் எதிர்பார்க்கின்ற சிறந்த கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளத்தான் முடியுமா? இவர்களும் அரசின் சம்பளத்தைப் பெற்று கற்பிக்க வேண்டிய நிலையில் வெறுமையாக இருக்கின்றபோது ஏனைய ஆசிரியர்கள் இதனை எவ்வாறு அங்கீகரிப்பார்கள்.

இதற்கிடையில் அரசினால் "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" *(Nearest School is the Best School)* எனும் தேசிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குணம், அறிவு, பலம் நிறைந்த மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்பவதற்கான மத்திய முழு நிறை பாடசாலைகள் தொகுதியை மீளமைப்பு செய்வதற்கான திட்டமாக இது அமையவுள்ளது. கல்வியின் பண்புத்தரத்தையும் அளவுத்தரத்தையும் மேம்படுத்தும் செயன்முறைக்காக "குணம்,அறிவு,பலம் நிரம்பிய படைப்பாற்றலும் அழகியல் நயப்பும் கொண்ட மானுட நேயமிக்க பிள்ளைகளை உருவாக்குவதற்காக அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல்" எனும் தொனிப்பொருளுடன் கூடிய அரசின் ஐவித கல்விக் கொள்கையில் வெளிப்படுத்திய இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் தேசிய வேலைத்திட்டம் கல்வி அமைச்சினால் 2016 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு பிரதேசத்தில் ஒன்று அல்லது இரண்டு பாடசாலைகள் எனும் ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் நாடளாவிய ரீதியில் 650 பாடசாலைகள் குறித்த திட்டத்தின்படி அபிவிருத்தி செய்யவும், இப்பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் உதவி அதிபர்கள் ஆகியவர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பயிற்சிகளை வழங்கி அவர்களின் பயன்பாட்டினை

அதிகரிப்பதற்கும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போதைய அரசு கல்வித் துறையின் அபிவிருத்திக்காக 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதியையும் ஒதுக்கியுள்ளது. கல்விக்கான சம சந்தர்ப்பத்தை சகலருக்கும் வழங்குதல் மற்றும் அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்பவை எண்ணக்கருவெனக் கூறப்படுகின்றது. அப்படியானால் தூரப்பிரதேசப் பாடசாலைகளின் நிலை மேலும் வரண்டுபோய்விடும் அபாயமும் காணப்படுகின்றது.

வீட்டிற்கு அருகில் இருக்கின்ற பாடசாலையில் தன்னுடைய பிள்ளையை சேர்ப்பதிலிருந்து விலகி சில பெற்றோர்கள் தூரப்பிரதேசத்திலுள்ள பாடசாலையை மாத்திரம் நோக்கிய நகர்வு இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. அண்மையில் ஒரு பாடசாலைக்குச் சென்றிருந்தபோது பெற்றார் ஒருவர் வகுப்பறைக்கு வெளியில் அமர்ந்திருந்தார். அந்தப் பெற்றாரிடம் இவ்வாறு இருப்பதற்கான காரணத்தைக் கேட்டபோது "தன்னுடைய பிள்ளைக்கு அருகில் தான் இருக்கும்படி தனது குழந்தை அடம்பிடிக்கிறது. அதனால்தான் இவ்வாறு கடந்த மூன்று மாதங்களாக காலையில் பாடசாலைக்கு வருவதும், கலைந்து செல்லும் வரையில் இவ்வாறு இருப்பதும்" என்கிற விடயத்தைக் கூறினார். தரம் ஒன்றில் கல்வி கற்கும் இந்த மாணவரின் நிலைமையையும், பெற்றாரின் அவலத்தன்மையையும் கண்டு வியப்புற்று "வீட்டுக்கருகில் உள்ள பாடசாலையில் இவரை சேர்த்திருந்தால் உங்களுக்கு இலகுவாக இருந்திருக்குமே" எனக் கூறினேன். அடுத்த ஊருக்கு நகர்ந்து இந்த அவலத்தையும் சுமந்துகொண்டு இவ்வாறான பெற்றோர்களும் நம்மத்தியில் இருக்கின்றார்கள். இவர்களைப் போன்ற பெற்றார்கள் இருக்கும் வரையில் அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்கிற திட்டத்தினால் என்ன இலாபத்தை அடையப் போகிறார்கள்.

ஓரிரு பாடசாலைகளில் குவிகின்ற மாணவர்களை கலைத்து இவ்வாறான திட்டங்கள் ஊடாக இன்னும் சில பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக மாணவர்களின் அடைவில் மாற்றத்தை விளைவதற்கு ஏதுவாக அமையலாம் என்கிற அரசின் திட்டத்திற்குள் மேற்படி பின்தங்கிய மாணவர்களைக் கொண்டுள்ள தூரப்பிரதேப் பாடசாலைகளின் நிலைமை களையும், சோர்பிழந்து போயுள்ள ஆசிரியர்களின் நிலைமைகளையும் கவனத்திற் கொண்டு எதிர்காலத்தில் இதற்கான திட்டங்களும் தயாரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டின் கல்வித்துறையில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவருவதற்கும், உயர்தரம் கற்று வெளியேறும் மாணவர்களுக்குரிய தொழில்வாய்ப்பினையும் மேற்கொள்ளக்கூடியவாறான திட்டங்களையும் உருவாக்குகின்ற நிலைமை எதிர்காலத்தில் உருவாக்கமுனைதல் முக்கியமாகும்.

கல்வியில் சமவாய்ப்புள்ளது என்று நாம் நிறையவே பேசினாலும் சில பாடசாலைகள் எதற்குள்ளும் அகப்படாமல் இருப்பதன் காரணமாக எதிர்பார்க்கும் அடைவுகளை அடைந்து கொள்வதிலுள்ள பிரச்சினைகளும் விடுவிக்கப்படுவதன் அவசியம் குறித்தும் கல்விச் சமூகம் சிந்திக்க வேண்டும்.

# பரிகாரக் கற்பித்தல் முறை

⁕ தே.முகுந்தன்

கட்டுரையாளர்

முதுநிலை விரிவுரையாளர்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

பூமியில் மனிதன் தோன்றிய காலப்பகுதியில் இருந்தே கற்றல்-கற்பித்தல் முறை தோன்றியிருக்கின்றது. மனிதர்கள் மட்டுமல்லாது விலங்குகள் கூட கற்றல் கற்பித்தல் முறையைப் பயன்படுத்தியிருப்பதாக பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன *(Brown, 1994)*.

கற்றல் கற்பித்தல் முறையானது வினைத்திறன் மிக்கதாகக் காணப்பட்டால் பிள்ளையானது தன்னைச் சூழவுள்ள உலகை நன்கு பயன்படுத்த முடியும். மற்றவர்களுடன் சுமுகமாக ஒன்றிணைந்து வாழும் கலையை குழந்தை கற்காவிடின் அக்குழந்தைத் தனது வாழ்வில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்க நேரிடும். கற்பித்தலின் மூலாதாரம் ஆசிரியருக்கும் கற்போனுக்குமிடையேயான இடைத்தொடர்பாகும் *(Shulman, 1987)*.

பிரச்சினை தீர்த்தல் முறை *(Problem Solving Method)*, செயற்றிட்ட முறை *(Project Method)*, மொண்டிசூரி முறை *(Montessori Method)*, சிறுவர் பூங்கா முறை *(Kindergarten Method)*, அவதானித்தல் முறை *(Observation Method)* விரிவுரை முறை *(Lecturing method)* போன்ற கற்றல்-கற்பித்தல் முறைகள் பிரபலமான முறைகளாக விளங்குகின்றன. எனினும் இவற்றையும் விட பல்தரக் கற்பித்தல் *(Multi Grade Teaching)*, பல்மட்டக் கற்பித்தல *(Multi Level Teaching)*, பரிகாரக் கற்பித்தல் *(Remedial Teaching)* போன்ற விசேட கற்றல்-கற்பித்தல் முறைகளும் காணப்படுகின்றன. இவை விசேட சந்தர்ப்பங்களிலும் விசேட தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுபவை ஆகும்.

இக்கட்டுரையின் பிரதான நோக்கம் பின்வருவனவற்றை ஆராய்தலாகும்:

- பரிகாரக் கற்பித்தல் முறை என்றால் என்ன
- பரிகாரக் கற்பித்தல் முறையின் பண்புகள்
- பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கு,
- பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கில் இனங்காணக்கூடிய காரணிகள்

**பரிகாரக் கற்பித்தல் முறை என்ன?**

மெல்லக் கற்கும் மாணவர்கள் தமது பாட அலகுகளில் இழந்தவற்றை கற்பதற்கு உதவும் செயற்பாடானது பரிகாரக் கற்பித்தல்முறை எனப் பொதுவாகக் குறிப்பிட முடியும்.

மாணவர்கள் சுகவீனம், போர், இடப்பெயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் தமது கற்றல் நடவடிக்கைகளில் ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் ஈடுபட முடியாத நிலை ஏற்படுகிறது. இவர்கள் தமது வகுப்புக்குரிய கலைத்திட்டத்தில் உள்ள விடயங்களில் இடையிடையே சில விடயங்களை இழக்கின்றனர். இவ்வாறு இடையில் இழக்கப்படும் விடயங்கள் தொடர்ச்சியாக இவர்கள் கற்கப் போகும் விடயங்களுக்கு அவசியமானவையாக இருக்கலாம். இதனால் இம்மாணவர்கள் தமது தொடர்ச்சியான கற்றலில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

ஆரம்ப வகுப்பில் மொழிப் பாடத்தில் வாசிப்பதற்கு பிள்ளைகளுக்கு கற்பிக்கும் தருணத்தில் பாடசாலைக்கு சமூகமளிக்காத பிள்ளை, தொடர்ந்து மொழிப் பாடத்தை மட்டுமல்லாது சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமயம், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பதிலும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றது. இவ்வாறே ஆரம்ப வகுப்பில் கணித பாடத்தில் எண்களைக் (குறியீடு, எண்பெயர், எண், பருமன்) கற்பிக்கும் போது பாடசாலைக்குச் செல்லாத பிள்ளையால் அதன் பின்னர் கற்பிக்கப்படும் கணிதச் செய்கைகளான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பவற்றை புரிந்து கொள்ள முடியாதிருக்கும். இதனைப் போலவே மற்றைய பாடங்களிலும் பிள்ளைகள் பல்வேறு முக்கிய விடயங்களை இழந்து தொடர்ச்சியான கற்றலில் ஈடுபட முடியாது சிரமப்படுவர்.

மாணவர்களுக்கு தமது கற்றலில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து தொடர்ச்சியான கற்றலில் ஈடுபடுவதற்கு துணை செய்யும் பரிகாரக் கற்பித்தலானது உள்ளடக்கத்தை விடவும் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

பரிகாரக் கற்பித்தல் சிறார்களின் பார்வைக் குறைபாடு, புலக்காட்சி ஒழுங்கமைப்பு, அருப காரணம் காட்டுதல், ஒலியை இனங்காணல், கணிதச் செயற்பாடுகள், கவனக் குறைவு, முதல் எழுத்தைக் கொண்டு வாசித்தல், செவிப்புலக் குறைபாடு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

பரிகாரக் கற்பித்தல் தேவைப்படும் மாணவர்கள் பெரும்பாலும் சராசரி மட்டத்திலும் குறைவானவர்களாகவே காணப்படுவர். இதற்கான காரணமாக அமைவது குறித்த கற்றல்சார் அல்லது நடத்தைசார் பிரச்சினைகள்/ இடர்ப்பாடுகள் ஆகும். பரிகாரக் கற்பித்தலை கல்வியில் சராசரி மட்டத்திலும் கூடிய மட்டத்தில் உள்ள மாணவர்களுக்கும் மேற்கொள்ள முடியும். இந்த மாணவர்கள் மேலதிகக் கவனிப்புடன் கற்றலில் ஈடுபடுவார்கள்.

**பரிகாரக் கற்பித்தலின் பண்புகள்**

பரிகாரக் கற்பித்தலானது பல்வேறு பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இது பணியாற்றுவதுடன் தொடர்புபடுகின்றது. இது

அவதானித்தல், நிர்ணயித்தல், பரிகாரம் செய்தல், மதிப்பிடுதல் போன்ற அம்சங்களில் முறைமையாக பணியாற்றுவதுடன் தொடர்புபடுகின்றது. பரிகாரக் கற்பித்தலானது மாணவர்களுடன் நோக்கம் கருதி கருத்துடன் பணியாற்றுவதுடன் தொடர்புபடுகின்றது.

மாணவர்கள் குழு வேலைகளில் அல்லது தனி வேலைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் அவர்களின் வேலைகளை அவதானித்தலின் மூலம் அவர்கள் எந்த விடயங்களில் இடர்படுகின்றனர் என்பதை அறிய முடியும். உதாரணமாக கணிதத்தில் பிரசினம் தீர்த்தலில் (வசனக் கணக்குகள்) ஈடுபட்டிருக்கும் போது அவர்கள் அதில் வாசித்தல், கிரகித்தல், நிலைமாற்றுதல், செய்கை, குறித்தல் ஆகிய படிகளில் *(Newman, 1978)* படிகளில் இடர்படுகின்றனர் என அறிய முடியும் பரிகாரக் கற்பித்தல் தேவைப்படும் மாணவர்களை அவர்களுடைய வகுப்பறையில் ஆசிரியரால் பல்வேறு முறைகளால் இனங்காண முடியும்.

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுபவர் வகுப்பாசிரியராக இருக்கலாம் அல்லது பரிகாரக் கற்பித்தலில் அனுபவம் வாய்ந்த வேறோர் ஆசிரியராக இருக்கலாம். வேறோர் ஆசிரியர் பரிகாரம் வழங்குவதாக இருப்பின் அவருக்கு வகுப்பாசிரியர் மாணவரின் இடர்ப்பாடுகள்/குறைபாடுகள் பற்றிய தகவல்களை வழங்குதல் அவசியமானதாகும்.

. பரிகாரக் கற்பித்தல் என்பது மீளக் கற்பித்தல் அல்ல. அது பிள்ளை இடர்ப்படும் விடயத்தை அவதானித்து அந்த இடரப்பாட்டைத் தீர்த்தல் ஆகும். (வைத்தியர் நோயாளியின் நோயினைக் கண்டறிந்து அதற்கு சிகிச்சையளிப்பதற்கு ஒப்பானதாகும்)

**பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கு**

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுபவர்கள் பின்பற்ற வேண்டிய செயலொழுங்காக ஐந்து படிகள் உள்ளன. அவையாவன:

1. மாணவருடன் உரையாடல், பரிசீலித்துப் பார்த்தல், பரீட்சித்தல், அவதானித்தல்.
2. ஆசிரியர் மாணவருடன் உரையாடலில் ஈடுபடும் போது மாணவரைப் பற்றிய படம் ஒன்றினை மனதில் உருவாக்கிக் கொள்ளல். மாணவரின் பிரச்சினையை இனங்காணுதல்.
3. மாணவரின் பிரச்சினையை இனங்கண்ட பின்னர் அவருக்கு பரிகாரம் வழங்குவதற்குரிய திட்டத்தை உருவாக்குதல் வேண்டும்.
4. குறைகளைக் கண்டவுடன் பரிகாரம் வழங்கப்படல் வேண்டியது அவசியமும் முக்கியமுமானதாகும்.
5. விசேடமாக பரிகாரம் அளிக்கப்பட வேண்டிய மாணவர்களை குறிப்பான சோதனைகள் (அலகுப் பரீட்சைகள், விடயப் பரீட்சைகள்) கணிப்பீடுகள் (இடைநிலைக் கணிப்பீடு, இறுதிக் கணிப்பீடு ) மூலம் இனங்கண்டு விசேட பரிகாரமளிக்கப்படல் அவசியம்.

மேலே குறிப்பிடப்பட்ட செயலொழுங்கில் பரிகாரக் கற்பித்தலில் ஈடுபட முடியும்.

**பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கில் இனங்காணக் கூடிய காரணங்கள்**

மாணவரிடையே காணப்படும் இடர்பாடுகளுக்கு பல்வேறு காரணங்கள் காணப்படலாம். அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

**(1) தவறான எண்ணக்கரு உருவாக்கம் அல்லது தவறான விளக்கம்**

விஞ்ஞான பாடத்தில் திணிவு, நிறை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை அறியாது இவற்றினை தவறான இடங்களில் பயன்படுத்தல்

**(2) தவறான கற்பித்தல் முறை**

சில விஞ்ஞானப் பரிசோதனைகளை ஆய்வு கூடத்தில் மேற்கொண்டு கற்பிக்க வேண்டியுள்ளது. ஆனால் சில ஆசிரியர்கள் தமது வசதி கருதி ஆய்வு கூடத்தில் பரிசோதனைகளை மேற்கொண்டு கற்பிக்காது வெறுமனே விரிவுரை முறையில் கற்பித்தலானது மாணவரிடையே தவறான விளக்கங்களை ஏற்படக் காரணமாக அமையலாம்.

**(3) பாடம் தொடர்பான பீதி**

சில மாணவரிடம் சில பாடங்கள் தொடர்பாக பயம் காணப்படுகின்றது. உதாரணமாக கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களை கடினமானவையென சில மாணவர்கள் நம்புகின்றனர். இவர்கள் இப்பாடங்களைப் பற்றிய பயத்துடனேயே கற்பதால் அவர்களால் இயல்பாகக் கற்க முடியாதுள்ளது.

**(4) தவறான கற்றல் பழக்கங்கள்**

விளங்கிக் கற்க வேண்டியவற்றை மனனம் செய்தல் போன்ற தவறான கற்றல் பழக்க வழக்கங்கள் மாணவரின் கற்றலில் இடர்பாட்டைத் தோற்றுவிக்கலாம்.

**(5) பௌதிக மற்றும் உணர்வுபூர்வக் காரணிகள்**

பாடக் கற்பித்தல் நடைபெறும் நாளில் மாணவனுக்கு உடல், உள ரீதியாக பிரச்சினைகள் இருப்பின் அப்பாடத்தைப் பற்றிய விளக்கமானது மாணவருக்கு சரியாக கிடைக்காது போகலாம்.

**(6) ஆசிரியரின் மனப்பாங்கு**

சில ஆசிரியர்கள் பாடத்தை முழுமையாகக் கற்பிக்காது இடையிடையே சில விடயங்களைக் விட்டு விட்டுக் கற்பித்தல், பிள்ளைகளுக்கு ஆசிரியர் கற்பிப்பது விளங்குகின்றதா என்பதைப் பற்றி ஆராயது தொடர்ச்சியாகக் கற்பித்தல்.

பரிகாரக் கற்பித்தலுக்குரிய மாணவரின் இடர்பாடுகளை கண்டறிந்த பின்னர் அந்தக் காரணங்களின் அடிப்படையில் கற்பிக்கும் போது பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குறிப்பான விடயத்தை அறிந்து கற்பித்தல்

எந்த விடயம் மாணவருக்கு புரியவில்லையென்பதை அறிந்த பின்னர் அந்த விடயத்தை மீளக் கற்பித்தல்.

கணினி உதவியுடன் கற்பித்தல்

மாணவர்களுக்கு கணினி உதவியுடன் (படங்கள், ஒலிகள் என்பவற்றைப் பயன்படுத்தி)கற்பிக்கும் போது அவர்களுக்கு பாடத்தைப் பற்றிய விளக்கம் பூரணமாகக் கிடைக்கும்.

பயிற்சியளித்தல்

மாணவருக்கு விளங்காதவற்றைக் மீளக் கறபித்த பின்னர் அந்த விடயத்தில் பல்வேறு பயிற்சிகளை அளிப்பதன் மூலம் அவர்கள் கற்றவற்றறை நினைவில் வைத்திருக்க உதவ முடியும்.

**பரிகாரக் கற்பித்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய மாணவரை இனங்காணும் முறைகள்**

அ. வகுப்பறை இடைவினை:

மாணவர் வினாக்கள் வினவப்படும் போது அடிக்கடி தவறான விடையளித்தல். மாணவர் குழப்பத்துடன் காணப்படல், முழு வகுப்புக்கும் வினவப்படும் வினாக்களுக்கு விடையளிக்காதிருத்தல்

ஆ. வீட்டு வேலைகள்:

வீட்டு வேலைகள் வழங்கப்படும் போது மாணவர் அவற்றுக்கு விடையளிக்காமல் வருதல், சிலவேளைகளில் எளிதில் இனங்காணத்தக்க வகையில் மற்றையவர்களுடைய விடைகளைப் பார்த்து எழுதிக் கொண்டு வருதல்.

இ. பாடப்பரீட்சைகள் மற்றும் தவணைப் பரீட்சைகள் போன்றவற்றில் மாணவரின் பெறுபேறுகள்

மிகவும் குறைவான புள்ளிகளைப் பெறுதல்

வினாக்களுக்கு விடையளிக்காதிருத்தல்

விடைத்தாளை வெறுமையாகக் கையளித்தல்

ஒரே விடயத்தை மீளமீள எழுதுதல்

ஈ. கல்விச் செயற்பாடுகள்

வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டாது ஒதுங்கியிருத்தல்

உ. எண்ணக்கருக்களைக் கற்றல்

குறிப்பிட்ட தலைப்புத் தொடர்பான எண்ணக்கருக்கள், வாய்ப்பாடுகள் என்பவற்றில் தெளிவற்றிருத்தல்

ஊ. கணித்தல் திறன்கள்

அடிப்படைக் கணிதச் செய்கைகளை தவறாகச் செய்தல்

தவறான செய்முறைகள்

எ. பிரசினம் தீர்த்தல்

மாணவருக்கு பிரசினம் தீர்த்தல் தொடர்பாக போதிய விளக்கம் இன்மை காணப்படல்

ஏ. அறிவின் பிரயோகம்

வெவ்வேறு நிலைகளில் கற்ற விடயங்களை பிரயோகிக்கத் தெரியாமல் இருத்தல்

**மாணவரில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு பின்வருவனவும் காரணங்களாக அமைய முடியும்**

அ. ஞாபகம் / நினைவாற்றல்

தகவல்களை விடயங்களை நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் குறைவு

ஆ. விளக்கம்

தான் வாசித்த விடயங்களைப் புரிந்துகொள்ளாமை

இ. முன்வைத்தல்

தனது கருத்துக்களை முன்வைப்பதில் இடர்படுதல்- போதுமான அளவு சொல்வளம் காணப்படாமை

ஈ. அறிவு இடைவெளி (Knowledge Gap)

போதிய வரவின்மை

பாடங்களில் கவனம் செலுத்தாமை

உ. பெற்றோரின் மனப்பாங்கு

பிள்ளைகளில் கூடியளவு எதிர்பார்ப்பு

ஊ. கற்றல் மொழி மூலம்

மொழியில் போதியளவு ஆற்றலின்மை

எ. பௌதிகக் காரணிகள்

பார்வை, கேட்டல் குறைபாடுகள்

வேறு நோய்கள்

ஏ. தனிநபர்க் காரணிகள்

வாய்மொழி மூலப் பரீட்சைகளில் மட்டும் விடையளித்தல்

கவனம் செலுத்த முடியாமை

சுயநம்பிக்கையின்மை

தாழ்வு மனப்பான்மை

மன உறுதியின்மை

**8. முடிவு**

உலகலாவிய ரீதியில் பல்வேறு நாடுகளில் பரிகாரக் கற்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இம்முறையைப் பயன்படுத்துவதால் கற்றலில் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் மாணவர்களின் இடர்பாடுகளை களைந்து அவர்களின் தொடர்ச்சியான கற்றலுக்கு உதவ முடியும்.

பரிகாரக் கற்பித்தல் முறையை அபிவிருத்தியடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளான இலங்கை, இந்தியா போன்ற நாடுகளும் பயன்படுத்துகின்றன.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்த்தங்களாக நிலவிய கொடிய போரினால் நாடளாவிய ரீதியில் மாணவர்கள் கற்றலில் பல்வேறு விடயங்களை இழந்தனர். இக்காலங்களில் யுனிசெப் *(UNICEF)* ஆனது தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பரிகாரக் கற்பித்தல் பயிற்சிகளை ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கு வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் கூட பல்வேறு காரணங்களால் இலங்கையில் சிறுவர்கள் தமது கற்றலில் சில பகுதிகளை இழப்பதால் அவர்களை வழமையான கற்றலில் ஈடுபடச் செய்வதற்காக பரிகாரக் கற்றல் முறையைக் கையாள முடியும்.

**உசாத்துணைகள்**

*Brown, A.L., 1994. The advancement of learning. Educational researcher, 23(8), pp.4-12.*

*Newman, M. A. (1977a). An analysis of sixth-grade pupils' errors on written mathematical tasks. In M. A. Clements & J. Foyster (Eds.), Research in mathematics education in Australia, 1977 (Vol. 2, pp. 269-287). Melbourne: Swinburne College Press.*

*Shulman, L., 1987. Knowledge and teaching: Foundations of the new reform. Harvard educational review, 57(1), pp.1-23.*

# வடமாகாணம் : யுத்தம் - கல்வி - மாணவர்கள் - பொதுப்பரீட்சைகள் ஓர் ஆய்வு நோக்கு

* ஆ.நித்திலவர்ணன்

## 1.0 ஆய்வுப்பின்னணி

யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைகளான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலை காணப்படுகின்றது. அண்மைக்கால வடமாகாணத்தின் பொதுப்பரீட்சை பெறுபேறுகளை தேசியமட்ட பெறுபேறுகளுடனும், ஏனைய மாகாணப்பெறுபேறுகளுடனும் ஒப்பிடும்போது வடமாகாணம் பின்தங்கிய நிலையில் உள்ளதனை அவதானிக்கலாம். மாவட்ட ரீதியாகவும் மற்றும் கல்விவலய ரீதியாகவும் நோக்குகின்றபோதும் வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் மற்றும் கல்வி வலயங்கள் பின்தங்கி இருப்பதனை அவதானிக்கலாம்.

## 2.0 ஆய்வுக்கான நியாயப்பாடு

இலங்கையின் மொத்ததேசிய உற்பத்திக்கு, வடமாகாணம் அதிகளவில் பங்களிப்புச்செய்யும் துறையாக சேவைத்துறை *(service sector)* காணப்படுகின்றது. இதற்கு காரணம் வடமாகாண மக்களின் அதிகரித்த கல்வியறிவு மட்டமாகும். துரதிஸ்டவசமாக அண்மைக்காலமாக வடமாகாணத்தின் பொதுக்கல்வி அடைவுகள் திருப்திகரமானநிலையில் அமையப்பெறவில்லை. இது நீண்டநாளைய நோக்கில் பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது.

கடுமையான யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில்கூட உயர்ந்தநிலையில் காணப்பட்ட வடமாகாணத்தின் பொதுக்கல்வி அடைவுகள் என்றுமில்லாதவாறு வீழ்ச்சிநிலையில் உள்ளமை தொடர்பான கவலையை கல்விச்சமூகத்தினர், கல்விசார் தொழிற் சங்கங்கள், அரசியல்வாதிகள், ஊடகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வெளியிட்டு வருகின்றனர்.

உதாரணமாக "ஆறுதல்" என்ற தன்னார்வுத்தொண்டு நிறுவனம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பிரதேசங்களில் பொதுக்கல்வி அடைவுவீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறியும் நோக்குடன் ஆய்வுக்கட்டுரைப்போட்டியொன்றை அண்மையில் பத்திரிகைகள்வாயிலாக அறிவித்திருந்தது.

அதேபோன்று அகில இலங்கை இந்துமாமன்றமும் தமிழர் பிரதேசங்களில், பொதுக்கல்வியில் எதிர்நோக்கப்படும் சமகால சவால்கள் தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலை ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து, பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டிய தேவைப்பாடு வடமாகாண கல்விச் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் எழுகின்றது.

**3.0 ஆய்வு நோக்கங்கள்**

இவ்வாய்வானது பின்வரும் ஆய்வு நோக்கங்களைக்கொண்டது.

*1.* யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைகளான,

- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை,
- க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும்
- க.பொ.த உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்கினை இனங்காணல்.

*2.* அண்மைய ஆண்டுகளில் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலை ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிதல்.

*3.* வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன்வைத்தல்.

**4.0 ஆய்வு முறையியல்**

அளவறி ரீதியான *(Quantitative)* மற்றும் பண்பறி ரீதியான *(Qualitative)* ஆய்வு முறையியல்கள் இரண்டும் கலந்து இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள், இலங்கைப் பரீட்சைத்திணைக்களப் புள்ளிவிபரங்கள் மற்றும் வடமாகாண கல்வி முகாமைத்துவ தரவுத்தொகுதியின் *(Education Management Information System – EMIS)* புள்ளிவிபரங்களில் இருந்தும் மற்றும் இலக்கிய மீளாய்வுகளில் இருந்தும் பெறப்பட்டது. முதனிலைத்தரவுகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியியலாளரகள் மற்றும பெற்றோர்களுடனான கலந்துரையாடல், வகுப்பறைத்தரிசிப்பு என்பவற்றின் மூலம் பெறப்பட்டது.

**5.0 இலக்கியமீளாய்வு** (Literature Review)

- *2014 ஆம் ஆண்டு, வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் "வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு" (Northern Education System Review) என்ற ஆய்வு* மேற்கொள்ளப்பட்டு ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. அதிலிருந்து

இவ்வாய்வுடன் தொடர்புபட்ட விடயங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி அராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் *(National Education Research and Evaluation Centre-NEREC)* தரம்-4 மற்றும் தரம்-8 மாணவர்களிடையே தேசியரீதியில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் பகுப்பாய்வு அறிக்கைகள்.


## 6.0 தரவு அளிக்கையும் தரவுப்பகுப்பாய்வும்

### 6.1 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்

*அட்டவணை-1:* கடந்த ஐந்தாண்டுகளில் *(2011-2015)* மாகாணரீதியாக வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதம்

| மாகாணம் | கடந்த ஐந்தாண்டுகளில் வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்றுக்கொண்ட மாணவர் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மேல் மாகாணம் | 10.89 | 11.21 | 9.97 | 10.18 | 9.86 |
| மத்திய மாகாணம் | 7.34 | 7.75 | 6.82 | 6.91 | 6.59 |
| தென் மாகாணம் | 11.03 | 11.76 | 11.67 | 11.36 | 10.42 |
| வட மாகாணம் | 9.62 | 9.46 | 11.02 | 11.00 | 11.38 |
| கிழக்கு மாகாணம் | 10.32 | 10.41 | 9.66 | 8.52 | 7.99 |
| வடமேல் மாகாணம் | 11.62 | 12.15 | 11.30 | 11.37 | 10.51 |
| வடமத்திய மாகாணம் | 10.24 | 11.05 | 10.18 | 9.72 | 9.69 |
| ஊவா மாகாணம் | 10.30 | 10.54 | 10.05 | 9.14 | 9.72 |
| சப்பிரகமுவா மாகாணம் | 11.57 | 11.81 | 11.55 | 11.84 | 10.64 |
| இலங்கை | 10.38 | 10.76 | 10.12 | 9.99 | 9.55 |

(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)




- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், கடந்த மூன்றாண்டுகளில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதமானது, ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடமாகாணப்பெறுபேறுகள் திருப்திகரமான நிலையிலுள்ளன.
- *2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், 70 புள்ளிகளுக்குமேல் பெற்றுக்கொண்ட (அதாவது இரண்டு வினாத்தாளிலும் 35 புள்ளிகளுக்குமேல்) மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் மாகாணங்களை வரிசைப்படுத்துகின்றபோது, வடமாகாணம் 8 ஆம் வரிசைநிலையில் உள்ளது.*
- வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசிய ரீதியாக பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. (அட்டவணை-2)

அட்டவணை-2: 2014 ___ 2015 வரையிலான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், 70 புள்ளிகளுக்குமேல் பெற்றுக்கொண்ட (ஒவ்வொரு வினாத்தாளிலும் 35 புள்ளிகளுக்குமேல்) வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசியரீதியாக பெறும் வரிசைநிலை.

| வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் | வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசியரீதியாக பெறும் வரிசைநிலை | |
|---|---|---|
| | 2014 | 2015 |
| யாழ்ப்பாணம் | 18 | 17 |
| வவுனியா | 19 | 18 |
| மன்னார் | 21 | 20 |
| முல்லைத்தீவு | 23 | 22 |
| கிளிநொச்சி | 24 | 23 |

(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசியரீதியாக 107 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச்சேர்ந்த 08 பாடசாலைகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன. (அட்டவணை-3)

அட்டவணை-3: 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்

| தேசிய ரீதியானவரிசை நிலை | தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 6 | யா/சென்.யோண் பொஸ்கோ | யாழ்ப்பாணம் |
| 11 | யா/ யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 11 | யா/ வடமராட்சி இந்து ஆரம்பப்பாடசாலை | வடமராட்சி |
| 11 | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு |
| 35 | யா/கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 35 | வ/புதுக்குளம் ஆரம்பப்பாடசாலை | வவுனியா வடக்கு |
| 54 | யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை | வடமராட்சி |
| 54 | யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் | வடமராட்சி |

*(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)*

## 6.2 க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்

### க.பொ.த சாதாரண தரப்பரீட்சை 2009 - 2015


*அட்டவணை-4: கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த உயர்தரம் கற்க தகைமை பெற்ற மாணவர் சதவீதம்*


மாகாணம் கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த உயர்தரம் கற்க தகைமை பெற்ற மாணவர் சதவீதம்

*அட்டவணை-5: 2013 - 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை யில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமைபெறுதலின் அடிப்படையில், வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் பெறும் வரிசைநிலை*

| மாகாணம் | கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த உயர்தரம் கற்க தகைமை பெற்ற மாணவர் சதவீதம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மேல் மாகாணம் | 60.93 | 67.30 | 66.56 | 69.03 | 69.4 | 71.96 | 72.67 |
| மத்திய மாகாணம் | 48.46 | 56.51 | 57.59 | 61.49 | 63.5 | 65.96 | 66.98 |
| தென் மாகாணம் | 53.08 | 60.33 | 62.86 | 66.30 | 67.05 | 73.08 | 75.21 |
| **வட மாகாணம்** | **55.71** | **56.93** | **54.26** | **59.99** | **65.33** | **64.19** | **60.38** |
| கிழக்கு மாகாணம் | 47.46 | 59.41 | 56.38 | 62.20 | 65.43 | 66.71 | 63.54 |
| வடமேல் மாகாணம் | 53.51 | 62.72 | 62.68 | 66.81 | 68.92 | 70.42 | 69.66 |
| வடமத்திய மாகாணம் | 42.54 | 54.80 | 56.09 | 60.40 | 63.06 | 65.25 | 66.61 |
| ஊவா மாகாணம் | 43.80 | 52.57 | 54.45 | 59.63 | 63.43 | 64.82 | 65.85 |
| சப்பிரகமுவா மாகாணம் | 50.33 | 59.40 | 60.44 | 64.3 | 66.60 | 68.26 | 69.97 |
| **இலங்கை** | **52.51** | **60.57** | **60.80** | **64.74** | **66.67** | **69.02** | |

(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)


க.பொத (சாதாரண தரப்) பரீட்சை - 2009 - 2015
80
70
60
50
40
30
20
10
0
2009
2010
2011
2012
2013
2014
2015
Southern
Western
Uva
Eastern
Northern,


Performance of School Candidates (1st Attempt) by Province
80.00
75.00
70.00
65.00
60.00
55.00
50.00
2010
2011
2012
2013
2014
2015
Western
Central
Southern
Northern
Eastern
North Western
North Central
Uva
Sabaragamuwa

- *2013 - 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமைபெறுவோரில் வடமாகாணம் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. (அட்டவணை-5)*
- *2013 - 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமைபெறுதலின் அடிப்படையில், வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. (அட்டவணை-5)*

| வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் | கடந்த மூன்றாண்டுகளில் தேசியரீதியாக பெறும் வரிசைநிலை | | |
|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 |
| மன்னார் | 4 | 2 | 10 |
| வவுனியா | 3 | 7 | 16 |
| யாழ்ப்பாணம் | 8 | 20 | 21 |
| முல்லைத்தீவு | 24 | 24 | 24 |
| கிளிநொச்சி | 25 | 25 | 25 |
| வடமாகாணம் | 6 | 9 | 9 |

(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)

- *2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசியரீதியில் முதல் ஒன்பது இடங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எந்தவொரு மாவட்டமும் இடம்பெறவில்லை.*

## 6.3 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்

- *2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சையில் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.*
- *பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப்ரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.*
- *பாடத்துறைரீதியாகவும் வடமாகாணம் முன்னணியிலுள்ளது. (அட்டவணை-6)*

*அட்டவணை-6: பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப்ரீட்சார்த்திகளின்*

பெறுபேறுகளின் அடிப்படையிலும் வடமாகாணம் பெற்றுக்கொள்ளும் வரிசை நிலை.

| பாடத்துறை | பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாணம் பெற்றுக்கொள்ளும் வரிசை நிலை | பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாணம் பெற்றுக்கொள்ளும் வரிசை நிலை |
|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானம் | 2 | 2 |
| பௌதீக விஞ்ஞானம் | 1 | 2 |
| வர்த்தகம் | 4 | 5 |
| கலை | 3 | 4 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 1 | 1 |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் | 5 | 5 |
| ஏனையவை | 2 | 6 |

*(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)*

*2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக 53 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 09 பாடசாலைகள் இடம்பெற்றிருந்தன. (அட்டவணை-7)*

*அட்டவணை-7: 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்*

| | | |
|---|---|---|
| தேசிய ரீதியான வரிசை நிலை | 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
| 3 | யா/சென்.யோண்ஸ் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 3 | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | வடமராட்சி |
| 6 | யா/காட்லிக்கல்லூரி | வடமராட்சி |
| 9 | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை | வடமராட்சி |
| 14 | யா/ யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 19 | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 26 | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 45 | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி | வடமராட்சி |
| 46 | யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | வடமராட்சி |

(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)

- *2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத (ழேெ ளுஉநைஉந ளுரடிதநஉவள) பாடங்களில் தேசியரீதியாக 55 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 03 பாடசாலைகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன. (அட்டவணை-8)*

*அட்டவணை-8: 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத பாடங்களில தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் தேசிய ரீதியானவரிசை நிலை 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத பாடங்களில தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் கல்வி வலயம்*

| தேசிய ரீதியான வரிசை நிலை | 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத (Non Science Subjects) பாடங்களில தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 39 | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 40 | யா/சென்.யேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 41 | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் |

(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம் - 2015)

## 7.0 பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலைக்கான காரணங்கள்

1. நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும்
2. வட மாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்
3. மாணவர்கள் தொடர்பான காரணிகள்
4. ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்
5. பாடசாலை தொடர்பான காரணிகள்
6. கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்
7. குடும்பம் தொடர்பான காரணிகள்
8. சமூகம் தொடர்பான காரணிகள்
9. அரசியல் மற்றும் திட்டமிட்ட புறக்கணிப்பு

### 7.1 நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திவரும் பாதிப்புக்களும்

நீண்டகால உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திவரும் பாதிப்புக்கள் என்பன பாடசாலைக்கல்வியில் நேரடித்தாக்கங்களை விளைவித்துள்ளது. கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை பாதிப்படையச்செய்துள்ளது. மாணவரின் கல்வி அடைவுகளில் பெருஞ்செல்வாக்கினை செலுத்தியுள்ளது.

- இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டக்காலப் பகுதியில் நிவாரணக்கிராமங்களில் இருந்த 85,000 மாணவர்களில் யுனிசெவ் மேற்கொண்ட ஆய்வில் 70,000 மாணவர்கள் 1.5 தொடக்கம்

3 வருடங்கள் வரையில் தமது கற்றல் செயற்பாடுகளை முற்றாக இழந்திருக்கின்றார்கள் (குருகுலராஜா, 2014). பிற்காலப்பகுதியில் அவர்களுக்கான துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டபோதும் அவர்கள் அடிப்படை மொழித்திறன் மற்றும் கணிதத்திறன் அறிவு குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.

- உள்நாட்டுயுத்தம் காரணமாக இலங்கையின் வடக்குமாகாணத்தில் எற்கனவே காணப்பட்ட, மக்களின் பொருளாதார மூலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. உயிரிழப்புப்புக்கள், உடமை இழப்புக்கள் மற்றும் அங்கவீனங்கள் காரணமாக குடும்பங்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தலைவர்கள் காணமல்போனமை அல்லது நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால், வடக்கில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.
- யுத்தத்திற்குப்பின்னர் மீள்கட்டமைப்புச்செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றபோதும், மக்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவில் மேம்படவில்லை. மாகாணத்தின் வறுமை, கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து செல்கின்றபோதும், இன்னும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. நகரம், கிராமங்களிடையில் வறுமையின்பரம்பல் இன்றும் சமனற்றுக்காணப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி 2015 ஆம் ஆண்டில் வறுமை கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு பதிவாகியுள்ளது.
- யுத்தத்திற்கு முன்னர் வடக்கில் இயங்கிவந்த பாரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் மீளஇயங்க ஆரம்பிக்கவில்லை. விவசாயத்திற்கேற்ற வழமான மண்ணைக்கொண்ட பிரதேசங்களில் மக்கள் விவசாயம்செய்ய இன்னும் அனுமதிக்கப்படவில்லை.
- யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் காரணமாக விசேட தேவையுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட வடக்கு மாகாணத்தில் அதிகமாக காணப்படுகின்றது. (அட்டவணை-9)

அட்டவணை-9: வடமாகாணத்திலுள்ள விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கையும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும்

| கல்வி வலயம் | விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கை | விசேட தேவையுடைய மாணவரகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|
| தீவகம் | 466 | 2 |
| யாழ்ப்பாணம் | 746 | 11 |
| கிளிநொச்சி | 842 | 12 |
| மடு | 278 | 8 |
| மன்னார் | 611 | 8 |
| முல்லைத்தீவு | 655 | 12 |
| தென்மராட்சி | 34 | 4 |
| துணுக்காய் | 298 | 10 |
| வடமராட்சி | 89 | 6 |
| வலிகாமம் | 1090 | 8 |
| வவுனியா வடக்கு | 204 | 5 |
| வவுனியா தெற்கு | 388 | 6 |
| வடமாகாணம் | 5701 | 92 |

(மூலம்: வடமாகாண கல்வித் திணைக்களம் -2012)

## 7.2 வட மாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்

*தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில், அதிக எண்ணிக்கையான வடமாகாண மாணவர்கள் 70 புள்ளிகளுக்குமேல் பெற்றுக்கொள்ளவில்லை. இதற்கான பிரதான காரணம் வட மாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகளாகும்.*

- *வடமாகாணத்திலுள்ள பல முன்பள்ளிகள் அடிப்படை வசதிகளற்று இயங்கிவருகின்றன.*
- *வன்னிப்பிரதேசத்திலுள்ள பல முன்பள்ளிகள், சிவில் பாதுகாப்புப்படையினரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றன.*
- *அடிப்படைக் கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை இல்லாத பலர் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றிக் கொண்டிருக் கின்றார்கள். (அட்டவணை-10)*

*அட்டவணை-10: வடமாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமையும் தொழில் தகைமையும்*

| வலயம் | முன்பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை | கல்வித் தகைமை | | | தொழில் தகைமை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | AL Pass | OL Pass | Without OL Pass | Aruthal | OUSL | Not Both |
| தீவகம் | 131 | 44 | 5 | 58 | 84 | 6 | 41 |
| யாழ்ப்பாணம் | 367 | 135 | 17 | 153 | 227 | 26 | 114 |
| கிளிநொச்சி | 450 | 72 | 32 | 198 | 392 | 6 | 52 |
| மடு | 85 | 35 | 3 | 40 | 78 | 0 | 7 |
| மன்னார் | 175 | 99 | 0 | 38 | 147 | 5 | 23 |
| முல்லைத்தீவு | 213 | 39 | 11 | 117 | 199 | 2 | 12 |
| தென்மராட்சி | 131 | 53 | 1 | 59 | 92 | 0 | 39 |
| துனுக்காய் | 156 | 28 | 11 | 115 | 144 | 6 | 6 |
| வடமராட்சி | 274 | 96 | 7 | 58 | 172 | 1 | 101 |
| வலிகாமம் | 362 | 158 | 15 | 85 | 273 | 6 | 83 |
| வவுனியா வடக்கு | 85 | 20 | 4 | 58 | 76 | 1 | 8 |
| வவுனியா தெற்கு | 251 | 82 | 27 | 99 | 187 | 6 | 58 |
| வடமாகாணம் | 2680 | 861 | 133 | 1078 | 2071 | 65 | 544 |

### 7.3 மாணவர்கள் தொடர்பான காரணிகள்

- கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் (யேவழையெட நுனரஉயவழைெ சுநளநயசஉா யனெ நுஎயடரயவழைெ ஊநவெசந-நேசுநுஊ) தரம்-8 மாணவர்களிடையே 2012 ஆம் ஆண்டு தேசியரீதியில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் வடமாகாணம் கணித பாடத்தில் 6 ஆம் நிலையையும், ஆங்கில பாடத்தில் 7 ஆம் நிலையையும், விஞ்ஞான பாடத்தில் 8ஆம் நிலையையும் பெற்றிருந்தது. 2012 ஆம் ஆண்டு தரம்-8 இல் இருந்த மாணவர்களே 2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப்பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இதில் வடமாகாணம் ஒன்பதாம் நிலையைப் பெற்றுள்ளது. இதிலிருந்து பெறுபேற்று வீழ்ச்சிக்கு, மாணவர்கள் சார்பான காரணிகள் அதிகளவில் செல்வாக்குச்செலுத்துவதை அவதானிக்கலாம்.
- அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு அற்ற மாணவர்கள் வடமாகாணப் பாடசாலை வகுப்பறைகளில் கணிசமானளவில் காணப்படுகின்றனர்.
- மாறிவரும் புறச்சூழலில், மாணவர்களின் கற்றல் மீதான ஆர்வம் குறைவடைந்து செல்கின்றது.
- மாணவர்களின் பாடசாலை வரவு, குறிப்பாக மெல்லக்கற்கும் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்படுகின்றது.

- தற்கால மாணவர்கள் மத்தியில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனை அதிகரித்துக்காணப்படுதல்.
- மாணவர்கள் மத்தியில் அதிகரித்துச்செல்லும் ஒழுக்கமின்மை, குழுமோதல்கள் மற்றும் துர்நடத்தைகள்.

**மாணவர்களின் பாடத் தெரிவுகளில் ஏற்படும் தவறுகள்**

பாடத் தெரிவு எனப்படும் போது, அழகியல் பாடங்களின் தெரிவு, தொழில் நுட்பப் பாடங்களின் தெரிவு மற்றும் விருப்புக்குரிய பாடங்களின் தெரிவு என்பவை இடைநிலை வகுப்புக்களில் முக்கியம் பெறுகின்றன. இப்பாடத் தெரிவுகளின்போது மாணவனின் விருப்பு, ஆற்றல், குடும்பப்பின்னணி என்பவற்றுக்கு அமைவாக வழிகாட்ட வேண்டும். துரதிஷ்டவசமாக சிலசமயங்களில் பாடசாலைக் கற்பித்தல்வளஆளணி மற்றும் பௌதிக காரணிகள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புகளும் செல்வாக்கு செலுத்தி விடுகின்றன.

ஆரம்ப காலந்தொட்டு க.பொ.த உயர்தர பாடத்தெரிவுகளில் பிழையான தெரிவுகளும் இடம்பெற்று வருகின்றன. இதனால் பரீட்சையில் தோல்வி அடைந்தபின் பாடத்துறை மாறுவோரும் உண்டு. மூன்று தடவையும் ஒரே பாடத்துறையில் தோற்றி சித்தியடையத் தவறி க.பொ.த உயர்தர தகைமையின்றி அல்லறப்படுவோரும் உண்டு. தற்காலத்தில் க.பொ.த(சா.த) சித்தியடைந்து உயர்தரம் நுழையும் மாணவர்களுக்குப் பாடத்தெரிவுகள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. இருந்தும் பிழையான தெரிவுகள் இடம்பெற்று விடுகின்றன

## 7.4 ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்

- அதிகஸ்ட மற்றும் கஸ்ட பிரதேசங்களிலுள்ள சில ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் முறையாகப்பயிற்றப்படாத ஆசிரியர்கள் அதாவது ஏனைய பாட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள் ஆகியோர் பிரதான பாடங்களை கற்பிக்கும் சூழல் காணப்படுகின்றது.
- கணிசமான எண்ணிக்கையான ஆசிரியர்களுக்கு நவீன கற்றல கற்பித்தல் முறைகள் பற்றிய பரீட்சயமின்மை காணப்படுவதுடன், அவை தொடர்பான பயிற்சி வாய்ப்புக்களும் குறைவாகக் காணப்படுகின்றது.
- காலத்திற்கேற்ப ஆசிரியர் கல்வி கலைத்திட்டங்கள் மாற்றியமைக்கப்படுவதில்லை. மற்றும் நவீன பயிற்சி முறைகள் என்பன ஆசிரியர் கல்வி நிறுவனங்களால் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.
- யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்திலிருந்த கல்வி இன்று கீழ் நிலையில் இருப்பதற்கு ஆசிரியர்கள் வகுப்பறையில் இல்லாமையே காரணம் என வடக்கு மாகாண ஆளுனர் சுட்டிக்காட்டியுள்ளார். (உதயன், 11-04-2016) இவர் முன்னர் ஆசிரியராகப்பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவர் மேலும் குறிப்பிடும்போது உலகளாவியரீதியில் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆனால் இலங்கையில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கின்றார் எனவும் இலங்கையில் ஆசிரியர்களுக்காக பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

கல்விநிலை பரிதாப நிலையில் இருப்பதற்கு, ஆசிரியர்கள் நீண்ட விடுமுறைகளை எடுப்பது மற்றும் வெளிநாடுகளுக்கு செல்கின்றமை காரணமெனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

- தற்காலத்தில் ஆசிரியர்கள் மீதான பல்வேறு குற்றச்சாட்டுக்கள், பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன:
- இன்றைய ஆசிரியர்களில் சிலர், சம்பளத்திற்கு வேலைபார்க்கும் தொழிலாகத்தான் ஆசிரியத்தொழிலை கருதுகின்றனர்.
- பாடத்திட்டத்தில் சில ஆசிரியர்களுக்கு ஆர்வமற்ற, ஆழுமையற்ற சூழல், கற்பித்தல் முறையில் தெளிவின்மை, சில ஆசிரியர்கள் குறிப்பிட்ட மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்து, மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுவது, தன்னிடம் ரியூசன் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் நன்றாக சொல்லிக்கொடுப்பது, சீரற்ற பழக்கவழக்கங்களை மாணவர்கள் முன்பு செய்தல் போன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளால் மாணவ சமுதாயம் ஒழுக்க நடவடிக்கைகளை மீறுபவர்களாக உள்ளனர்.
- சமீப காலமாக ஊடகங்கள் வாயிலாக பார்க்கும்போது, ஒரு சில ஆசிரியர்களின் நடவடிக்கைகள் மாணவசமுதாயத்திலும், பெற்றோர்கள் மத்தியிலும் ஒருவித அச்ச உணர்வுகளை ஏற்படுத்துவதாகவும், ஆசிரியர்கள் மீதுள்ள நன்மதிப்பை குறைக்கும் விதமாகவும் உள்ளது. தற்கால சமூகம் தாழ்ந்து போனதற்கு ஆசிரியர் சமூகத்தில் ஏற்பட்ட தாழ்வும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

### 7.5 பாடசாலை தொடர்பான காரணிகள்

- வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் மனிதவளம் மற்றும் பௌதீகவளப்பரம்பல் சமனற்றுக் காணப்படுதல்.
- மாகாணப் பாடசாலைகளுக்கும் தேசிய பாடாலைகளுக்குமிடையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுதல்.
- சில பாடசாலைகள் சிறப்பான பௌதீகவள்ம் மற்றும் மனித வளங்களை கொண்டிருக்கும் அதேவேளை மாணவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. அயலிலுள்ள வேறுசில பாடசாலைகள் அளவுக்கதிகமாக மாணவர்களை உள்வாங்குகின்றன.
- சில பாடசாலை அதிபர்களின் வினைத்திறனற்ற நிர்வாகம்.

## 7.6 கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட பத்திரிகைச்செய்திக் குறிப்பில் (யாழ்.தினக்குரல், 02-04-2016) பின்வரும் கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள் இன்றைய கல்வி நிலை வீழ்ச்சிக்கு காரணமாக அமைவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

- முறையற்ற ஆசிரிய இடமாற்றங்கள்
- முறையற்ற அதிகாரிகளின் இடமாற்றங்கள்
- அரசியல் தலையீடுகள்
- கல்வியில் அநாவசியமான வெளியாரின் தலையீடுகள்
- அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சுயமான சிந்தனைக்கு ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகள்.
- தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சை வினாத்தாள்களுக்கு முரணான வகையில் சில பாடங்களின் வினாத்தாள்கள் வலய மட்டங்களிலும் மாகாண மட்டங்களிலும் தயாரிக்கப்படுதல்.
- மாகாண மட்டத்தில் பெரும் தொகையான பணம் செலவிடப்பட்டு நடைபெறும் கல்விச் செயலமர்வு மற்றும் முன்னோடிக் கருத்தரங்குகள் வினைத்திறனற்றதாக இடம்பெறுதல் போன்றன.

## 7.7 குடும்பம் தொடர்பான காரணிகள்

- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைவரை காட்டும் பெற்றோர் அக்கறை, இடைநிலைக்கல்வியில் தொடர்ந்து நீடிக்காமை
- வீட்டில் பிள்ளை படிப்பதற்கான சூழலின்மை
- தென்னிந்திய சினிமா, தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் மற்றும் கிரிக்கெட் போட்டி ஒளிபரப்புக்களுக்கு குடும்ப அங்கத்தவர்கள் அடிமையாகிப் போகின்றமை
- அதிகரித்துச்செல்லும் குடும்ப வன்முறைகளும் விவாகரத்துக்களும்
- பெற்றோர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களிடையே அதிகரித்துச் செல்லும் மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை

## 7.8 சமூகம் தொடர்பான காரணிகள்

- தற்காலத்தில் எமதுசமூகத்தில் கொலை, கொள்ளை மற்றும் குழுமோதல்கள் அதிகரித்துக்காணப்படுகின்றன. தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர்நாடகங்கள் இவற்றை ஊக்குவிக்கின்றன.
- பாலியல் துஸ்பிரயோகங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் இளவயதுத்திருமணங்கள் தொடர்பான செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளிவருகின்றன.

- இலங்கையின் போதைப்பொருள் இடமாற்று மையமாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்கள் விளங்குவது அனைவருக்கும் கவலைதரும் விடயமாகும்.
- பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்மத்திலும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துச் செல்கின்றன.
- முகநூல் போன்ற சமூகவலைத்தளங்களின் தவறானபாவனை காரணமாக அவைசார்ந்த குற்றங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.
- சமூகம் கேளிக்கைகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு காட்டும் அளவுக்கதிகமான அக்கறையை மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க மேம்பாட்டில் காட்டுவது குறைவாகவுள்ளது.
- பாடசாலை நேரங்களில் எத்தனை கோயில்களில் ஒலிபெருக்கிகள் அளவுக்கதிகமாக ஒலித்துக்கொண்டிருப்பதை நான் கேட்டிருக்கின்றேன்.

**7.9 அரசியல் மற்றும் இனரீதியான புறக்கணிப்புக்கள்**

- 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. எதிர்பார்க்கப்படும் வினாக்களின் தொகுப்பு தமிழ் மொழப்பதிப்பில் இடம்பெற்றிருக்கவில்லை. (ஞாயிறு தினக்குரல், 04 _ 08 _ 2014)
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தேசியரீதியாக சிங்கள மொழிமூலம் முதன்மைபெற்ற மாணவர் பெயர் விபரங்கள், பரீட்சைத்திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட அதேவேளை, தமிழ் மொழிமூலம் முதன்மை பெற்ற மாணவர் பெயர் விபரங்கள் அறிவிக்கப்படவில்லை. (இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம், 2015)
- வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன என்ற உண்மையை நாம் அனைவரும் உணர வேண்டும் என்பதோடு இன்னமும் வெளிப்படுத்த முடியாத அபாயகரமான நிலைமைகள் உள்ளன என்பதை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தது.

**8.0 வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகள்**

- ஏற்கனவே மாணவர்களின் பரீட்சைப்பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள், மாகாணக்கல்வித் திணைக்களத்தினாலும், வலயக்கல்வி அலுவலகங்களினாலும் மற்றும் பாடசாலைகளினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.
- எதிர்காலத்தில் அடைய உத்தேசிக்கும் இலக்குகளை குறிப்பிட்டு உறுதிப்பாட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன.

- மேலதிக வகுப்புக்கள், தரவட்டங்கள் மற்றும் விசேட செயற்றிட்டங்கள் என்பன நடை முறைப்படுத்தப்படுகின்றன.

**இவற்றிற்கு மேலதிகமாக சில முன்மொழிவுகளை நான் முன்வைக்க விரும்புகின்றேன்**


- ஆசிரியர்கள் தங்களுடைய ஆசிரியப்பணியை மிகவும் தியாக உணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், கடமை உணர்வுடனும் செய்ய வேண்டும்.
- சிறப்பான பணிபுரியும் ஆசிரிய சமூகத்திற்கு அனைவரும் மரியாதை செலுத்த வேண்டும். இன்றைக்கும் நேர்மையாக கல்விப்பணியைத் தொடரவிரும்பும் ஆசிரியர்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவேண்டும்.
- ஆரம்பப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் தமக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கு மாதத்தில் ஒரிரு நாட்கள் சென்று பிள்ளைகள் அடையவேண்டிய தேர்ச்சிகளை அடைந்திருக்கின்றார்களா என பரிசீலிப்பதுடன் அவர்களுக்கு ஒரிரு மணித்தியாலங்கள் கற்பித்தல்.
- மாணவர் முன்னேற்றம் தொடர்பாக பெற்றோருக்கு கல்வி வழங்கலில் பல பாடசாலைகள் வெற்றிகண்டுள்ளன. ஏனைய பாடசாலைகளும் இவற்றைப்பின்பற்ற வேண்டும்.
- இன்னமும் பல இடங்களில் பெயர், முகம் வெளிப்படாமல், தமது பணியை முடிந்தவரை சிறப்பாக செய்து வரும் ஆசிரியர்களை நாம் பாராட்ட வேண்டும்.
- பொருத்தமான கல்வி வழிகட்டல் *(Educational Guidance)* வழங்கல் பாடத் தெரிவுகள் , நூலகப் பயன்பாடு மற்றும் கற்றல் பழக்கங்கள் போன்ற விடயங்களில் துறைதேர்ந்தவர்கள் வழிகாட்டும் போது மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் கல்வியின்மீதான நாட்டமும் அதிகரித்துச் செல்லும். இதனமூலம் மாணவனது அடைவு மட்டமும் அதிகரித்துச்செல்லும்.
- ஏழாவது கற்றல் தேர்ச்சியான, கற்றலுக்காக கற்றல் *(Learn to learn)* என்ற தேர்ச்சி எவ்வளவு தூரம் மாணவர்களிடம் அடையப்படுகின்றது என்ற வினா என்னிடம் உண்டு.

எவ்வாறு இலகுவாகக்கற்பது? கற்பித்தலின்பால் எவ்வாறு அதியுச்ச கவனத்தை செலுத்துவது? கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின்போது சிறந்த புலக்காட்சியைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் எவை? கற்பவற்றை எவ்வாறு ஞாபகப்படுத்திக் கொள்வது? நேரான கற்றல் இடமாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்திக்கொள்வது? மற்றும் பரீட்சைகளில் விடை எழுதும் முறைகள் என்பவை தொடர்பாக வகுப்பறைகளில் அதிகளவில் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

- கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 6/2013 இற்கு அமைவாக தற்போது பாடசாலைகளில் "பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்" முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைத்திட்டங்களில் மாணவர்களின் உளநலன் மேம்பாடு மட்டுமன்றி ஆசிரியர்களின் உளநலன் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன்மூலம் ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் உச்ச அளவு வினைத்திறனைப்பெற்றுக்கொள்ள முடியும்.
- இவ்வாறான வலயமட்ட மாநாடுகள் மற்றும் கருத்தரங்கள் மூலம் வலயமட்ட கல்விப்பிரச்சினைகள் கலந்துரையாடப்பட வேண்டும். மாணவர் அனுமதி, வளப்பங்கீடு, ஆசிரியர் இடமாற்றங்கள் போன்ற விடயங்களில் அனைவரும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.
- மாகாணக் கல்வித்திணைக்களத்திலும், வலயக்கல்வி அலுவலகங்களிலும் வினா வங்கிகள் *(Question Bank)* உருவாக்கப்பட்டு, தேர்ச்சிமிக்க ஆசிரியர் குழாத்தினால் மாகாணமட்ட மற்றும் வலயமட்ட வினாத்தாள்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
- க.பொ.த உயர்தர தவணைப்பரீட்சை வினாத்தாள்கள் மாகாணக் கல்வித்திணைக்களத்தின் கண்காணிப்பில் இயங்கும் நிபுணத்துவமிக்க ஆசிரியர் குழாம் ஒன்றினால் தயாரிக்கப்பட வேண்டும்.
- கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் தொழிற்சங்கங்கள் தம்மிடையேயான முரண்பாடுகளை களைந்து, ஒன்றாக இணைந்து வடமாகாண கல்விசார் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

**முடிவுரை**

இலங்கையில் நடைபெற்ற நீண்ட உள்நாட்டு யுத்தத்தில் அதிகளவில் பாதிப்பிற்குள்ளானது எமது வடக்கு மாகாணமாகும். இதனால் எமது பாரம்பரியச்சொத்தான கல்வியில் பல பின்னடைவுகளைச்சந்திக்க நேர்ந்துள்ளது. அண்மைக்கால பொதுப்பரீட்சை அடைவு வீழ்ச்சிகள் அதற்கு கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன. இந்த யதார்த்த நிலையை கல்விசார் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டு காலத்தைப் போக்காது, வடமாகாண கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளில் ஒற்றுமையாக ஈடுபடுவோம். கல்விப்புரட்சி ஒன்றுக்கு தயாராவோம். பீனிக்ஸ் பறவைகளாக மீண்டும் எழுவோம். நாளை நமதே.




[illegible] 5: கற்பித்தல் கற்றல் உபாயத்தின்மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட கற்பித்தல் கற்றல் முறையியல்கள் மாதிரிகைகளின் வரைபடம்.

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு




**விலை 460.00**

## CHEMAMADU BOOK CENTRE

**U.G.50, People's Park, Colombo -11**
**Tel: 011-2472362, Fax:011-2448624**
**E=Mail:chemamadu@yahoo.com**
**Website:www.chemamadu.com**

All Types of Stationery

CHEMAMADU BOOK CENTRE

IMPORTERS OFFICE/ SCHOOL STATIONARY





UG.50 PEOPLE'S PARK, COLOMBO -11
TEL: 011-2472362, 2321905, FAX:011-2448624
E-MAIL:chemamadu@yahoo.com
WEB:chemamadu.com
MOB:077-7279983, 077-3147442, 077-8323561